

# அருணசல மகிமை

## பாகம் - 2

A.No. 16139
Ql:38




**பரணீதரன்**



ஸ்ரீ வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்

**கோ**வை மாவட்டத்தில், பவானியை அடுத்து, மேட்டூருக்குச் செல்லும் பாதையில் பூநாச்சிபுதூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு நூறு ஆண்டுகளுக்கு முன், சிதம்பர ஐயர் என்பவர் மணியமாகப் பணியாற்றி வந்தார். வேத சாஸ்திரங்களை முறைப்படி பயின்று, குலத்துக்குரிய நெறியோடு வாழ்ந்து வந்தார். அவருடைய பாட்டனாரான கணபதி சாஸ்திரிகள், அறுபது வயதில் இல்லறத்தைத் துறந்து, துறவியாகி, கால் நடையாகவே காசிக்குச் சென்று, கங்கையில் ஜீவ சமாதி அடைந்தார். இன்றும் காசியில் 'கணபதி சுவாமிகள்' பலருக்குத் தரிசனம் தருவதாகக் கூறுகிறார்கள்.

சிதம்பர ஐயரின் மனைவி பார்வதி இறந்துவிடவே, மகாலட்சுமி என்ற உத்தமியை இரண்டாந்தாரமாக அவர் திருமணம் செய்து கொண்டார். எல்லாச் செல்வங்களும் பெற்று, மனம் ஒன்றிக் குடித்தனம் நடத்தி வந்த அத் தம்பதிக்கு, குழந்தைச் செல்வம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. மகாலட்சுமி அம்மாள் வேண்டாத தெய்வமில்லை; நோற்காத நோன்புகள் இல்லை.



ஒரு நாள் மகாலட்சுமி, தோசைக்கு மாவு அரைத்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அங்கு தோன்றிய கருநாகம் ஒன்று அவளருகில் வந்து, படம் எடுத்து ஆடியது. அருகிலுள்ள 'நாககிரி' என்னும் திருச்செங்கோடுக்கு வரும்படி அது அழைப்பது போல் அந்த அம்மாளுக்குத் தோன்றவே, பன்னிரண்டு அமாவாசைகள் அங்கு சென்று சுவாமி தரிசனம் செய்வதாகப் பிரார்த்தனை செய்து கொண்டு கற்பூரம் காட்டினாள். அந்த நாகம், சாதுவாகத் திரும்பிச் சென்று விட்டது.

அருணகிரிநாதர் தமது திருப்புகழிலும், கந்தர் அலங்காரத்திலும், கந்தர் அனுபூதியிலும் திருச்செங்கோட்டு மலையைப் பற்றியும் அங்கு உறையும் 'நாகாசல வேலவ'னைப் பற்றியும் பெருமையோடு பேசுகிறார். 'செங்கோடனைச் சென்று தொழ நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்றும், 'தெய்வத் திருமலை' என்றும் திருச்செங்கோட்டை ஏற்றிப் போற்றுகிறார். சிதம்பர ஐயரும் மகாலட்சுமியும் தாங்கள் பிரார்த்தித்துக் கொண்டபடி பன்னிரண்டு அமாவாசைத் திருநாட்களில் தவறாமல் திருச்செங்கோடு சென்று, அர்த்தநாரீச்வரரையும், கந்தனையும் தொழுது வந்தார்கள். அதன் பலனாகப் பிறந்த பெண்ணுக்கு நாகம்மாள் என்றும், நான்கு ஆண்டுகள் கழித்துப் பிறந்த ஆண் மகவுக்கு அர்த்தநாரி என்றும் பெயரிட்டனர். அர்த்தநாரிதான், பின்னர் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வள்ளிமலையில் குடியேறி, அருணகிரியாரின் திருப்புகழ் அமுதத்தை வையகத்திற்கு வாரி வாரி வழங்கினார்.

1870-ம் ஆண்டு ஜனவரியில் சேஷாத்ரி சுவாமிகள் அவதரித்தார். அவரிடம் மந்திரோபதேசம் பெற்று, சீடரான வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் அதே 1870-ம் ஆண்டு நவம்பரில் அவதரித்தார்.

அர்த்தநாரிக்கு ஐந்து வயது நிரம்பிய போது, சிதம்பர ஐயர் திடீரென்று காலமானார். திக்கற்றவளாய்ப் போன மகாலட்சுமி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு, ஈரோட்டில் ஓட்டல் வைத்திருந்த தன் தமையனான கங்காதர ஐயரின் வீட்டுக்குச் சென்றாள். அங்கு தந்தையின் திதியை முறைப்படி செய்வதற்காக அர்த்தநாரிக்கு உபநயனம் செய்வித்தார்கள். ஏழாவது வயதில், கலைவாணியின் அருளுடன், பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள்.

அர்த்தநாரிக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. வகுப்புப் பிள்ளைகளுடன் விளையாடுவதிலும், விஷமச் சேட்டைகள் புரிவதிலும்தான் நேரத்தைக் கடத்தினார். அர்த்தநாரியின் அன்றாட லீலைகளைப் பற்றிக் கங்காதர ஐயருக்கு ஆயிரம் புகார்கள் வந்தன. கண்டித்துப் பார்த்தார். மிரட்டினார். காதைத் திருகினார். 'பூசை'யும் போட்டார். பிள்ளை திருந்துவதற்கான அறிகுறியே காணோம்.

ஒரு நாள் விளையாட்டு வினையாகிவிட்டது. தன் வயதுள்ள சிறுவன் ஒருவனை காளிங்கராயன் வாய்க்காலில் பிடித்துத் தள்ளிவிட்டு, 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்று வீட்டுக்கு வந்து விட்டார் அர்த்தநாரி. காயம்பட்ட சிறுவனின் தந்தை, ஓட்டலில் இருந்த கங்காதர ஐயரிடம் வந்து, சத்தம் போட்டார்.

கங்காதர ஐயர் மறுநாளே தங்கையையும் 'அருமை'க் குழந்தையையும் கிராமத்திற்கே திருப்பி அனுப்பி விட்டார். உறவினர் கைவிட்டு விடலாம். ஆனால், பெற்றவள் அப்படிச் செய்வாளா? பிள்ளையைத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள் மகாலட்சுமி. பையன் பள்ளிக் கூடத்திற்குப் போய் வந்தானேயொழிய, விளையாட்டும் விஷமமும் அப்படியேதான் இருந்தன. இப்போது ஆசிரியர்களையே வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான். அவர்களைப் பற்றிக் கவிதைகள் கூட புனைய ஆரம்பித்தான்!

மாணக்கனின் குறும்புத்தனத்தைக் கண்டு கோபம் கொண்ட ஆசிரியர், கடுமையான தண்டனை கொடுத்தார். கைகால்கள் வீங்கும்படி கருணையின்றி அடித்தார். அர்த்தநாரிக்குப் பொங்கி வந்தது ஆத்திரம். பீறிட்டுக் கொண்டு புறப்பட்டது ஒரு கவிதை:

நெடுமால் திருமுருகா? நித்தம்
நித்தம் இந்த எழவா?
எழவெடுத்த வாத்தியார்
என்றைக்குச் சாவானோ?
களிப்புற்றிருப்பேனோ?
கணபதி காப்புத்தானே!

கல்விக்குத் தலை முழுகிவிட்டு களிப்புற்றிருப்பது என்று முடிவு செய்து விட்டார் அர்த்தாரி. அன்றோடு படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டார்.

படிப்பு வரவில்லையென்றாலும், பையனின் புத்திசாலித்தனத்திற்கும் சாமர்த்தியத்திற்கும் குறைவேயில்லை. சிறுவன் அர்த்தநாரி, நாடகங்களில் நடித்து நல்ல பெயர் வாங்கினார். நன்றாக அரட்டை அடிப்பார். நகைச்சுவையோடு பேசுவார். அவர் இருக்கும் இடத்தில் கலகலப்பிற்குக் குறைவில்லை. பெரிய மாமாவான அப்பு தீட்சிதருக்குப் பையனின் எதிர்காலத்தைப் பற்றி அபார நம்பிக்கையிருந்தது. தம் ஐந்து வயதுப் பெண் சுப்புலட்சுமியை அர்த்தநாரிக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

ஒன்பது வயது நிரம்பிய அர்த்தநாரிக்குக் குடும்பப் பொறுப்பு வந்து விட்டது! பிழைப்பைத் தேடி கால் நடையாகவே சென்றார். சத்தியமங்கலம், ஹாஸனூர் வழியாக மைசூர் வந்து சேர்ந்தார். அங்கு அவருடைய அத்தை பிள்ளைகளில் இருவர் இருந்தனர். அத்தான் குருசாமி ஐயர், அரண்மனையில் தலைமைச் சமையற்காரராகப் பணியாற்றி வந்தார். அவரது சகோதரர் ஸ்ரீகண்ட ஐயர் மிட்டாய்க்கடை வைத்திருந்தார். அவர்களுடைய சிபாரிசின் பேரில் அரண்மனை அந்தப்புரத்தில் சமையல் வேலைக்கு அமர்ந்தார் அர்த்தநாரி. ஒன்பது ரூபாய் சம்பளம். லீவு கிடைத்தபோதெல்லாம் கிராமத்திற்கு வந்து தாயைப் பார்த்து விட்டுப் போனார்.

ஆண்கள் பன்னிரண்டு வயதுக்கு மேல் அந்தப்புரத்தில் பணியாற்ற முடியாது. எனவே, அவரை அரண்மனைக்கு மாற்றினார்கள். அதிகாரிகளுடன் யாத்திரை செய்து சமைத்துப் போட வேண்டிய கடினமான

வேலையில் அமர்த்தப்பட்டார். காட்டுப் பிரதேசங்களிலும், திறந்தவெளியிலும், மழையிலும், வெயிலிலும் சமைத்துப் போடுவது என்பது எளிதான காரியமல்ல. இருப்பினும், தன் சாமர்த்தியத்தினல், நேரம் தவருமல் அதிகாரிகளுக்குப் பிடித்த சமையலைச் செய்து போட்டு, எல்லோரிடத்திலும் நல்ல பெயர் வாங்கினர் அர்த்தநாரி.

தொழில் செய்து கொண்டே, தேக வலிமையையும் பெருக்கிக் கொண்டார் அர்த்தநாரி. தேகப் பயிற்சிகள் செய்தார். சாமுண்டி மலையில் ஏறும் போது ஒவ்வொரு படிக்கட்டிலும் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டு போவார். சிலம்பம் பயின்ருர். குத்துச் சண்டை போடப் பழகிக் கொண்டார். பதினறு வயதில் பெரிய பயில்வானக விளங்கினர்.

ஒரு சமயம் மைசூருக்கு அடுத்த பச்சிமவாகினி என்ற சிற்றூரில் உறவினர் வீட்டு திருமணத்திற்குச் சென்றிருந்தார் அர்த்தநாரி. மணமக்கள் மண மேடையில் அமர்ந்திருந்தனர். முகூர்த்த வேளை நெருங்கி விட்டது. திடீரென்று மாப்பிள்ளைக்குக் காக்காய் வலிப்பு வந்தது. அவருக்கு அந்த நோய் இருப்பது பெண் வீட்டாருக்கு அதுவரை தெரியாது. 'நல்ல வேளை, இப்போதே தெரிந்ததே, மோசம் போக இருந்தோமே' என்று எல்லோரும் பெருமூச்சு விட்டனர். பிள்ளை வீட்டார் முகத்தில் ஈ ஆடவில்லை. மணப் பெண் நஞ்சம்மா தன் விதியை நினைத்து நொந்து போனுள். அங்கிருந்த பெரியவர் ஒருவருக்கு ஓர் அரிய யோசனை தோன்றியது. குறித்த முகூர்த்தத்திலேயே நஞ்சம்மாளுக்குத் திருமணம் நடைபெற்ருக வேண்டும் என்று முடிவு செய்தார் அவர். அர்த்தநாரியை அழைத்து அவளுக்குத் தாலி கட்டச் சொன்னர். மறு பேச்சின்றி அவர் மண மேடைக்குச் சென்ருர். நஞ்சம்மாவை இரண்டாவது மனைவியாகக் கரம் பற்றினர்.

முதல் மனைவி சுப்புலட்சுமி தன் மாமியாருடன் பூநாச்சிபுதூரில் இருந்தாள். அர்த்தநாரி, நஞ்சம்மாளுடன் மைசூரில் குடித்தனம் நடத்தி வந்தார். அவர் அடிக்கடி கிராமத்திற்கு வந்து போவதும் உண்டு.

அவர் தம் தொழிலில் கவனம் செலுத்தினரே தவிர, புத்தகப் படிப்பைப் பற்றிக் கவலையே படவில்லை. அவருக்குத் தெய்வ பக்தியும் அதிகம் கிடையாது. யாராவது கடவுளைப் பற்றிப் பேசினல், ''எங்கே இருக்கிருர் கடவுள்? அவரை எனக்குக் காட்டுங்கள், பார்க்கலாம்'' என்று குதர்க்க வாதம் செய்வார்.

வித விதமான பலகாரங்கள் செய்வதிலும், மணக்க மணக்கச் சமையல் செய்வதிலும் தமக்கு ஈடு ஒருவருமில்லை என்று பெயர் வாங்கினர் அர்த்தநாரி. அவர் சம்பளம் இருபது ரூபாயாக உயர்ந்தது.

இருப்பினும் வாழ்க்கைப் படகு சம்சாரக் கடலில் தத்தளித்தது. மனச்சாந்தி யற்றிருந்தார். முதல் மனைவிக்குப் பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் அடுத்தடுத்து இறந்தன. சோகத்தில் வாடிய மனைவியும், சில மாதங்களில் போய்ச் சேர்ந்து விட்டாள்.


இரண்டாவது மனைவியான நஞ்சம்மாளுக்கு இரண்டு பெண்குழந்தைகளும், ஓர் ஆண் குழந்தையும் பிறந்தன. அந்தக் குழந்தைகளாவது ஆயுசோடு இருக்கக் கூடாதா? திடீரென்று இரண்டு பெண் குழந்தைகளும் இறந்து விட்டன. மூன்றாவது பையன் நரசிம்மன் மட்டும்தான் பிழைத்திருந்தான்.

அர்த்தநாரிக்கு அப்படியொன்றும் வயதாகிவிட வில்லை. முப்பத்தைந்து கூட முடியவில்லை: அதற்குள் இத்தனை துன்பங்கள் வந்தால் என்ன செய்வார் பாவம்! அவருக்கு வாழ்க்கையே கசந்ததில் வியப்பில்லை. மனைவி மக்கள் என்ற பற்று மெள்ள மெள்ளக் குறைந்து வந்தது.

உள்ளத்தில் நிம்மதி இருந்தால்தானே உடலில் வலிமை இருக்கும்? அதுவரை நோய் நொடியில்லாமல் இருந்தவருக்கு வயிற்றில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. எந்த மருந்துக்கும் அது கேட்கவில்லை. அரண்மனை மருத்துவர்கள் தங்களால் இயன்றதையெல்லாம் செய்து பார்த்து விட்டார்கள். ஒன்றும் பயனில்லை. ஒரு மாதம் வேலைக்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே அவதிப்பட்டுக் கொண்டிருந்தார் அர்த்தநாரி. தற்கொலை செய்து கொள்வதைப் பற்றிக் கூடத் தீவிரமாகச் சிந்தித்தார்.

அப்போது அரண்மனையில் வேலை செய்து கொண்டிருந்த மதுரையைச் சேர்ந்த கொத்தனார், அர்த்தநாரியைப் பார்க்க வந்தார். அவர் ஒரு முருக பக்தர். பழநி ஆண்டவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற திட நம்பிக்கை கொண்டவர். பழநிக்குச் சென்றால் வயிற்று நோய் நீங்கி விடும் என்று அர்த்தநாரிக்கு எடுத்துச் சொன்னார். தெய்வ நம்பிக்கை அதிகமில்லாத அர்த்தநாரி, கடைசியாக அதையும் செய்து பார்த்து விடுவது

நாககிரி



என்ற முடிவுக்கு வந்தார். 'உத்தியோகம் இல்லாவிட்டால் போகிறது; உயிர் பிழைத்தால் போதும்' என்று மனைவியையும் ஏழு வயது மகனையும் அழைத்துக் கொண்டு, பழநியிலேயே தங்கிவிடுவது என்ற எண்ணத்துடன் மைசூரிலிருந்து புறப்பட்டார்.

பிரயாணத்தின் போது ஜோலார்ப்பேட்டையில் மனைவியின் நகைகள் களவு போயின. அருள் கிடைத்து விட்ட பிறகு பொருள் எதற்கு?

ஈரோடு வரை ரயிலில் வந்து, பின்னர் கால்நடையாகவே பழநி வந்து சேர்ந்தார். இது நடந்தது 1908-ம் வருடம். அப்போது அவருக்கு வயது 38.

என்ன அதிசயமோ! பழநியில் காலடி வைத்த அன்றே அவருடைய வயிற்று நோயின் கடுமை சற்றுத் தணிந்தது. நாளுக்கு நாள் வயிற்று வலி குறைந்து கொண்டே போயிற்று. நாளுக்கு நாள் அவருடைய பக்தியும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

பழநியாண்டவன் சந்நிதியில் தங்கியிருந்த அர்த்தநாரியை எல்லோரும் 'மைசூர் சுவாமிகள்' என்றே அழைத்தனர். அவருடைய மனைவி நஞ்சம்மாளும், மகன் நரசிம்மனும் நான்கு வீடுகளில் உணவு யாசித்து உண்டு வாழ்ந்தனர். அர்த்தநாரியோ ஆண்டவனுக்கு அபிஷேகமான பாலையும் வாழைப் பழத்தையும் தவிர வேறு ஆகாரத்தை உட்கொள்ளுவதில்லை.

அர்த்தநாரி அன்ன ஆகாரத்தையும் நித்திரையையும் பொருட்படுத்தாமல் ஆண்டவனின் சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். தினமும் மும்முறை நீராடுவார். மூன்று வேளைகளிலும் ஆயிரத்தெட்டு முறை காயத்ரி மந்திரம் ஜபிப்பார். விடியற்காலையில் சண்முக நதிக்கும், வராக நதிக்கும், அமராவதி நதிக்கும் சென்று உச்சிகால அபிஷேகத்திற்கான நீரைக் கொண்டு வருவார். பழநி மலையை வலம் வருவார்; மலைப் பிராகாரத்தில் அங்கப் பிரதட்சணம் செய்வார்; நாள் தவறாமல் சூரிய நமஸ்காரம் செய்வார். இப்படியொரு கடுமையான தவம் இயற்றியதாலும், பழநியாண்டவனுக்கு அபிஷேகம் செய்த பாலை அருந்தி வந்ததாலும் சுவாமிகளின் வயிற்று வலியும், வாந்தியும் அடியோடு நின்று போய் விட்டன.

அன்று சித்திரை மாதம். அக்னி நட்சத்திர உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அர்த்தஜாமத்தின் போது, மதுரையிலிருந்து வந்திருந்த ஒரு தேவதாசி, ஆண்டவனின் சந்நிதியில் 'வங்காரமார்பிலணி' என்ற திருப்புகழை உள்ளம் உருக, மெய்ம்மறந்து பாடிக் கொண்டிருந்தாள். அருகில் நின்றிருந்த சுவாமிகள் அந்தப் பாட்டில் அப்படியே லயித்துப் போய் விட்டார். அத்திருப்புகழில் 'சிங்கார ரூபமயில் வாகன நமோ நம' என்ற இடம் அவரை அப்படியே உலுக்கிவிட்டது. பக்தியால் கரைந்த உள்ளம் கண்ணீராய் வெளிப்பட்டது. ஆனந்தப் பரவச நிலை எய்தினார்.

அக் கணத்திலிருந்து அருணகிரிநாதரின் திருப்புகழ் அவரை ஆட்கொண்டது. அதை மனப்பாடம் செய்ய வேண்டும், மனமுருகப் பாட

வேண்டும் என்று தீராத ஆசை அவரைப் பற்றிக் கொண்டது. ஆனால், அதை எப்படிக் கற்பது? அவருக்குத் தமிழ் எழுத்துக்களே சரியாகத் தெரியாதே! திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அரையும் குறையுமாகக் கற்றது திருப்புகழைப் படித்துணரப் போதுமா?

மணி என்ற எட்டு வயதுச் சிறுவனை சிநேகம் பிடித்துக் கொண்டார் முப்பத்தெட்டு வயது நிரம்பிய மைசூர் சுவாமிகள். அவனிடம் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டு, அங்கு கிடைத்த ஏதோ ஒரு புத்தகத்திலிருந்து தினமும் ஒரு திருப்புகழை மனப்பாடம் செய்து, ஆண்டவனின் சந்நிதியில் ஒப்பிப்பார். அதில் பல பிழைகள் இருக்கும். இதைக் கவனித்த கிருஷ்ண சுவாமி பண்டாரம் என்பவர் திருப்புகழைப் பிழையில்லாமல் பாட வேண்டும் என்றும், பிழையற்ற திருப்புகழ் பதிப்பு சென்னை லிங்கிச் செட்டித் தெரு 292-ம் எண் இல்லத்தில் கிடைக்கும் என்றும் கூறினார். உடனே அந்த முகவரிக்குக் கடிதம் எழுதி நானூற்றைம்பது பாடல்கள் கொண்ட முதல் பாகத்தை வரவழைத்தார் சுவாமிகள். ஒரு மாதத்திற்குள் அத்தனை பாடல்களையும் கற்று விட்டார். தினமும் சந்நிதியில் நின்று, பக்திப் பரவசத்துடன் உரக்கப் பாடுவார். கம்பீரமான குரலில் 'கணீர்' என்று திருப்புகழ் மாரி பொழிவதைக் கேட்டு ஆனந்திக்க அங்கு பெருங் கூட்டம் கூடிவிடும்.

சுவாமிகளுக்குப் பழநியாண்டவரின் அருள் முழுமையாக இருந்தது. தன் அபிஷேகத்திற்காக, பல மைல்களுக்கு அப்பாலுள்ள புண்ணிய தீர்த்தத்தைக் கொண்டு வரும்படி அவரைப் பணித்தார் முருகப் பெருமான். ஒருநாள் அவரது கனவில் தோன்றி பொதிகை மலைச் சாரலில் பாபநாச தீரத்திலுள்ள கல்யாண தீர்த்தத்தைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அகத்திய முனிவரும், யோக சித்தர்களும் வாழும் அப் பகுதிக்குப் போகும் வழியையும், நீர் எடுக்க வேண்டிய இடத்தையும், கிழக்கில் மலையடியிலிருக்கும் மணல் மேட்டையும், மேற்கிலுள்ள பாறைக் கோயிலையும் அவருக்குக் கனவிலேயே காட்டியருளினார். அன்றிரவே சில முருக பக்தர்களின் கனவில் தோன்றி, வழிச் செலவுக்காக மைசூர் சுவாமிகளிடம் பணம் தரும்படி கட்டளையிட்டார். மறுநாள் விடியற் காலையில் அவர்கள் சுவாமிகளிடம் வந்து, ஆண்டவனின் கட்டளைக்கிணங்க அவருக்குப் பணம் கொடுத்துதவினார்கள்.

சுவாமிகள் இப் பணியைச் செவ்வனே முடித்து வைப்பதற்காக மௌன விரதம் ஏற்றுக் கொண்டார். தாம் ஏற்றுக் கொண்டுள்ள தெய்வப் பணியை ஓர் அட்டையில் விளக்கமாக எழுதி கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு, பயணத்தைத் தொடங்கினார்.

அன்று இரவு முழுவதும் கால்நடையாகவே சென்று, விடியற்காலை திண்டுக்கல்லை அடைந்தார் அவர். இரவில் இவருக்குத் துணையாக பழநியாண்டவர் ஒரு குருக்கள் உருவில் இருபது அடி முன்னால் தொலைவில் நடந்து கொண்டிருந்தார். எத்தனை வேகமாக நடந்தாலும், அந்தக் குருக்களுக்கும் சுவாமிகளுக்கும் இடையே இருபது அடி இடைவெளி இருந்து கொண்டே இருந்தது. திண்டுக்கல்லை அடைந்ததும் குருக்கள் மாயமாய் மறைந்து விட்டார்.


வழி நெடுகிலும் பல பக்தர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு தென்காசி வந்தடைந்த சுவாமிகளுக்கு பழநியாண்டவன், தட்சிணாமூர்த்தி பரதேசியாகக் காட்சியளித்து, கல்யாண தீர்த்தத்திற்கு வழி காட்டினார். ஆனால், குறிப்பிட்ட இடத்தில் நீர் எடுக்காததால் பாதி வழியில் குடம் தவறி விட்டது. எனவே, மீண்டும் நடந்து சென்று பரதேசியின் உதவி யால் செப்புக் குடத்தில் தீர்த்தம் எடுத்துக் கொண்டு கால் நடை யாகவே பழநியை நோக்கிப் புறப்பட்டார். வழியில் திருடர்கள் சுவாமி களை வழி மறித்தனர். பின்னர் அவர் கழுத்தில் மாலையாகத் தொங்கிய அட்டையைப் படித்துப் பார்த்து அவரிடம் மன்னிப்புக் கேட்டு, விபூதி பெற்றுச் சென்றனர். மற்றோர் இடத்தில் தலையில் தீர்த்தக் குடத்தை வைத்துக்கொண்டே வெள்ளத்தில் நீந்தி வரவேண்டி யிருந்தது. இத்தனை இன்னல்களையும் கடந்து வந்து, புனிதத் தீர்த்தத்தால் ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து, கண் குளிரத் தரிசித்து உள்ளம் குளிர்ந்தார்.

அந்த ஆண்டு கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத்திற்குச் சென்றார் சுவாமிகள். திருச்சியிலிருந்தே ஜனநெரிசல் இருந்ததாலும், ரயிலில் போனால் தாமதமாகும் என்பதாலும் காவிரியில் குதித்து, நீந்திக் கொண்டே கும்பகோணத்தை அடைந்தார் அவர். அங்கு கும்பலில் சிக்கிக் கொண்டு திண்டாடிய வயோதிகத் தம்பதியைத் தோளில் சுமந்து கொண்டு, அவர்களை மகாமகப் புனித நீரில் ஸ்நானம் செய்வித்து, தாமும் நீராடி புண்ணியம் பெற்றுப் பழநிக்குத் திரும்பி வந்தார்.

அதற்கு அடுத்த வருஷம், ஆடி அமாவாசை அபிஷேகத்திற்காக, பொதிகை மலையிலுள்ள தட்சிணாமூர்த்தி தீர்த்தமான பாண தீர்த்தத் தைக் கொண்டு வரும்படி ஆண்டவன் கனவில் அருள் கட்டளை யிட்டார். சுவாமிகள் மீண்டும் தென்காசி, பாபநாசம் வழியாக, மலைகளையும் காடு களையும் தன்னந் தனியாகக் கடந்து சென்று, இடையில் குறுக்கிட்ட இன்னல்கள் பலவற்றையும் பொருட் படுத்தாது நீர்வீழ்ச்சி இருந்த இடத்தையடைந்து, புண்ணிய தீர்த்தத்தை செப்புக் குடத்தில் எடுத்துக் கொண்டார். வரும் வழியில் வண்டுகளும், குளவிகளும் கொட்டியதை யும், கொடிய விலங்குகள் பயமுறுத்தியதையும், சற்றும் மனம் தளராது, மௌன விரதத்துடனேயே பழநிக்கு வந்து சேர்ந்தார்.

அதற்கு அடுத்த வருடம், கோயம்புத்தூருக்குப் பதினைந்தாவது மைலில் இருக்கும் வெள்ளியங்கிரி மலையேறி, பஞ்சலிங்க தரிசனம் செய்து, வேறு வழியாக இறங்கி, பூண்டி என்ற கிராமத்தின் வாயு மூலையிலுள்ள தேவி தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு கால் நடையாகப் பழநி வந்து சேர்ந்தார். **1911**-ம் வருடம் மாசி மாதம் சுக்ல சஷ்டியன்று ஆண்டவனுக்கு வெள்ளியங்கிரி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தார்.

பழநியிலிருந்து கொழும்பு போகும் வழியில் பெரியாவடையார் என்ற பிரஹதீச்வரர், கோயில் கொண்டிருக்கிறார். இது பிரும்மா தவம் செய்த தலம். ஆதிசேஷனுக்கு ஈச்வரன் தரிசனம் அளித்த இடம். இங்கு கற்பாறையில், இலுப்பை மரத்தடியில் சிவலிங்கம் ஒன்றும் இருக்கிறது.



பழநிமலை

இத்தலத்திற்கும் சுவாமிகள் அடிக்கடி வந்து, தீர்த்தம் எடுத்துச் சென்று பழநியாண்டவனுக்கு அபிஷேகம் செய்து வைப்பதுண்டு.

இவ்வாறு மைசூர் சுவாமிகள் நான்கு ஆண்டுகள் முருக பக்தியில் ஒன்றி, அரிய தவமிருந்தார். சகல சித்திகளும் கைகூடியும் அவர் மனம் அவற்றில் நாட்டம் கொள்ளவில்லை. யோகப் பயிற்சிகளின் மூலம் உன்னத சக்திகள் பெற்றிருந்தும், சத்தியப் பொருளையே அவர் தேடிக் கொண் டிருந்தார். திருப்புகழ் ஓதுவதையே உயிர் மூச்சாகக் கருதியவரின் உள் ளத்தில் கருணை வெள்ளம் கரை புரண்டோடியது. ஏழை எளியவர் களின் துயர் துடைக்கத் துடித்தார். அவர்களுக்கு வயிறார உணவளித்து மகிழ்ந்தார். பிணியால் வாடியவர்களுக்கு சிகிச்சை செய்வதில் எல்லை யற்ற ஆனந்தம் கண்டார்.

அடுத்து திருச்செந்தூருக்குச் செல்லுமாறு சுவாமிகளுக்கு உத்தர வாயிற்று. மனைவியும் மகனும் உடன் வர, நடந்தே திருச்செந்தூரை அடைந்து, மூன்று நாட்கள் சண்முகநாதரை வழிபட்டார். அங்கிருந்து இலங்கையிலுள்ள கதிர்காமத்திற்கு வரும்படி கந்தன் கனவில் அழைக்கவே, தூத்துக்குடிக்குப் புறப்பட்டார். ஆனால், கப்பல் பிரயாணத்திற்கு அப்போது அனுமதி கிடைக்காததால், குடும்பத்துடன் இராமேச்வரத்திற்குப் பயணமானார்.

அச்சமயத்தில் பன்னிரண்டு வயது நிரம்பிய மகன் நரசிம்மன், பழநிக்குத் திரும்பி நாட்டுக்கோட்டை செட்டிமார் சிலருடன் சேர்ந்து பர்மாவுக்குப் போய் விட்டான். சுவாமிகள் மீண்டும் தூத்துக்குடிக்கு வந்து, சமையல் செய்தும், திருப்புகழ் பாடியும் பணம் சம்பாதித்து கதிர்காமத்திற்குப் புறப்படத் தயாரானார்.

ஆனால், இலங்கை செல்ல சர்க்கார் அனுமதி கிடைப்பது கடினமா யிருந்தது. அனுமதி வழங்கும் அதிகாரம் பெற்ற ஆங்கிலேய துரையை அணுகி, தம் விருப்பத்தைக் கூறினார். பின்னர், புலால் சேர்க்காமலே துரைமார்களின் ருசிக்கு ஏற்ற வகையில் வெகு சாமர்த்தியமாக சமைத் துப் போட்டு அவரைத் திருப்திப்படுத்தினார். மகிழ்ச்சியடைந்த துரையும் சுவாமிகள் இலங்கை செல்ல அனுமதி வழங்கினார்.

கதிர்காமக் கோயிலின் எழிலிலும் சூழ்நிலையின் வசீகரத்திலும் மனத்தைப் பறிகொடுத்த சுவாமிகள், அங்கு நாற்பத்தெட்டு நாட்கள் தங்கியிருந்து விட்டு, பிரிய மனமின்றி, இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். வழி நெடுகிலுமுள்ள ஆலயங்களைத் தரிசித்து, அங்கெல்லாம் திருப்புகழ் பாராயணம் செய்து பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தினர்.

தாய் நாட்டிற்குத் திரும்பிய சுவாமிகள், தூத்துக்குடியிலிறங்கி, திருச்செந்தூருக்குச் சென்று ஆறுமுகனைத் தரிசித்துக் கொண்டு, கோயில் பட்டியை அடைந்தார். அங்கு வேங்கடராயர் என்பவரின் தொடர்பு ஏற்பட்டது. வேங்கடராயர் பல சாத்திரங்களைக் கரை கண்ட மாமேதை. ஆசார சீலர். சுவாமிகளும் அவரது மனைவியும் ராயரிடம் நாற்பத்தைந்து நாட்கள் பகவத்கீதையிலிருந்தும் ஞான வாசிஷ்டத்திலிருந்தும் பாடம் கேட்டனர், பல தத்துவங்களைக் கற்றறிந்தனர். அதன் பலனாக, சுவாமிகளுக்கு சந்நியாச ஆச்ரமத்திலும் ஆத்ம விசாரத்திலும் நாட்டம் ஏற்பட்டது. தமது எண்ணத்தை ராயரிடம் தெரிவித்தார். ராயர், சுவாமிகளிடம், திருவண்ணாமலைக்குச் சென்று, ஞானமலையின் நிழலில் மோனத் தவம் புரிந்து கொண்டிருக்கும் ரமண மகரிஷியையும் சேஷாத்ரி சுவாமிகளையும் தரிசித்தால் அவர்கள் நல்வழி காட்டுவார்கள் என்று எடுத்துச் சொன்னர்.

அடுத்து பழநிக்கு வந்த சுவாமிகள், வைகுண்ட ஏகாதசிக்கு ஸ்ரீரங்கம் சென்று விட்டு, திருவாதிரைத் திருநாள் தரிசனத்திற்காக திருவண்ணாமலைக்குப் பயணமானர்.

மைசூர் சுவாமிகள் என்று அழைக்கப்பட்ட அர்த்தநாரி, திருவண்ணாமலையை அடைந்ததும், மலை மீது வாசம் செய்து கொண்டிருந்த ரமண சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றார்.

அப்போது ஆச்ரமத்தின் வாயிலில் தரிசனத்திற்காக நின்று கொண்டிருந்த சிறு கூட்டத்தில் அர்த்தநாரியும் சேர்ந்து கொண்டார். சற்றைக்கெல்லாம் ரமணர் வெளியே வந்தார். கோவணாண்டியாகக் காட்சி தந்த மகரிஷி சிறிது நேரம் அப்படியே நின்றார். அவரை உற்று நோக்கினர் அர்த்தநாரி. மகரிஷிகளும் அர்த்தநாரியை ஊடுருவிப் பார்த்தார். ஒரு கணம்தான். அவ்விடத்தில் நின்றிருந்த ரமணர் மறைந்து, அர்த்தநாரியின் கண்களுக்கு பழநியாண்டவரே காட்சியளித்தார். பிரமையோ என்று நினைத்து அர்த்தநாரி கண்களைக் கசக்கிக் கொண்டு உன்னிப்பாகக் கவனித்தார். சந்தேகமில்லை. சாட்சாத் பழநியாண்டவரேதான். அர்த்தநாரிக்கு உடலெல்லாம் சிலிர்த்தது. 'தண்டபாணிக்கு ஹரோ ஹரா' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார். பொலபொலவென்று கொட்டிய கண்ணீர் அவர் கன்னங்களில் வழிந்தோடியது. அவருக்குப் பேச்சே எழவில்லை. சிலையாய் நின்று விட்டார்.

தமக்குப் பழநியாண்டவராகக் காட்சி தந்த ரமண பகவானின் சந்நிதியை விட்டு அகலவே மனம் இல்லாமல் இரண்டு மூன்று மாதங்கள் திருவண்ணாமலையிலேயே தங்கியிருந்தார் மைசூர் சுவாமிகள். சமயம் வாய்த்தபோதெல்லாம் ரமணர் முன்னிலையிலும், ஈச்வர சுவாமிகளின்

முன்னிலையிலும் அமர்ந்து திருப்புகழ் பாடுவார். மகான்கள் இருவரும் அன்பரின் முருக பக்தியைக் கண்டு மனமிளகி, பிழைகளைத் திருத்துவார்கள். சந்தம் பிரித்து, ஓசை நயத்துடன் முறையாகத் திருப்புகழைப் பாடுவதற்கு அவர்களிடம் கற்றுக் கொண்டார் சுவாமிகள். இரு மகான்களும் அவரைத் 'திருப்புகழ் முருகன்' என்றே அழைப்பது வழக்கம்.

சுவாமிகள் திருப்புகழ் பாடிக் கொண்டு வர, எல்லோரும் ஒரு நாள் கிரிவலம் வந்தார்கள். அப்போது சுவாமிகள் அருணகிரிநாதரின் வேடிச்சி காவலன் வகுப்புப் பாடிக் கொண்டு வந்தார். அப்பாடலின் இறுதியில் ''காவலனே, காவலனே, காவலனே, காவலனே'' என்று சுவாமிகள் பாடியபோது, ரமணர் வேடிக்கையாக ''ஏமேமி காவலனே, எந்தெந்தா காவலனே'' என்று தெலுங்கில் கேட்டார். அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு சாது, அந்த வேடிக்கையில் கலந்து கொண்டு, ''இட்லி காவலனே, காப்பி காவலனே'' என்று கூறினர். சற்றைக்கெல்லாம், அந்தக் காட்டுப் பாதையில் சற்றும் எதிர்பாராத வகையில் ஒருவர் இட்லியும் காப்பியும் கொண்டு வந்தார். அத்தனை பேரும் அதைப் புசித்துக் களைப்பாறினர்கள். விளையாட்டானாலும், பக்தனின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு வேடிச்சி காவலனான முருகன்தான் இட்லி வியாபாரியாக அங்கு தோன்றினன் என்றே எல்லோரும் கருதினர்.

திருவண்ணாமலையில் தங்கியிருந்தபோது ஒரு நாள் கூட மைசூர் சுவாமிகள், சேஷாத்ரி சுவாமிகளை அருகில் சென்று தரிசித்ததில்லை. தொலைவில் நின்றபடி ஒரு கும்பிடு போடுவதோடு சரி. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே அவரிடம் உபதேசம் பெறும் பாக்கியம் கிடைத்தது அவருக்கு. மகான்களின் தரிசனமும் தொடர்பும் அதற்கான வேளை வந்தால்தான் கிட்டும். பிராப்தம் இல்லாவிட்டால் அருகில் இருந்தாலும் அவர்களைத் தரிசிக்கும் பேறு நமக்குக் கிட்டாது.

அருணாசலத்திலிருந்த மைசூர் சுவாமிகளுக்கு இமாலய யாத்திரை செய்ய வேண்டும் என்ற பேரவா ஏற்படவே, மஞ்சகுப்பம் கிருஷ்ணய்யரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொண்டு சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள வெங்கடேசய்யர் என்ற புரோகிதரின் வீட்டுக்குச் சென்றார்.

மைசூர் சுவாமிகளுக்கு அன்னதானம் செய்வது என்றால் மிக விருப்பம். கையில் காசு கிடைத்தால் இரண்டு பேருக்காவது உணவு அளித்து மகிழ்வார். அவர் சென்னைக்கு வந்ததும் சஷ்டி புண்ணிய தினம் நெருங்கியதால், அன்று வெங்கடேசய்யர் இல்லத்தில் சமாராதனை நடத்துவது என்று முடிவு செய்து, அதற்கான முயற்சியில் முழுமனத்துடன் ஈடுபட்டார். புதிய இடம் என்றோ, பழக்கமில்லாதவர்கள் என்றோ சிறிதும் தயங்காமல் நான்கு பேரிடம் கேட்டு சமாராதனைக்காகப் பணமும் பொருள்களும் சேகரித்து வந்தார்.

அச்சமயம் சென்னை கந்தசாமிக் கோயிலுக்கருகில் 'கொசக்கடைச் சாமியார்' என்ற மகான் வசித்து வந்தார். சமாராதனைக்கு முதல் நாள் மாலை, அப்பக்கமாகச் சென்ற சுவாமிகளின் காதில் விழும்படி ''சொத்து



வ. த. சுப்பிரமணியப் பிள்ளை

அடித்துக் கொண்டு போக வந்திருக்கான். எல்லாம் நாளைக்குக் கிடைக்கிறது'' என்று அந்தச் சாமியார் தமக்குத் தாமே பேசிக் கொண்டார். அதைத் தெய்வ வாக்காகவே நினைத்தார் சுவாமிகள்.



வ. சு. செங்கல்வராயப் பிள்ளை

மறுநாள் சஷ்டி சமாராதனைக்கு அநேக பிராமணர்கள் வந்தனர். இறுதியாக ஒரு வயோதிகர் வந்து ''சாப்பாடு கிடைக்குமா?'' என்று யாசித்தார். அவரைப் பார்க்க அருவெறுப்பாக இருந்தது. தொழு நோயால் பீடிக்கப்பட்டிருந்த அவர் அங்கங்களிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது. பந்தியில் அவரை உட்கார வைத்தால் இதர விருந்தாளிகள் முணுமுணுக்கப் போகிறார்களே யென்று, அந்த வயோதிகரை வேறோர் அறையில் உட்கார வைத்து உணவு படைத்தார் சுவாமிகள். பிறரைப் போலவே அவரையும் அன்புடன் உபசரித்தார்.

சமாராதனை முடிந்ததும், சுவாமிகள் எச்சில் இலைகளில் விழுந்து புரளுவது வழக்கம். கூடத்திலிருந்த இலைகளில் புரண்டு விட்டு, அறையில் வயோதிகர் உணவருந்திய இலையிலும் புரளுவதற்காக வந்தார் சுவாமிகள். சுற்றிலும் சீழும் நீரும் ஒழுகி, அந்த இடம் மிக அசுத்தமாக இருந்தது. ஏனையவர் முகம் சுளித்தபோதிலும், சுவாமிகள் பக்தியுணர்வோடு அந்த அடியாரின் இலையிலும் படுத்துப் புரண்டார்.

அடுத்த கணம் அவர் நினைவிழந்தார். அவருக்கு ஒரு பேரொளி தரிசனமாயிற்று. அந்த ஒளி சேஷாத்ரி சுவாமிகளாக உருமாறியது. அவர், ''இதெல்லாம் என்னடா? போகலாம் வாடா'' என்று கூறி தமது சிகையையும் பூணூலையும் களைந்து எறிவது போலவும், ''நீ மேலான பதவி அடைவாய்'' என்று அருள் வாக்கு நல்கியது போலவும் சுவாமிகளுக்குத் தோன்றியது.

வீடு தேடி வந்த வயோதிகர், உபதேசம் பெறத் தக்கவனா என்று வருங்காலச் சீடனை சோதிக்க வந்த சேஷாத்ரி சுவாமிகளாகத்தான் இருக்க வேண்டும்!

அந்தக் கணத்திலிருந்து சுவாமிகளின் உள்ளத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டு விட்டது. சுய உருவை தரிசித்த சத்திய ஞானியாகவே அவர் திகழ்ந்தார். உடை காவியாகாவிட்டாலும் உள்ளத்தளவில் அவர் துறவறம் பூண்டு விட்டார். பூணூலை அறுத்தெறிந்து விட்டு, அன்ன ஆகாரத்தை வெறுத்து, கச்சாலீச்வரர் ஆலயத்தில் போய் அமர்ந்து விட்டார்.

சுவாமிகளின் மனைவியாருக்கு ஒரே கவலையாகி விட்டது. அவளது நிலையைக் கண்டு பரிதாபப்பட்ட ஒருவர், சுவாமிகளிடம் சென்று வாதாடினார். ''நீங்கள் தனியாக இருந்தால் எப்படி வேண்டுமானாலும்



ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள்

போகலாம். உங்கள் மனைவியின் கதியைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்த அம்மாளை உங்கள் பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டு, பின்னர் வேண்டுமானுல் சந்நியாசியாகி விடுங்கள். அது வரை உங்கள் மனைவி உங்களுடனேயே இருக்க வேண்டும்'' என்று கண்டிப்பாகக் கூறினர். அவர்களுடைய வாதத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்து, அவ்விதமே நடப்பதாக இசைந்தார் சுவாமிகள்.

அடுத்த கிருத்திகை தினத்தன்று மனைவியுடன் திருத்தணி தலம் சென்ருர் அவர். அங்கு முருகன் சந்நிதியில் நின்று வெகு நேரம் திருப்புகழ் பாடினுர். பின்னர் தெய்வயானை சந்நிதிக்குச் சென்று மெய்யுருகிப் பாடினுர். ஆனுல், அதில் இசையை விட, ஆழ்ந்த பக்தி இருந்தது. ஓசை நயத்தை விட குரலின் கம்பீரம் இருந்தது. உலகை மறந்து அவர் திருப்புகழ் அமுதம் பொழிந்து கொண்டிருந்ததை, மற்ருெரு முருக பக்தர் கேட்டு, உள்ளம் உருகிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார். அப்போது அப்பக்தரின் அன்னையும் உடனிருந்தார். இது நடந்தது 1913-ம் வருடம்.

அந்த முருக பக்தரின் பெயர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை. அந்நிகழ்ச்சியைப் பற்றி அவரிடமிருந்தே கேட்டறிந்தேன். தொண்ணூறு வயதாகியிருந்த அவர், கூனிக் குறுகி, நடை தளர்ந்து, உடல் மெலிந்து காணப்பட்டார். குழந்தைகள் நடை வண்டியைத் தள்ளிக் கொண்டு நடை பயிலுமே, அதைப்போல் தம் அறையிலிருந்து ஒரு சிறு ஸ்டூலைத் தள்ளியபடியே ஹாலிலுள்ள சோபாவில் வந்து அமர்ந்தார். பரம்பரை பரம்பரையாக வரும் முருக பக்தியில் திளைத்து, இறைப் பணியாகத் தமிழ்த் தொண்டாற்றி, சிவப் பழமாகப் பழுத்திருக்கும் அவரைக் காணும்போது நெஞ்சம் நிறைகிறது. அவரால் கோவையாகவோ, தெளிவாகவோ பேச முடியவில்லை. ஆனுல், நிறையக் கூறவேண்டும் என்ற துடிப்பு அவருக்கு இருக்கிறது. பேச முடியாததையெல்லாம் கண்களால் பேசுகிருர். ஒளி மிகுந்த அந்தப் பார்வையில் பழைய நிகழ்ச்சிகளின் அனுபவங்களை யெல்லாம் தேக்கி வைத்திருக்கிருர். தந்தையார் தொடங்கிய தெய்வப் பணியை, குன்ருத ஆர்வத்துடன் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கிருர் இவர்.

இவருடைய தந்தையாரான வ. த. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த திருப்புகழ்ப் பாக்களைச் சேகரித்து, வழக்கிலிருந்த பாட்டுக்களையும் செல்லரித்த ஓலைச் சுவடிகளிலிருந்த பாட்டுக்களையும் அரும்பாடு பட்டுத் தேடி, நூலாக வெளியிட்டு இந்து சமயத்திற்கும் அருணகிரியாரின் அடியார்களுக்கும் இணையற்ற சேவை செய்திருக்கிருர்.

1870-ம் ஆண்டு வள்ளிமலை சுவாமிகள் அவதரித்தார். உலகில் திருப்புகழைப் பரப்புவதற்காக ஆண்டவன் அருளால் தோன்றிய அந்த மகான் பிறந்த மறு வருஷத்திலிருந்து, அதாவது 1871-ம் ஆண்டிலிருந்தே சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் திருப்புகழ் பாட்டுக்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கினர். பழநியாண்டவரின் சந்நிதியில் 'வங்கார மார்பிலணி' என்ற பாடலைக் கேட்டு, வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழுக்கு அறிமுகமான போது, அவர் அதை முறையாகக் கற்றறிவதற்கு உதவும் பொருட்டு சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் திருப்புகழ் நூலை வெளியிட்டுத் தயாராக வைத்திருந்தார்!

எல்லாமே தணிகேசனின் கருணையினல்தான் நடைபெறுகிறது. ஆனல், காரண காரியங்கள் நமக்குப் புரிவதில்லை.

தந்தை சேர்த்து வைத்த திருப்புகழ் பாடல்களுக்கு விளக்கவுரை எழுதி, நற்பணியாற்றும் பெருமை அவரது மகனை செங்கல்வராயப் பிள்ளையவர்களுக்குக் கிடைத்தது.

தணிகேசன் தந்த வரப் பிரசாதத்தால் திருப்புகழ்த் தொண்டு புரியத் தொடங்கியிருந்த மைசூர் சுவாமிகள், தணிகேசனின் திருச்சந்நிதியில் திருப்புகழை உரத்த குரலில் ஓதிக் கொண்டிருந்தார். செங்கல்வராயப் பிள்ளையவர்களும் அவரது தாயாரும் அதை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஆச்சரியமடைந்த அன்னையார் மகனிடம், ''அப்பா, அவரிடம் சென்று அந்தப் பாட்டுக்களை எந்தப் புத்தகத்திலிருந்து மனப் பாடம் செய்தார் என்று கேட்டு வா?'' என்று அனுப்பினர்.

மகன் முதலில் தயங்கி விட்டு, பின்னர் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சுவாமிகளிடம் சென்று மெள்ள விசாரித்தார். அதற்குச் சுவாமிகள் ''வ. த. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ள புத்தகத்தில் படித்தேன்'' என்று கூறினர். உடனே பிள்ளையவர்கள் அடக்க முடியாத மகிழ்ச்சி பொங்க, ''சுவாமி அவர் என் தந்தைதான். என் பெயர் செங்கல்வராயன்'' என்று தம்மை சுவாமிகளிடம் அறிமுகப் படுத்திக் கொண்டார்.

இதைக் கேட்ட சுவாமிகளுக்கு வியப்பை அடக்க முடியவில்லை. ''அப்படியா என் கண்ணே! உன்னைத்தான் இத்தனை நாட்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று அவரை அன்புடன் தழுவிக் கொண்டார்.

தம்மிடம் நானூற்றைம்பது பாட்டுகள் அடங்கிய முதல் பாகம்தான் இருக்கிறது என்றும், இரண்டாவது பாகத்தையும் பழநிக்கு உடனே அனுப்பி வைக்கும்படியும் சுவாமிகள் கேட்டுக் கொண்டார். ஒரு வாரத்திற்கெல்லாம் பிள்ளையவர்களும் அந்த நூலை சுவாமிகளின் பழநி விலாசத்திற்கு அனுப்பி வைத்தார்.

ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னல் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைக் கூறிய போது பிள்ளையவர்களின் அகமும் முகமும் மலரக் கண்டேன். கந்தன் கருணையால் நேர்ந்த அந்த முதல் சந்திப்பையும், பின்னர் சுவாமிகளுடன் பழகிப் பயனடைந்த நாட்களையும் பிள்ளையவர்கள் பசுமை மாருத நினைவுச் செல்வமாகப் பாதுகாத்து வருகிறர்.

''லிங்கிச் செட்டித் தெருவில் வசித்தபோது எத்தனேயோ இரவுகள் பூஜை முடிந்த பிறகு எங்கள் வீட்டுப் பூஜையிலிருக்கும் தணிகேசப் பெருமான், வள்ளிமலே சுவாமிகளின் திருப்புகழைக் கேட்டு ஆனந்தித் திருக்கிருர். சுவாமிகள் எங்கள் வீட்டுத் திண்ணேயில் அமர்ந்திருப்பார். பூஜை முடிந்து மணி அடித்ததும் உள்ளே வந்து, திருப்புகழ் அமுதத்தைப் பொழிவார். எங்கள் குடும்பத்தினர் மனம் உருகிக் கேட்போம்'' என்ருர் செங்கல்வராயப் பிள்ளேயவர்கள்.†

அரண்மனேக்காரத்தெருவில் புரோகிதர் வெங்கடேசய்யர் வீட்டில் நடைபெற்ற சமாராதனேயின் போது, ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஒளி தரிசனத்தைக் கண்டதிலிருந்து, பந்த, பாசமற்று, ஞான வைராக்கியத் துடன் வாழ்ந்த சுவாமிகளுக்கு, குடும்பத்தைத் துறந்து, தன்னிச்சை யாகப் புனித யாத்திரை செல்ல வேண்டும் என்ற எண்ணம் வலுக்கத் தொடங்கியது. தம் மனேவியை அழைத்துக் கொண்டு பழநிக்குச் சென்று, மகனேப் பர்மாவிலிருந்து வரவழைத்து, அவனிடம் தாயை ஒப்படைத்து விட்டு, திருப்புகழ் பாடிப் பணம் சம்பாதித்து, நண்பர்கள் ஆதரவோடு காசி யாத்திரை புறப்பட்டார்.

அங்கு சென்ற மூன்று மாதங்களுக் கெல்லாம், அன்னே நஞ்சம்மா ளின் அஸ்தியோடு நரசிம்மன் தந்தையைத் தேடிக் கொண்டு வந்தான். கணவனேப் பிரிந்து வெகு நாள் வாழ விரும்பாத அந்த உத்தமி காலமாகி விடவே, தந்தையுடன் தங்கி விடலாம் என்று தீர்மானித்து காசிக்கு வந்த மகனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. தம்மிடம் மகன் தங்கியிருக்கக் கூடாது என்று கூறி, சுவாமிகள் பத்து ரூபாய் பணம் கொடுத்து அவனே ஊருக்கே திருப்பி அனுப்பி விட்டார்.

பின்னர், இமாலயப் பகுதிக்குச் சென்று, மூன்று ஆண்டுகள் புண் ணியத் தலங்களேத் தரிசித்து, புனித நீராடினுர். ஹரித்வார், பத்ரிநாத், கேதாரிநாத், கங்கோத்ரி, யமுனேத்ரி, அமர்நாத் முதலிய தலங்களேத் தரிசித்த பிறகு, இமாலயத்தில் தவம் புரிந்து வந்த ஒரு மகானிடம் முறை யாகச் சந்நியாசம் பெற்றுக் கொண்டு சச்சிதானந்த சுவாமிகளானுர். பத்து மாதங்கள் யார் கண்ணிலும் படாமல் காட்டுப் பிரதேசங்களில் வசித்தார். நான்கு மாதங்கள் சாதுர்மாஸ்ய நோன்பு இருந்தார். பின்னர் விதிப்படி தண்டத்தையும், கமண்டலத்தையும் கங்கைக்கு அர்ப்பணம் செய்து விட்டு, அதிவர்ணுச்ரமத்தை மேற்கொண்டார். அந்தக் குளிர்ப் பிரதேசத்தில் பல மகான்களுக்குப் பணிவிடைகள் செய்தும், உணவு தயார் செய்து தந்தும், தவ நெறியோடு ஆன்ம வலிமையைப் பெருக்கிக் கொண்டார். இமாலயத்தின் உச்சியில் திருப்புகழ்க் கொடியை நாட்டினுர். சென்றவிடமெல்லாம் அருள் மணம் பரப்பினுர். அன்பு மழை பொழிந்தார்.

---


†(1971-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிள்ளேயவர்கள் திருத்தணிகேசன் திருவடிகளேச் சேர்ந்தார்,)

ஒருநாள் அயோத்தியில் ராமர் கோயிலைத் தரிசித்துவிட்டு ஆகார மின்றி சுவாமிகள் ஒரு மரத்தடியில் அமர்ந்து திருப்புகழ் பாடிக் கொண் டிருந்தார். உச்சிவேளை நெருங்கியது. சுவாமிகளுக்குப் பசி தாங்க முடிய வில்லை. அண்ணாந்து பார்த்தார். மரக் கிளையில் நிறையக் குரங்குகள் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அவற்றை நோக்கி, 'வஞ்சங் கொண்டுந் திடராவண' என்ற திருப்புகழைப் பாடினார். 'குரங்குந் துஞ்சுங் கனல் போல் வெகுண்டுங் குன்றுங் கரடார் மரமது வீசி' என்று வானர சேனைகளின் திறமையையும் வல்லமையையும் பாராட்டும் பாடல் அது. இந்தப் பாட்டைக் கேட்ட குரங்குகளில் சில ஓடோடியும் சென்று, காட்டு வழிப் பாதையில் பஞ்சாபி யாத்திரிகர்கள் தயார் செய்து கொண்டிருந்த ரொட்டிகளில் சிலவற்றைத் தூக்கிக் கொண்டு வந்து சுவாமிகளிடம் போட்டன. குரங்குகளைத் துரத்திக் கொண்டு வந்த பஞ்சாபிகள், சாது ஒருவர் தங்கள் ரொட்டியைச் சாப்பிடுவதைக் கண்டு மனமகிழ்ச்சியோடு சென்றனர். அன்று ஸ்ரீராமநவமி தினம்!

தமது வட இந்திய யாத்திரையை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பிய சுவாமிகள், மீண்டும் திருவண்ணாமலைக்குச் சென்றார். மலை மீதிருந்த ரமணருக்குப் பணிவிடை செய்து கொண்டு ஆச்ரமத்தில் தங்கி யிருந்த சுவாமிகளைப் பார்த்து, ''கீழே போங்கள்'' என்று பகவான் உத்தர விட்டார். சுவாமிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன அபசாரம் செய் தோம்? பகவான் ஏன் என்னைப் போகச் சொல்கிறார்?'' என்று எண்ணி, விடை காண முடியாமல் மனம் குமைந்தார். பின்னர், குருநாத ரின் கட்டளையைச் சிரமேற் கொண்டு, மலையை விட்டுக் கீழே இறங்கினார்.

29-8-73 இரவு 8-15 (ஆஞ்ஜநேயர்)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 16139



வள்ளிமலை மீதுள்ள முருகன் ஆலயம்

மலையடிவாரத்தில் எருமையொன்று குட்டையைக் கலக்கிக் கொண்டிருந்தது. எருமையையும் பிரும்மமாகக் கருதிய ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், அதைக் கட்டித் தழுவி, ஆனந்தத்தில் லயித்திருந்தார். அவர் திருமேனியில் சேறும் சகதியும் படிந்திருந்தாலும், சுற்றுப்புறம் எங்கும் சந்தனத்தின் நறுமணம் 'கம்'மென்று வீசியது.

ரமண பகவான் தம்மைக் கீழே இறங்கிப் போகச் சொல்லி விட்டாரே என்ற மனத் தளர்ச்சியுடன் மலையிலிருந்து இறங்கி வந்த சச்சிதானந்த சுவாமிகளைப் பார்த்தார் சேஷாத்ரி சுவாமிகள். ஓடிப் போய் அவரை அப்படியே கட்டித் தழுவினர். கீழே அமர்ந்து அவரை மடிமேல் அமர்த்திக் கொண்டார். இவர் மீதிருந்த சகதி அவர் மீதும் ஒட்டிக் கொண்டது. சுகந்தம் பன்மடங்காக வீசியது.

முக்காலத்தையும் உணர்ந்த பிரும்ம ஞானியான ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அர்த்தநாரியையா கண்டார்? திருப்புகழ் அமுதத்தை உலகிற்கு வாரி வழங்குவதற்காகவே அவதரித்துள்ள திருப்புகழ் சுவாமிகளை ஒரு நொடியில் அடையாளம் கண்டு கொண்டார் அவர்.



வருங்காலத்தில் வள்ளிமலை வள்ளலாக விளங்கப் போகிறவரைத் தமது சீடராக ஏற்றுக் கொண்டு, உபதேசமும் செய்தருளினர். ஸ்ரீ ஆதி சங்கரர் அருளிய 'சிவ மானஸபஜா' என்ற ஐந்து சுலோகங்களில் ஒன்ருன 'ஆத்மாத்வம் கிரிஜாமதி' என்ற நான்காவது சுலோகத்தைக் கூறினர்.

> ஈசனே, நீயே என் ஜீவாத்மா. என் புத்திதான் பார்வதி தேவி. பிராணன் முதலிய வாயுக்கள் உன் பரிவாரங்கள். என் உடம்பே நீ வசிக்கும் கோயில். நான் ரசிக்கும் விஷயங்களும் அனுபவிக்கும் போகங்களும் உனக்குரிய பூஜையாகும். என் தூக்கமே சமாதி நிலை. காலால் நடக்கும் போதெல்லாம் நான் உன்னை வலம் வருகிறேன். என் வாயிலிருந்து வெளிவரும் சொற்களெல்லாம் உன்னைப் பற்றிய தோத்திரங்கள். நான் செய்யும் காரியங்களெல்லாம் உனக்கு நான் செய்யும் ஆராதனையாகும்.

சொந்த நலனுக்காக ஒரு காரியமும் செய்யாமல், சிந்தனை, சொல், செயல் மூன்றையும் நம்மைப் படைத்த பரம்பொருளுக்கே அர்ப்பணித்து வாழ்ந்தால், 'நான், எனது, உன், உனது என்ற வேறுபாடுகள் நீங்கி, பிரும்ம தத்துவத்தை உணர்ந்து உன்னத நிலையடைவாய்' என்று ஆசி வழங்கினர் குருநாதர். பின்னர் சீடரைப் பார்த்து, ''உன் பெரியோர்களும் சந்நியாசிகளாக வாழ்ந்திருக்கிருர்கள். உனது துறவு வாழ்க்கையும் சிறக்கப் போகிறது. உனக்குத் திருப்புகழ்தான் மாமந்திரம்'' என்று கூறியதும், சச்சிதானந்த சுவாமிகளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. உடல் நடுங்க, கைகூப்பி நின்ருர்.

பின்னர், சேஷாத்ரி சுவாமிகள், ஸ்ரீ ஆதி சங்கரரின் சுலோகத்தில் புதைந்துள்ள கருத்தைத் தெளிவாக விளக்கி விட்டு, ''இதே கருத்து கொண்ட பாட்டுக்கள் திருப்புகழில் இருக்கிறதா?'' என்று கேட்டார். உடனே சீடர், ''எனது யானும் வேருகி, எவரும் யாதும் யானுகும் இதய பாவனுதிதம் அருள்வாயே'' என்று வரும் திருப்புகழைப் பாடிக் காட்டி, அதன் பொருளையும் எடுத்துக் கூறினர். தமிழில் அதிகமாகப் பயிற்சியற்ற சேஷாத்ரி சுவாமிகள், ''வேத மந்திரங்களைக் காட்டிலும் ஆழமான கருத்துக்கள் திருப்புகழில் எளிமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்று தோன்றுகிறது. நீ திருப்புகழுக்காகப் பிறந்தவன். அந்த மகா மந்திரமே போதும். வேறு மந்திரங்கள் உனக்குத் தேவையில்லை. நீ வேத சாஸ்திரங்களைக் கற்க வேண்டிய அவசியமும் இல்லை. நீ திருப்புகழ் பாராயணம் செய்து கொண்டிருந்தாலே போதும். நீ வள்ளிமலைக்குப் போ. பிறகு நானும் அங்கு வருகிறேன்'' என்று கூறி சுவாமிகளுக்கு அருளாசி வழங்கி அனுப்பி வைத்தார்.

அருணுசலத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் திருப்புகழைப் பாடித் தந்தார். முருகனின் அம்சமான ரமண பகவான், அத் திருப்புகழைப் பரப்புவதற்காகப் பிறந்த வள்ளிமலை சுவாமிகளை, பராசக்தியின் வடிவான சேஷாத்ரி சுவாமிகளிடம் அனுப்பி வைத்தார். தாயின் அருட்பெருங் கருணையோடு, அரவணைத்து, அருளுபதேசம் செய்து, அன்னுரை வள்ளிமலைக்கு அனுப்பி வைத்தார் சேஷாத்ரி சுவாமிகள். அடி, முடி காண முடியாத அருணுசலத்தின் மகிமை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

சென்னையிலிருந்து எண்பதாவது மைலில், பெங்களூர் செல்லும் பாதையிலிருக்கும் திருவலம் என்ற தலத்திலிருந்து எட்டாவது மைலில் வள்ளிமலை இருக்கிறது. கந்த புராணமும் திருப்புகழும் அதன் சிறப்பை வானளாவப் பேசுகின்றன.

மான் உரு தாங்கிய இலக்குமிக்கும் சிவமுனிவராய் வந்த திருமாலுக்கும் திருமகளாக ஸ்ரீ வள்ளி பிறந்து, வளர்ந்து, ஓடியாடி, தினைப்புனங் காத்து, தவமியற்றி, முருகப் பெருமானை மணம் புரிந்த மலைப் பகுதி அது. இம்மலையைச் சுற்றி, மான் கருவுற்ற இடத்தைக் குறிக்கும் கருமான் ஓடை, மான் வள்ளியை ஈன்ற இடத்தைக் குறிக்கும் பெருமான் குப்பம், நம்பிராஜன் கோட்டை, பரண்கள், சுனைகள் எல்லாமே வள்ளியின் வரலாற்றுக்குச் சான்றுகள் கூறுகின்றன. இச்சா சக்தியான வள்ளியம்மை தவம் இருந்து, முருகனின் மீது காதல் கொண்டு, அவன் கரம் பற்றிய வள்ளிமலை, ஒரு சக்தி பீடமாகத் திகழ்கிறது. முருகவேளின் புனிதப் பாதங்கள் பதிந்து, புண்ணியமடைந்துள்ள வள்ளிமலைக்குச் செல்பவர்களுக்கு மரணமே கிடையாது என்பது அருணகிரியாரின் திருவாக்கு.

வள்ளிமலையின் அடிவாரத்தில் சண்முகநாதரின் ஆலயம் இருக்கிறது. மலையின் மீது, ஒரே பாறையில் அமைந்துள்ள சுப்பிரமணியர் ஆலயம் இருக்கிறது. அதுதான் மூலஸ்தானம். கீழே உற்சவமூர்த்தி வீற்றிருக்கிறார். மாசி மாதத்தில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில், தேர் மலையைச் சுற்றிக் கொண்டு வரும். பிறகு; வேடர்பறி என்ற உற்சவம் நடைபெறும்.

சண்முகநாதரின் ஆலயத்திற்குப் பின்புறம் சரவணப் பொய்கை இருக்கிறது. இதில் ஆடி மாதத்தில் தெப்போற்சவம் நடைபெறுகிறது.

மலையேறுவதற்குச் சௌகரியமாக படிக்கட்டுகள் அமைத்திருக்கிறார்கள். இத் திருப்பணி நடைபெறும் போது பழைய நாற்கால் மண்டபத்தை இடித்துப் புதுப்பிக்கும் நோக்கத்துடன், பழைய படியைப் பெயர்த்ததும் உள்ளிருந்து மட்டிப்பால் சாம்பிராணிப் புகை நறுமணத்துடன் வெளி வந்தது. வேலையாட்களின் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் ரத்தம் கொட்டியது. புகையடங்கியதும், உள்ளுக்குள்ளே ஒரு முனிவரின் உருவம் மங்கலாகத் தெரிந்ததாம். எல்லாரும் பயந்து போய் அந்தக் கல்லை அப்படியே மூடிவிட்டனர். அங்கு ஒரு ஜீவ சமாதி யிருப்பதாக இன்றும் நம்பப்படுகிறது.

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளால் 'வள்ளி மலைக்குப் போ' என்று அருளாசியோடு அனுப்பப்பட்ட ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் 1916-ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது அங்கு வந்து சேர்ந்தார். முதன் முறையாக வள்ளிமலைக்கு வந்த சுவாமிகள் அன்னதான சிவன் என்று அழைக்கப்பட்ட பழநி சிவனுடன் சேர்ந்து, பொருள் சேர்த்து, இவ் விழாவை வெகு சிறப்புடனும் கொண்டாடினர். ஊர் ஊராக, கிராமம் கிராமமாகத் திருப்புகழ் பாடிச் சென்று, திருப்புகழின்பால் ஈர்க்கப்பட்ட மக்களின் ஒத்துழைப்புடன் பெரும் அளவில் அன்னதானம்

செய்வித்தார். பின்னர், குருநாதரின் வாக்கை வேத வாக்காகக் கொண்டு, அந்த ஆண்டிலேயே மலையுச்சியிலுள்ள பர்வதராஜன் குன்றுக்கருகில் இருந்த ஒரு குகையைத் தமது இருப்பிடமாக்கிக் கொண்டார். அதுவே பின்னர் திருப்புகழ் ஆச்ரமமாயிற்று.

அந்த ஆச்ரமத்தைக் காணவும், அவர் வாழ்ந்த குகையில் இருக்கும் சுவாமிகளின் சமாதியைத் தரிசிக்கவும் வள்ளிமலைக்குச் சென்றோம்.

மலையடிவாரத்தில் ஆபத்சகாய விநாயகர் அமர்ந்திருக்கிறார். சமயத்தில் வந்து முருகவேளுக்கு உதவி புரிந்த பெருமானல்லவா? திருத்தணிக்கும் வள்ளி மலைக்கும் உள்ள தொடர்பை நினைவு படுத்துவது போல் அவர் அங்கு கம்பீரமாக வீற்றிருக்கிறார்.

அருகில் தினைப்புனம் காக்கும் வள்ளியம்மை சந்நிதியும் இருக்கிறது. வள்ளியம்மை ஆயலோட்டுவது போல் கவண் கயிற்றுடன் காட்சியளிக்கிறாள். இரு சந்நிதிகளையும் தரிசித்துக் கொண்டு படியேறினோம். மயில் மண்டபத்திலிருந்து திரும்பிப் பார்த்த போது சரவணப்பொய்கையும், காற்றில் அசைந்தாடும் மரங்களும், அதற்குப் பின்னால் காணும் சண்முகரின் கருவறை விமானமும், ராஜ கோபுரமும் எழிற் ஓவியமாகக் கண்ணையும் கருத்தையும் கவருகின்றன.

மலையேறுவது கடினமாகவேயில்லை. உச்சியில் தெரியும் கொடிமரத்தையும் ஆலய கோபுரத்தையும் பார்த்துக் கொண்டே நடக்கும் போது, ஆனந்தம் பொங்குகிறது. களைப்பும் சோர்வும் மறைந்து விடுகிறது.

முருகன் இயற்கையான சூழ்நிலையில் குகைக் கோயிலில் எழுந்தருளியிருக்கிறான். ஒரே பாறையின் மீது எழும்பியுள்ள கோபுரத்தையும், பாறையில் குடைந்த முன் மண்டபத்தையும் ஒரு கணம் நின்று ரசித்து விட்டு உள்ளே செல்கிறோம். அந்த மண்டபத்தின் இடப்புறத்தில் பாறையில் ஆயலோட்டும் வள்ளியம்மையின் எழிலுருவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

உள்ளே செல்ல விநாயகரைத் தரிசிக்கிறோம். மற்றும் நவவீரர், அருணகிரிநாதர், காசி விஸ்வநாதர், காசி விசாலாட்சி முதலானோர் வீற்றிருக்கக் காண்கிறோம். குகையைப் போன்ற கருவறையில் குகன், வள்ளி, தேவயானை சமேதராய் அருள்பாலிக்கிறார்.

அக் கோயிலில் ஒரு சுரங்கப் பாதை இருந்ததென்றும், அது இப்போது அடைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். அவ்வழியேதான் முருகன், வள்ளியம்மையை இருபத்தைந்து மைல் தொலைவிலுள்ள திருத்தணிகைக்கு சிறையெடுத்துப் போனதாகவும் தல வரலாறு கூறுகிறது.

கருவறையில் மூல மூர்த்திக்கு மேல் உருத்திராட்சப் பந்தல் போடப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் புத்தர் சிலையொன்று இருப்பதாக அர்ச்சகர் காட்டினார். எட்டிப் பார்த்தேன். அந்த இருட்டிலும் புகையிலும் அது சரியாகக் கண்ணுக்குத் தெரியவில்லை. அது சமண சந்நியாசியாகவும் இருக்கலாம்.

முருகனைக் கண் குளிரத் தரிசித்து விட்டுக் கோயிலை வலம் வந்தோம். அடுத்து திருப்புகழ் சுவாமிகள் ஆச்ரமத்திற்குச் செல்ல வேண்டும். வள்ளிமலை சுவாமிகளுடன் அந்த ஆச்ரமத்திலே இருந்தவர்கள் யாராவது உடன் இருந்தால் சௌகரியமாக இருக்குமே என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டேன் நான். அப்போது முன் மண்டபத்தில் ஒருவர் பாடிக் கொண்டிருந்த திருப்புகழ், காற்றில் மிதந்து வந்து, காதில் தேனாகப் பாய்ந்தது. அவரைப் பற்றி அர்ச்சகரிடம் விசாரித்தேன்.

''திருப்புகழ் பாராயணத்திற்காகத் தேவஸ்தானத்தார் அவரை நியமித்திருக்கிறார்கள். அவர் ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளின் சீடர். பல வருடங்கள் ஆச்ரமத்தில் அவருக்குத் தொண்டு செய்தவர். பெயர் ஜெயவேல்தாஸ். சுவாமிகளிடம் கற்ற திருப்புகழைத்தான் அவர் பாராயணம் செய்து கொண்டிருக்கிறார்'' என்றார் அர்ச்சகர் உற்சாகமாக.

'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' என்று நினைத்துக் கொண்டேன்.

சுவாமிகளின் ஆச்ரமத்தையும், அவர் சம்பந்தப்பட்ட பிற இடங்களையும் காண்பதற்கு ஜெயவேல்தாஸைவிட நல்ல துணையும் வழிகாட்டியும் கிடைக்க முடியுமா? அவரிடம் சென்று, நாங்கள் வந்த காரியத்தைக் கூறி, உடன் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர் உடனே ஒப்புக் கொண்டார். ''ஐயா, திருப்புகழ் சுவாமிகளைக் காணும் பாக்யம் எனக்கு இல்லை. அவர் திருப்புகழ் அமிர்தம் பொழிந்து நான் கேட்டதில்லை, தயவு செய்து சுவாமிகள் பாடும் பாணியிலேயே ஒரு திருப்புகழ் பாட்டுப் பாடுங்கள். அவரை மானசீகமாகவாவது கண்டு ஆனந்திக்கின்றேன்'' என்றேன் நான், உணர்ச்சிப் பெருக்குடன்.

ஜெயவேல்தாஸ் தம்புரா போன்ற கருவியில், தென்னங்குச்சிகளால் தாளம் போட்டுக் கொண்டே பத்து நிமிடங்கள் எங்களைத் திருப்புகழ் பேரானந்தத்தில் திளைக்கச் செய்தார்.

திருப்புகழ் அமுதத்தைக் காது குளிர, நெஞ்சு நிரம்பக் கேட்டுவிட்டுத் திருப்புகழ் ஆச்ரமத்தை நோக்கி நடந்தோம். ஜெயவேல்தாஸ்

வள்ளிமலை தரிசனம்



முன்னே செல்ல, நாங்கள் பின்னே சென்றோம். கரடு முரடான பாதையானாலும், வள்ளியும் முருகவேளும் ஓடித் திரிந்த மலைப் பிரதேசத்தில் நடக்கும் போது உள்ளத்தில் உவகை பொங்குகிறது.

போகும் வழியில் ஜெயவேல்தாஸ் தம்மைப்பற்றிய விவரங்களையெல்லாம் கூறிக் கொண்டு வந்தார்.

அவருக்கு அறுபத்தாறு வயது ஆகிறது. தமது பதினைந்தாவது வயதில் வள்ளிமலை சுவாமிகளிடம் வந்தவர், அவருடனேயே தங்கி விட்டார். வண்ணார் வகுப்பைச் சேர்ந்த ஜெயவேல்தாசுக்குப் பெற்றோர் இட்ட பெயர் நரசிம்மன் என்பது. குருநாதரான திருப்புகழ் சுவாமிகள் தான் அவருக்கு ஜெயவேல்தாஸ் என்ற பெயரைச் சூட்டினார். வள்ளிமலைக்கு அருகில் உள்ள போடிநத்தம் என்ற சிற்றூரைச் சேர்ந்த இவருக்குத் திருப்புகழை முறையாகக் கற்பித்து, முருக பக்தியை ஊட்டினார் சுவாமிகள். அவருக்குப் பணிவிடைகள் செய்ததைத் தமது வாழ்க்கையின் பெரும் பேறாகக் கருதுகிறார் ஜெயவேல்தாஸ். சுவாமிகள் இட்ட திருப்புகழ் பிச்சைதான் தற்போது அவரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

''அதோ' தெரிகிறது பாருங்க, அதுதான் பர்வதராஜன் குன்று. அதுக்கும் கன்னிக் குன்றுக்கும் இடையிலேதான் திருப்புகழ் ஆச்ரமம் இருக்கிறது'' என்றார் ஜெயவேல்தாஸ்.

எல்லோரும் நடந்து கொண்டிருந்தோம். சேஷாத்ரி மட்டும் சற்றுப் பின் தங்கிவிட்டு, ஒரு பாறையை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

''என்ன பார்க்கிறே?'' என்று கேட்டேன் நான்.

''இதான் கணேச கிரி போலே இருக்கு.... இதோ தலை, இதோ காது, அதோ தும்பிக்கை'' என்று விளக்க ஆரம்பித்து விட்டார். பாபு, காமிராவை 'அட்ஜெஸ்ட்' செய்யத் தொடங்கினார். காரோட்டி ஃபிலிப், 'யானை யானை' என்று குதிக்க ஆரம்பித்து விட்டான்.

''கணேச கிரி இது இல்லே! இன்னும் மேலே இருக்கு. நான் காட்டறேன் வாங்க'' என்று எங்களை அழைத்தார் ஜெயவேல்தாஸ். அசடு வழிந்து விட்டு அவரைப் பின் தொடர்ந்தோம் நாங்கள்.

இந்த மலையில் நான்கைந்து பாறைகள் ஒரு கோணத்தில் பார்த்தால் யானையைப் போலவே இருக்கின்றன. இயற்கையிலேயே அப்படி அமைந்திருக்கிறதா, அல்லது யாராவது சிற்பி பொழுது போகாமல் அப்படிச் செதுக்கி வைத்தாரா என்பது தெரியவில்லை!

''இந்த சுனையைப் பார்த்தீங்களா? இங்கேதான் சாமி வந்து குளிப்பாரு. சில சமயம் அதோ, அந்தப் பாறை மேலே வந்து உட்கார்ந்துக்குவாரு... இதோ, இங்கெல்லாம் நடப்பாரு'' என்று பழைய நாட்களை நினைவு கூர்ந்து, உணர்ச்சிப் பெருக்குடன் விளக்கிக் கொண்டே வந்தார் ஜெயவேல்தாஸ். வள்ளிமலை சுவாமிகள் பாதம் பட்ட இடங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டோம் நாங்கள்.

பர்வதராஜன் குன்றின் உச்சியை நெருங்கிக் கொண்டிருந்தபோது ''இங்கே வாருங்கள், ஓர் அதிசயம் காட்டுகிறேன்'' என்று எங்களை ஒரு பக்கமாக அழைத்துச் சென்றார் ஜெயவேல்தாஸ். வழுக்கும் பாறைகளில் ஜாக்கிரதையாகக் கால்களை ஊன்றி, அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம்.

''இந்தக் கல்லைப் பாருங்கள். எத்தனை வழுவழுப்பாக இருக்கிறது? குளிப்பதற்காக இதில்தான் வள்ளி மஞ்சள் அரைத்தாளாம். இதோ, இந்தப் பாறைகளைப் பாருங்கள். மஞ்சள் தெளித்த மாதிரியே புள்ளி புள்ளியாக இருக்கிறது. இப்பக் கூட ஒரு துணியில் தண்ணீரை நனைத்து, இந்தப் பாறையில் தேய்த்துப் பாருங்கள். மஞ்சள் அப்படியே ஒட்டிக் கொள்ளும்'' என்றார் ஜெயவேல்தாஸ்.

இதைக் கேட்டுக் கொண்டு அங்கு நின்றிருந்த பள்ளிச் சிறுவர்கள் சிலர் ஒரே ஓட்டமாக ஓடிப் போய்த் துணியை நனைத்துக் கொண்டு வந்து, பாறையில் தேய்த்துப் பார்த்தார்கள்.

''ஆமாண்டா. நெசந்தாண்டா. இதோ பாரு, துணி மஞ்சளாயிடுச்சு'' என்று ஆச்சரியத்துடன் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பின்னர், பர்வதராஜன் குன்றை அடைந்தோம். அங்கு பாறையில் செதுக்கப்பட்டஒரு சிவலிங்கம் இருக்கிறது. அதுதான் திருமால்கிரீச்வரர். திருமால் சிவ முனிவராக வேடம் தரித்து வந்து, சிவபெருமானை வழிபட்ட லிங்கம் இது. வள்ளிமலை கிராமத்திலிருக்கும் ஆலயத்தில் எழுந்தருளியிருப்பவரின் திருநாமமும் திருமால்கிரீச்வரரே.

பர்வதராஜன் குன்றில் திருமால்கிரீச்வரரைப் பார்த்ததும் நண்பர் டான்லப் கிருஷ்ணன் கூறிய நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வந்தது.

கடந்த ஆண்டு ஒருநாள் கடுமையான வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அப்போது ஊரெங்கும் வறட்சி, பஞ்சம், பட்டினி. மேய்ச்சல் நிலமின்றி ஆவினங்கள் பரிதவித்தன. அந்தச் சமயம் நண்பர் கிருஷ்ணனும், ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தைச் சேர்ந்த சுவாமி சாதுராம் அவர்களும் இரண்டு மூன்று நாட்கள் வள்ளிமலை திருப்புகழ் ஆச்ரமத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது சாதுராமுக்கு ஒரு யோசனை தோன்றியது. மழை பெய்யாவிட்டால், அருகிலிருந்த சுனையிலிருந்து நூறு குடம் தண்ணீர் எடுத்து வந்து, திருமால்கிரீச்வரருக்கு அபிஷேகம் செய்தால் மழை பொழியும் என்று திருப்புகழ் சுவாமிகள் சொன்னது நினைவுக்கு வரவே, அவ்வாறு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று அவர் தீர்மானித்து, கிருஷ்ணனிடம் கூறினார். உற்சாகம் மிகுந்த நண்பர் அந்த நற்பணிக்குக் கைகொடுத்து உதவ முன்வரவே, இருவரும் தேவார திருமுறைகள் பாடிக் கொண்டே, திருமால்கிரீச்வரருக்கு நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்வித்தனர். மேகராகக் குறிஞ்சியுடன் அபிஷேகம் தொடங்கியதுமே சூரியன் மேகங்களுக்குப் பின்னால் மறைந்து விட்டான். அபிஷேகம் முடிந்ததும் திடீரென்று கருமேகங்கள் சூழ்ந்தன. வானம் இருண்டது. இடி முழக்கத்துடன் வானமே பிளந்து விட்டது போல் மழை கொட்டித் தீர்த்து விட்டது. மறுநாள் முழுவதும் அப்பகுதியில் நல்ல மழை பெய்தது. மகான்கள் வாக்கு என்றுமே பொய்ப்பதில்லை.

பர்வதராஜன் குன்றிலிருந்து பார்த்தால் தொலேவில் சோளிங்கபுரமும், திருத்தணி மலேயும் தெரிகிறது. சிங்கமுகக் கடவுளேயும் சிங்கார வேலனேயும் மனத்திற்குள் தொழுது கொண்டு திருப்புகழ் ஆச்ரமத்தைக் காணச் சென்ருேம்.

திருப்புகழ் ஆச்ரமப் பகுதிக்குள் நுழையும் முன்பு, இதுதான் ''ஜாம்பவான் குன்று, காவல் பாரா'' என்று ஒரு பாறையைச் சுட்டிக் காட்டினுர் ஜெயவேல்தாஸ். அதைக் கடந்து உள்ளே காலடி எடுத்து வைத்தோம்.

மரம் செடிகளடர்ந்த அந்த ஆச்ரமத்தின் சூழ்நிலேயில் ஆழ்ந்த அமைதியும் இன்ப எழிலும் குடிகொண்டிருக்கின்றன. முருகன் புகழ் பாடி, மோனத் தவம் புரிந்த முனிவர் வாழ்ந்த இடமாகையால், அங்கு அழகு கொஞ்சுகிறது; அருள்வெள்ளம் பாய்கிறது; ஆன்ம ஒளி வீசுகிறது.

ஆச்ரமத்தின் மத்தியில் உள்ள ஓர் அறைக்குள் நுழைகிருேம். வள்ளிமலே சுவாமிகளின் உருவச்சிலே, கருணேயோடு நம்மை 'வா'வென்று அழைக்கிறது. பின்னுல், ஸ்ரீ அருணகிரிநாதர், ஸ்ரீ ரமண பகவான், ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் முதலிய பேரருளாளர்களின் உருவப் படங்கள் காட்சி தருகின்றன. அங்கு அன்புத் தொண்டு புரிந்து வரும் அன்பர் ஒருவர் கற்பூரார்த்தி காட்டுகிருர். ஜெயவேல்தாஸ் பாடுகிருர்:

சின்னமாம் ஏகதாரை திருக்கையிலேந்தி யிந்தச்
சென்னேமா நகரமெங்கும் திருப்புகழெந்நுந் தேனே
சொன்னமா மாரி போலச் சுவையமுதொழுகச் சொல்லும்
தன்னேநே ரில்லாச் சச்சிதானந்தன் பதங்கள் போற்றி.

அந்தக் கோயிலிலிருந்து வெளியே வந்ததும் அங்கிருந்த அன்பர் எங்களுக்குப் பானகம் கரைத்துத் தந்தார்.

''இது ரொம்ப நாளேயப் பழக்கம். ஆச்ரமத்திற்கு வருபவர்களேச் சுவாமி சும்மா அனுப்ப மாட்டார். அருந்துவதற்கு ஏதாவது கொடுத்தால்தான் அவருக்குத் திருப்தியாக இருக்கும். அதுவும் அவர் கையாலே கொடுக்க வேண்டும். அவர் கையாலே காப்பி போட்டுச் சாப்பிடணும். ஆகா... அது மாதிரிக் காப்பி நான் எங்கேயும் சாப்பிட்டதில்லே... குருநாதன், தாயாகக் கருணே காட்டுவார். குழந்தையாக விளேயாடுவார். தந்தையாகக் கடிந்து கொள்வார். ஆண்டவனுக அருள்பாலிப்பார்....'' என்று சுவாமிகளின் பெருமைகளேப் பேசிக் கொண்டே பொங்கிப் பாறைக்கு எங்களே அழைத்து வந்தார் ஜெயவேல்தாஸ்.

'பொங்கி' என்பது வள்ளிமலேயின் காவல் தெய்வம். அது வள்ளியம்மையின் உயிர்த்தோழி. பார்வதி, லட்சுமி, சரஸ்வதி மூன்று பேரும் ஒருவராக அமைந்த மாபெரும் சக்தி அது. அந்தப் 'பொங்கி'யை அந்தப் பாறை உருவில் தரிசித்து, பூஜைகள் செய்து வந்தார் வள்ளிமலே சுவாமிகள். ஆச்ரமத்திற்கு வருபவர்களேயெல்லாம் அதை வலம் வரச் சொல்லுவார். தற்போது அப்பாறைக்கு முன் வள்ளியின் உருவச் சிலேயொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.



திருப்புகழ் சுவாமிகள் ஆச்ரமத்திற்குப் போகும் வழி

பொங்கியின் அருள் சுவாமிகளுக்குப் பரிபூரணமாக இருந்தது. நினைத்த போது அவருக்கு அவள் தரிசனம் அளித்திருக்கிருள்.

ஒரு சமயம் சுவாமிகள் சென்னைக்கு வந்திருந்த போது, பத்து வயதுச் சிறுமி ஒருத்தி அவரிடம் வந்து, ''திருப்புகழ் பாடுங்கள் தாத்தா... கேட்க வேண்டும் போல் ஆசையாக இருக்கிறது'' என்று கெஞ்சினுள். குழந்தை கேட்டது தெய்வமே கேட்பது போல இருந்தது சுவாமிகளுக்கு. உடனே அந்தத் தெருவிலுள்ள ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து, ஒரு திருப்புகழை ராக, தாளத்துடன் அருமையாகப் பாடினுர். மெய்ம் மறந்து போன அச் சிறுமி, ''நானும் திருப்புகழ் பாடுவேன். கேட்கிறீர் களா?'' என்று வினவ, ''பாடம்மா, அதை விட இன்பம் எனக்கு வேறு என்ன இருக்கிறது'' என்று சுவாமிகள் கூறினுர். உடனே அந்தப் பெண் 'விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்' என்ற திருப்புகழை மோகன ராகத்தில் மெய் சிலிர்த்திடப் பாடினுள். அதில் அப்படியே லயித்துப் போன சுவாமிகள், அச்சிறுமியை இறுகத் தழுவிக் கொண்டு உச்சி முகர்ந் தார். பேரானந்தத்தில் அப்படியே சொக்கிப் போனுர்.

அப்போது அந்தச் சிறுமி, ''நீங்க இவ்வளவு சந்தோஷப்படறீங் களே, நான் ஒண்ணு கேட்கிறேன். தருகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''இதென்னம்மா கேள்வி? உனக்கு என்ன வேண்டுமோ கேள். என் உடல், பொருள், ஆவி மூன்றையும் உனக்குக் கொடுத்தாலும் போதாதே'' என்ருர்.

''அதெல்லாம் வேண்டாம். உங்க வெத்திலைப் பெட்டியைக் கொடுங் கள், போதும்'' என்ருள் சிறுமி, சிரித்துக் கொண்டே.

சுவாமிகளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவர் சற்றும் எதிர் பாராத வெகுமதியை அல்லவா சிறுமி கேட்கிருள்!

''இந்தாம்மா, நீயே வெச்சுக்கோ...'' என்று தன் வெற்றிலைப் பெட்டியை அவளிடம் கொடுத்தார் சுவாமிகள். அதைப் பெற்றுக் கொண்ட சிறுமி ஓடி மறைந்து விட்டாள்.

மூன்று நாட்கள் கழித்து, சுவாமிகள் வள்ளிமலைக்குச் சென்றார். அங்கு அவருக்குப் பேராச்சரியம் ஒன்று காத்திருந்தது. சென்னையில் சிறுமியிடம் அவர் கொடுத்த வெற்றிலைப் பெட்டி குகை வாயிலில் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து அதிசயித்தார். அதை எடுத்துத் திறந்து பார்த்தார். அவர் அதில் வைத்திருந்த ஐந்து ரூபாய் நோட்டும், சில்லறைக் காசுகளும் அப்படியே இருந்தன. அத்துடன் அதில் ஒரு துண்டுக் காகிதமும் இருந்தது. அதில், ''உன்னை நான் மறவேன். என்னை நீ மறவாதே—பொங்கி'' என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்த சுவாமிகளின் கண்கள் பனித்தன. அவர் நெஞ்சம் நெகிழ்ந்தது. ''பொங்கித் தாயே! நான் உன் அடிமையம்மா'' என்று கதறினார். அன்று முதல் அவர் பொங்கித் தெய்வத்தை வழிபடத் தொடங்கினார்.

மற்றொரு மறக்க முடியாத நிகழ்ச்சியும் உண்டு.

சென்னையைச் சேர்ந்த கமலம்மாள் என்ற இசையாசிரியை வள்ளிமலை சுவாமிகளின் பக்தை. அந்த அம்மாளுக்கு இருந்த காசநோய் குணமாவதற்காக சுவாமிகள் 'இருமலுரோக' என்ற திருப்புகழைப் பாடி வரும்படி பணித்திருந்தார். அந்த அம்மாளும் அந்தப் பாட்டைத் தவறாமல் முறையுடன் ஓதி வந்தார்.

ஒரு நாள் அந்த அம்மாளின் வீட்டுக்கு ஒரு குறச் சிறுமி வந்தாள். அன்று அந்த வீட்டில் திதி. எனவே, எல்லோரும் ஆசாரத்துடன் இருந்தனர். இந் நிலையில் அவள் பிச்சை கேட்டுக் கொண்டு கூடத்திற்கே வந்து விட்டாள். கோபம் கொண்ட அந்த அம்மாள் அச் சிறுமியை விரட்டினாள். ஆனால், அந்தச் சிறுமி சற்றும் பயந்ததாகத் தெரியவில்லை. அவள், கமலம்மாவை நோக்கி, '''இருமலு ரோகம்' மட்டும்தான் சொல்லிக் கொடுத்தானா?'மதியால் வித்தகனாகி' என்ற பாட்டைச் சொல்லித் தரவில்லையா?'' என்று கேட்டு விட்டு சிரித்துக் கொண்டே வெளியே ஓடி எங்கோ மறைந்து விட்டாள்.

வீடு தேடி வந்தது பொங்கித் தெய்வம் என்பது பின்னர்தான் தெரிந்தது. அத்தகைய பேறு பெற்ற கமலம்மாள்தான் திருப்புகழ் ஆச்ரமத்தில் இருக்கும் சுவாமிகளின் திருவுருவச் சிலையைச் செய்து தந்தவர்.

சுந்தர சுவாமிகள் என்பவர் ஒரு சமயம் வள்ளிமலை சுவாமிகளிடம், ''இம்மலையில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கும் வள்ளியம்மைக்கு வேறு ஏதாவது பெயர் உண்டா?'' என்று கேட்டார். அதற்குச் சுவாமிகள் ''அதற்கென்ன, இன்றோ, நாளையோ தெரிந்து கொண்டு விடலாமே'' என்று சாதாரணமாகக் கூறினார்.

மறுநாள் சுவாமிகள் இருவரும் மலையை விட்டு இறங்கி நடந்து வந்துகொண்டிருந்த போது, பத்து வயது சிறுமியொருத்தி, 'விரகற நோக்கியும்' என்ற திருப்புகழைப் பாடிக் கொண்டு சுவாமிகளை நோக்கி வந்தாள். சென்னையில் முன்பு வந்த சிறுமி பாடியதும் அதே பாட்டுத்தான்!

திருப்புகழில் லயித்திருந்த சுவாமிகளை அணுகி அச் சிறுமி, ''சாமீ, எனக்குப் பசிக்குதுங்க. ஏதாவது கொடுங்க'' என்று கேட்டாள். அதற்கு சுவாமிகள், ''இந்த நேரத்தில் இந்த இடத்தில் சாப்பாடு கேட்கறியே. என்னிடம் ஒன்றும் இல்லையே அம்மா'' என்று கூறவும், அந்தப் பெண், ''உன்னிடம் அன்பு கூடப் பொங்கி வராதா?'' என்று கேட்டாள். அப்போதுதான் சுவாமிகளுக்குப் பிச்சை கேட்டுவந்தவள் வள்ளியம்மையென்றும், தன்னைப் பொங்கி என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவே அவ்விதம் பேசியதாகவும் அறிந்து கொண்டார். ''அம்மா, உன்னை யாரு என்று தெரியாமல் ஏதேதோ பேசி விட்டேனே! என்னை மன்னித்து விடம்மா'' என்று கூறி, அப் பெண்ணின் கால்களைக் கண்ணீர் நனைக்க, அப்படியே விழுந்து கும்பிட்டார். சுவாமிகள் எழுந்து பார்த்த போது அந்தப் பெண் அங்கே இல்லை. எங்கோ மறைந்து விட்டாள்.

**பொ**ங்கிப் பாறையின் மீது குங்குமத்தில் மயிலும் வேலும் பாம்பும் வரையப்பட்டிருந்தன.


''சாமி இருந்த நாள்லேருந்து இப்படிப் படம் வரைந்துதான் கும்பிடறது வழக்கம். சில நாள் சாமியே பூஜையிலே வந்து கலந்துக்குவார். பொங்கிப் பூஜை ஆனப்பறம்தான் ஆச்ரமத்திலே எல்லாரும் சாப்பிடுவோம்....'' என்றார் ஜெயவேல்தாஸ்.

''சாமி என்ன பூஜை செய்வார்?'' என்று கேட்டேன் நான்.

''அவர் பூஜை செய்து நாங்க பார்த்ததில்லே. திருப்புகழ்தான் அவருக்குப் பூஜை, மந்திரம், தியானம், தபஸ் எல்லாம். மலையை விட்டுக் கீழே இறங்கி எங்கேயாவது பயணம் போகிற போது பொங்கிப் பாறை கிட்டே வந்து கையைக் கூப்பிக் கும்பிட்டு விட்டுப் போவார். அவ்வளவுதான்'' என்று கூறிய தாஸ், எங்களை சச்சிதானந்த சுவாமிகள் சமாதிக் கோயில் இருக்கும் குகைக்குள்ளே அழைத்துச் சென்றார்.

எல்லாரும் பணிவாகக் குனிந்து, மிக்க மரியாதையாக அந்த குகைக்குள் நுழைந்தோம். திருப்புகழ் மாமந்திரம் எந்நேரமும் ஒலித்து, எதிரொலித்து, முருகானந்தத்தில் மூழ்கி, கருணைக் கடலாக விரிந்து, வையத்தையே வாழ வைத்த வள்ளிமலை சுவாமிகளின் இதய குகைக்குள் நுழைவது போன்ற உணர்வு மேலோங்க, பயபக்தியுடன், வணங்கிய தலையுடன் உள்ளே நுழைந்தோம்.

மலையடிவாரத்திலுள்ள சண்முகர் ஆலயமும் சரவணப் பொய்கையும்



ஐம்பத்து நான்கு வருடங்களுக்கு முன்பு சச்சிதானந்த சுவாமிகள் மலையுச்சிக்கு ஏறி வந்த போது, அந்த இடம் சப்பாத்திக் காடாக இருந்தது. கல்லும் புதரும் நிறைந்து, சிறுத்தையும் புலியும், பாம்பும் தேளும் நடமாடும் இடமாகக் காட்சி தந்தது. சுவாமிகள் வந்த பிறகு சிறுகச் சிறுக அந்தப் பகுதியைச் சீராக்கி, பாதை அமைத்து, பக்தர்கள் வந்து போவதற்கேற்ற வசதிகளைச் செய்து வைத்தார்.

சுவாமிகள் மலைக்கு வந்த போது அந்தக் குகை ஒருவர் ஊர்ந்து செல்லும் அளவுக்குத்தான் இருந்தது. சில பக்தர்களின் உதவியுடன் மண்ணைத் தோண்டி எடுத்து, சுவாமிகள் இதைப் பெரிய குகையாக்கினர்.

அங்கு மண்ணைத் தோண்டும் போது ஓர் அதிசயம் நடந்தது. பூமிக்கு அடியில் மூன்று எலும்புக் கூடுகள் தென்பட்டன. மூன்று மகான்கள் பத்மாசனத்தில் அமர்ந்து நிட்டையில் ஆழ்ந்திருப்பது போலவே அவை காணப்பட்டன. அந்தத் தவயோகிகள் யாரோ? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் வாழ்ந்தார்களோ? அது முருகனுக்கே வெளிச்சம்.

சுவாமிகள் அந்த எலும்புகளை யெல்லாம் சேகரித்து,குகைக்கு வெளியில் தனித் தனியே புதைத்து,அரசு, வேம்பு, வில்வச் செடிகளை அவற்றின் மீது நட்டு வைத்து, அந்த ஜீவ சமாதிகளுக்குத் தினமும் பூஜை செய்து வந்தார். தற்போது ஓங்கி வளர்ந்திருக்கும் அம் மரங்களைச் சுற்றி மேடை கட்டப்பட்டிருக்கிறது. அந்த நிழலில் சற்று நேரம் அமர்ந்தாலே எல்லையற்ற மனச்சாந்தி ஏற்படுகிறது.

சுவாமிகள் ஆச்ரமத்தைச் சீர்படுத்திக் கொண்டிருந்த போது தெய்வமும் அவருடன் ஒத்துழைத்ததற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

ஒரு நாள் நள்ளிரவில் சீடர்களெல்லாம் நித்திரையில் ஆழ்ந்திருந்த போது, வயோதிகர் ஒருவர், கையில் மண்வெட்டியுடன் சுவாமிகளிடம் வந்து பசிக்கு உணவு வேண்டும் என்று கேட்டார். அவரை யார் என்று வினவ, தன் பெயர் மண்வெட்டிப் புலவர் என்றும், அருகிலுள்ள சுனையைச் சீர்படுத்தி, சுற்றுப்புறத்தைச் சுத்தமாக்கி யுள்ளதாகவும் கூறினர். உடனே சுவாமிகள் மனம் இரங்கி சட்டியில் இருந்த களியை எடுத்து அவர் மண்வெட்டியில் வைக்க,அதை ருசித்துச் சாப்பிட்டு விட்டு அந்த வயோதிகர் போய் விட்டார்.

சற்றைக்கெல்லாம் சீடர்களை எழுப்பி, நடந்த விவரத்தைக் கூறினர் சுவாமிகள். தாமாகவே வந்து உதவி செய்து விட்டுப் போன வயோதிகரைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளும் ஆவலுடன் சீடர்கள் புறப்பட்டார்கள். அந்தக் கிழவர், கணேசகிரி பக்கம் போவதைக் கண்டு வேகமாக நடந்தார்கள். ஆனல், அடுத்த கணம் வயோதிகரின் தோற்றம் மறைந்து விட்டது.

ஏமாற்றத்துடன் திரும்பிய சீடர்கள் சுனையின் அருகில் சென்று பார்த்தார்கள். அங்கு புல் பூண்டுகள் எல்லாம் அகற்றப்பட்டு நிலமெல்லாம் ஒழுங்காகக் கொத்தி விடப்பட்டிருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். பல பேர் பல நாட்கள் பாடுபட்டுச் செய்து முடிக்க வேண்டிய அந்த

வேலையை ஒரே நாளில் செய்து முடித்தவர், பிட்டுக்கு மண் சுமந்த பெருமானாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஒரு சமயம் இந்தக் குகையில் அமர்ந்து சமாதி நிட்டை கூட வேண்டும் என்று எண்ணிய சுவாமிகள், உள்ளே சென்று, சீடர்களை அழைத்து, ஒரு பாறையைக் கொண்டு குகை வாயிலை அடைத்து விடும்படியும் ஏழு நாட்கள் கழித்துப் பாறையை அகற்றும்படியும் உத்தர விட்டார். சீடர்கள் முதலில் தயங்கினார்கள். சுவாமிகளின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ என்று அஞ்சினார்கள். ஆனால், சுவாமிகள் தைரிய மொழிகள் கூறவே, அவர்கள் குகை வாயிலைப் பாறையால் அடைத்து விட்டார்கள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு திருப்புகழ் பாராயணத்திற்காகக் கோட்டைநத்தம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சண்முக ரெட்டியாரும், முருகேச வாத்தியாரும் ஆச்ரமத்திற்கு வந்த போது, சுவாமிகள் குகைக்குள் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு, சீடர்களைக் கடிந்து கொண்டார்கள். சுவாமியைப் பட்டினி போட்டுக் கொன்ற பாவத்திற்கும், போலீசாரின் தண்டனைக்கும் ஆளாக நேரிடும் என்று எடுத்துச் சொல்லி, கடப்பாரையால் குகை வாயிலை அடைத்திருந்த பாறையை அப்புறப்படுத்தி விட்டு, உள்ளே வேகமாக நுழைந்தார்கள்.

சுவாமிகள் பேச்சு மூச்சற்று, நிர்விகல்ப சமாதி நிட்டையில் ஆழ்ந்திருந்தார்கள். வெகுநேரம் கையைத் தட்டி அழைத்த பிறகே, 'தண்டபாணி' என்ற திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே சுவாமிகள் கண் திறந்து பார்த்தார். குகை திறக்கப் பட்டிருப்பதையும் சுற்றிலும் சீடர்கள் நின்று கொண்டிருப்பதையும் கண்டு தமது நிட்டையைக் கலைத்ததற்காக அவர்களைக் கடிந்து கொண்டார். பிறகு அவர்கள் தக்க விளக்கம் அளித்த பின்னரே சுவாமிகள் சமாதான மடைந்தார்.

இந்தக் குகையில்தான் சுவாமிகள் அடியார்களுடன் திருப்புகழ் பாராயணம் செய்வது வழக்கம்.

ஆச்ரமம் ஏற்பட்ட புதிதில் சுவாமிகளைக் கவனித்துக் கொள்வதற்கோ, அவருடன் சேர்ந்து திருப்புகழ் பாடுவதற்கோ ஒருவருமேயில்லை.

திருப்புகழ் சுவாமிகள்



அந்த இடத்திற்கு வருவதற்கே கிராமவாசிகள் பயந்தனர். அப்போதெல்லாம் சுவாமிகள் சப்பாத்திப் பழத்தைச் சாப்பிட்டே வாழ்ந்து வந்தார். பின்னர், கிராம மக்கள் அங்கு ஒரு சட்டியை வைத்து, அதில் கூழோ, கஞ்சியோ, களியோ வைத்து விட்டுப் போகும் பழக்கத்தைத் தொடங்கினர்கள். மைசூர் அரண்மனையில் அறுசுவை விருந்துண்டு பழக்கப்பட்டவர், அந்தப் பழங் கஞ்சியையும் அதே ஆனந்தத்தோடு பருகினர். அந்தக் கஞ்சியை யாசித்து வந்தவர்களுக்கும் அன்புடன் அளித்து வந்தார். அத்துடன், தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் திருப்புகழ் அமுதத்தை வாரி வாரி வழங்கினர் அந்த வள்ளல்.

சுவாமிகளுக்கு அக்கம்பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து நிறையச் சீடர்கள் கிடைத்து விட்டார்கள்.பகலில் கழனியிலும் தோட்டத்திலும் வேலை செய்து விட்டுப் பொழுது சாய்ந்ததும் அவர்கள் மலை ஏறி வந்து திருப்புகழ் பாராயணத்தில் உற்சாகமாகக் கலந்து கொள்வார்கள். எந்த சாதியானலும், எந்த மதத்தைச் சேர்ந்தவரா யிருந்தாலும், எவ்வித வேற்றுமையும் பாராட்டாமல் தாம் பெற்ற இன்பத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டார் சுவாமிகள். சம்சாரத்தில் உழன்ற பாமர மக்களை சன்மார்க்கத்தில் அழைத்துச் சென்றார்.

''இந்தக் குகையில்தான் முருகன், வள்ளியைத் திருமணம் செய்து கொண்டதாகச் சாமி சொல்லுவாரு. இது கூட முன்னே குகையா யில்லையாம். முருகன்தான் ஒரு பாறையாலே இந்த இடத்திலே ஒரு கூரை போட்டு ரகசியமா கல்யாணம் செய்துக்கிட்டாரு'' என்று கூறினர் தாஸ். இதைக் கேட்டு சேஷாத்ரி ஒரு மாதிரி சிரித்தார்.

''உண்மைதானுங்க. அதோ தெரியுதே, அந்தப் பாறையைப் பாருங்க. முருகன் வேலாயுதத்தால் அதை இரண்டாகப் பிளந்து ஒரு பாகத்தை எடுத்து அப்படியே இங்கே வீசிப் போட்டுட்டாரு. அந்தப் பாறையை நல்லாக் கவனிச்சுப் பாருங்க. அதுலே பிளந்து எடுத்ததுதான் இந்தக் கூரைன்னு நீங்களே ஒப்புக்குவீங்க. எனக்கு எப்படி இந்த விஷயமெல்லாம் தெரியும்? எல்லாம் சாமி சொன்னதுதான்'' என்று ஜெயவேல் தாஸ் வெள்ளை உள்ளத்தோடு மீண்டும் கூறினர். அவர் கூறியதைப் போலவே இரு பாறைகளையும் சற்று நேரம் உற்றுப் பார்த்தோம். அருகிலிருக்கும் கன்னிக் குன்றைச் சேர்ந்த ஒரு பாறையின் பாதிதான் இந்தக் குகைக்குக் கூரையாக அமைந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. இயற்கையின் இத்தகைய அதிசயங்களுக் கெல்லாம் கூறப்படும் காரணங்களை நம்புவதும் நம்பாததும் அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்த விஷயம்.

அந்தக் குகை ஒரு குடிசையைப் போலவே இருக்கிறது. கையை மேலே உயர்த்தினல் கூரையைத் தொடலாம். உள்ளே சுற்றிலும் சிறு மேடை கட்டி வைத்திருக்கிறார்கள். அதனுள் சுமார் எண்பது பேர் நெருக்கமாக உட்கார்ந்து கொள்ளலாம்.

அங்கு சில நாட்கள் விடிய விடியத் திருப்புகழ் பாராயணம் நடைபெறுவது வழக்கம். பாராயணம் முடியும் வரை விபூதிச் சட்டியில்

கற்பூரம் எரிந்து கொண்டே யிருக்கும். சாம்பிராணி புகை குகையைச் சூழ்ந்திருக்கும். ஊதுவத்தியின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். பாராயணம் முடிந்ததும், சுவாமிகள் எல்லோருக்கும் திருநீறு கொடுப்பார். பாராயணத்தின் போது பக்தர்கள் இறுதிவரை அமர்ந்திருந்து, சுவாமிகளிடமிருந்து திருநீறு பெறுவதையே பெரும் பாக்கியமாகக் கருதினர்கள். தொடக்கத்திலிருந்து, சுவாமிகள் மலையை விட்டு இறுதியாக இறங்கிய 1948-ம் ஆண்டு வரை அந்த விபூதிச் சட்டி உடையாமல் அங்கேயே இருந்தது.

1950-ம் ஆண்டு நவம்பரில் சென்னையில் சுவாமிகள் மகாசமாதியடைந்த போது சீடர்கள் அவர் திருமேனியை உயிருக்கு உயிராய் அவர் நேசித்து வந்த வள்ளிமலைக்குக் கொண்டு வந்து திருப்புகழின் தேனிசையால் புனிதம் அடைந்திருந்த குகையிலேயே அவருக்கு சமாதிக் கோயில் அமைத்தனர். ஆண்டு தோறும் இங்கு குருபூஜை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சமாதியின் மீது ஒரு சிவலிங்கமும் தட்சிணாமூர்த்தியின் சிறிய விக்ரகமும் இருக்கின்றன. அந்தச் சிலையில் ஒரு காளைக் கன்றுக்குட்டி தலையை நீட்டிக் கொண்டிருப்பது வெகு அழகாயிருக்கிறது.

எதிரிலிருக்கும் பிறையில் கடவுளர் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வள்ளிமலை சுவாமிகளின் படமும், வேறு சில சாதுக்களின் படங்களும் இருக்கின்றன. ஒரு தூங்கா விளக்கும் எரிந்து கொண்டிருக்கிறது.


''இவையெல்லாம் சுவாமிகள் வைத்துப் பூஜைசெய்த படங்களா?'' என்று கேட்டேன் நான்.

''இல்லை. இல்லை. அவருக்கப்புறம் தான் வந்தது. சாமி இருக்கிற போது அருணகிரிநாதரின் பெரிய படம் ஒன்றுதான் இருக்கும். அதைத் தவிர வெள்ளை எருக்கன் வேர்கள் ரெண்டு இருக்கும்'' என்றார் தாஸ்.


''அவையெல்லாம் இப்போ எங்கே இருக்கின்றன?''

''அருணகிரிநாதர் படம் மெட்ராஸ் கோபாலபுரத்திலிருக்கும் கல்யாணராமய்யர் வீட்டில் இருக்குன்னு கேள்வி. அவர்தான் சாமியின் வாழ்க்கையைப் பற்றி விரிவா 'வள்ளிமலை வள்ளல்'னு ஒரு புஸ்தகம் எழுதியிருக்கார். இங்கேயிருந்த வெள்ளெருக்கன் வேர் எங்கே போச்சோ தெரியாதுங்க... ஒரு அடி ஓசரத்தில் ரெண்டு வேர் இருக்கும். அதோட நிழல் சுவத்திலே விழும். அதைக் காட்டி, 'வள்ளியம்மா கும்பிட்டுக்கிட்டிருக்கா, பாருடா'ன்னு சாமி சொல்லுவார். பார்த்தா அப்படியே தான் இருக்கும்'' என்று கூறி விட்டுப் பழைய நாட்களின் நினைவுகளில் மூழ்கியபடி சற்று நேரம் பேசாமல் நின்றிருந்தார் தாஸ். பின்னர், சுவாமிகளின் சமாதியை வலம் வந்து, கீழே விழுந்து வணங்கிவிட்டு தென்புறமுள்ள சிறிய வழியாகக் குனிந்து வெளியே வந்தோம்.

அடுத்து ஜெயவேல்தாஸ் எங்களை 'சூரியன் காணு சுனை'க்கு அழைத்துச் சென்றார். தேனும் தினை மாவும் தின்று விட்டு வள்ளியும் முருகனும் இந்த நீரைத்தான் பருகினர்களாம். கீழுள்ள குகைக்குப்



சமாதி இருக்கும் குகை



சுவாமிகளின் சமாதி

பின்னல் ஒரு பாறையின் மீது ஏறி அங்கு போக வேண்டும். ஏறும் போது அந்தப் பாறையில் சில காலடிகளைக் காட்டினுர் தாஸ். களி மண்ணில் காலடி பதிந்தால் எப்படி யிருக்குமோ அப்படி இருந்தது.

''இதோ பாருங்க. இது முருகனின் பாதம். பார்த்திங்களா, இது தான் கட்டை விரல். ஒண்ணு ரெண்டு, மூணு நாலு, அஞ்சு விரல்கள் அப்படியே இருக்கு. இந்தப் பாதம் சின்னதா இருக்கு பார்த்திங்களா ... இது வள்ளியின் பாதம். முருகனும் வள்ளியும் விளையாடிக்கிட்டே போன அடையாளங்கள். இதையெல்லாம் சாமி காட்டிக் கதை சொல்லுவார், இன்னும் நிறையப் பாதங்கள் இருந்தன. இந்தப் படிக்கட்டு வெட்டின போது எல்லாம் மறைஞ்சு போச்சு...... நான் வெட்டாதீங்கன்னேன். கேட்கலே'' என்று குறைப்பட்டுக் கொண்டார் தாஸ். நாங்கள் ஆச்சரியத்துடன் பாதங்களை ஆராய்ந்தோம்.

''இதோ பாருங்க. குதி கால் அடையாளம். வள்ளி திரும்பி வர போது குதிகாலே அழுத்திக்கிட்டு வந்திருக்கா. இது கூட சாமி சொன்னது தான்'' என்று உற்சாகத்துடன் காட்டினுர் தாஸ்.

மேலே ஏறிச் சென்ருேம். ஒரு பெரிய பாறையின் அடியில் சுனை இருக்கிறது. அதன் மீது சூரிய வெளிச்சம் படுவதே கிடையாது. இப்போது பாறையைச் சற்று வெட்டி விட்டிருப்பதால் தண்ணீர் கண்ணுக்குத் தெரிகிறது.

அங்கு ஒரு சிறு குகை இருக்கிறது. சென்னையில் சுவாமிகளிடமிருந்து வெற்றிலைப் பெட்டியைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட தெய்வச் சிறுமி, அந்தப் பெட்டியை இந்தக் குகையில்தான் கொண்டு வந்து வைத்ததாகக் கூறப்படுகிறது. அங்கு ஒரு சமயம் சுவாமிகள் ஏழு நாட்கள் சமாதி நிட்டையில் ஆழ்ந்திருந்தார். அப்போதும் சீடர்கள் வந்து அதைக் கலைத்து விட்டார்கள்.

அங்கிருந்து கீழிறங்கினுல் மேற்கே சற்று உயரத்திலிருக்கும் அருணகிரிநாதர் குகைக்குச் செல்லலாம். அது தற்போது மூடப்பட் டிருக்கிறது. அந்தக் குகையில் சுவாமிகள் பன்னிரண்டு நாட்கள் அன்ன ஆகாரம் இன்றி நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்திருந்தார். பன்னிரண்டாம் நாள் திருமதி சீதாலட்சுமி என்ற திருப்புகழ் அடியார், பசும்

வெண்ணெயைக் கொண்டு வந்து சுவாமிகள் தலையில் தேய்க்க, அது கொதித்து உருகி நெய்யாயிற்று. பின்னர் சுனையிலிருந்து குடம் குடமாக நீரைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்வித்ததும் சுவாமிகள் நிட்டை கலைந்தார்.



பொங்கிப் பாறை

அடுத்து நாங்கள் கணேச கிரியைக் காணச் சென்றோம். யானை முன்னங்காலை மடித்து அமர்ந்திருப்பது போல் அந்தப் பாறை அமைந்திருக்கிறது. அதை ஒட்டினாற் போல் நிறைய மரங்கள் வளர்ந்து விட்டிருப்பதால் அந்த 'யானை'யைச் சரிவரப் படம் பிடிக்க முடியவில்லையே என்று பாபு குறைப்பட்டுக் கொண்டார். கணேச கிரிக்குக் கீழே இரண்டு விநாயகர் சிலைகள் இருக்கின்றன.

வள்ளியைப் பயமுறுத்தி, தம்பியின் கையில் பிடித்துக் கொடுப்பதற்காக அண்ணன், யானை உருவம் தாங்கி வந்து லீலைகள் புரிந்த இடம் இது தான் என்று கூறுகிறார்கள்.

சுவாமிகள் ஆச்ரமத்தில் இருந்தபோது கணேசகிரியின் அடிவாரத்தில் அநேக பக்தர்கள் ஒரு பேரொளியைப் பார்ப்பதுண்டாம். அது அங்கு வாழும் நல்லபாம்புகளின் முடியில் இருக்கும் மாணிக்க, ரத்தினக் கற்களிலிருந்து வீசும் ஒளியென்றும் அவர்கள் நம்பினார்கள்.

கணேச கிரியைத் தரிசித்து விட்டு, வரும் வழியில் ஒரு மாட்டின் சிலை வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, ''இது என்ன?'' என்று விசாரித்தேன்.

''இது 'சிங்காரி' என்ற பசுவின் சமாதி. அந்தப் பசுவை சாமி ரொம்ப அருமையா வளர்த்தாரு'' என்றார் தாஸ்.

சுவாமிகளின் பக்தரான ஏகாம்பர முதலியார், ஆச்ரமத்திற்கு அன்புடன் அளித்த பசு அது. பழனிக் கோயிலில் 'சிங்கார மயில் ரூப வாகன நமோ நம' என்ற திருப்புகழ் வரியை முதன் முதலாகக் கேட்டு மனத்தைப் பறிகொடுத்த சுவாமிகள், அந்நிகழ்ச்சியின் நினைவாக அப் பசுவிற்கு 'சிங்காரி' என்ற பெயரிட்டு அழைத்தார்.

ஏகாம்பர முதலியார் தம் குடும்பத்தோடு ஒரு சமயம் பழநிக்குச் சென்றிருந்தபோது, புதிதாகத் திருமணமாகியிருந்த அவருடையமகனும் புது நாட்டுப் பெண்ணும் குளத்தில் தவறி விழுந்து விட்டார்கள். கரையிலிருந்தோர் கதறியழுது கொண்டிருந்த போது, தெய்வச் செயலாக யாரோ ஒருவர் திடீரென்று அங்கு வந்து அவர்களைக் காப்பாற்றினார். அந்த நிகழ்ச்சி, கருணை வள்ளலான வள்ளிமலை சுவாமிகளின் யோக மகிமையை நன்கு வெளிப்படுத்துகிறது.

ஏகாம்பர முதலியார் தன் மகனுக்குத் திருமணமானதும், புது மணத் தம்பதியோடு வள்ளிமலைக்கு வருவதாக சுவாமிகளிடம் கூறியிருந்தார். ஆனால், ஏதோ ஒரு தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் அங்கு போக முடியவில்லை. அதற்குப் பதிலாக, குடும்பத்தோடு அவர் பழநிக்குச் சென்றார். பழநியாண்டவனைத் தரிசிக்கச் செல்லும் முன் அனைவரும் சரவணப் பொய்கையில் நீராடச் சென்றனர்.

குளத்தில் குளித்துப் பழக்கமில்லாத முதலியாரின் மகன் கால் தவறி விழுந்து, கரையேற முடியாமல் தத்தளித்தான். கணவனின் நிலை கண்டு பதறிப் போன மனைவி, கணவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், சற்றும் யோசிக்காமல் தானும் நீரில் குதித்து விட்டாள். அவ்விருவரும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்த மற்றோர் இளைஞரும் நீரில் பாய்ந்தார். புது மணத் தம்பதியின் உயிரைக் காக்கச் சென்றவரும் தண்ணீரில் மூழ்கினார். மூச்சுத் திணற, உயிருக்காக மன்றாடினர்.

குளக்கரையில் நின்றிருந்த பெற்றோரும் பிறரும் உதவி கோரி கூக்குரலிட்டனர். ஏகாம்பர முதலியார், ''பழநியாண்டவா, கந்தா, வேலா, சச்சிதானந்த குருவே, என் செல்வங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று துயரம் தாங்க மாட்டாமல் கண்ணீருக்கிடையே கதறியழுதார். கண்ணுக்கெதிரில் கண்ணின் மணிகளைக் காலன் கவர்ந்து செல்லும் போது தெய்வத்தினிடம் முறையிடுவது ஒன்றுதானே வழி!

அப்போது யாரும் எதிர்பாராத வகையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. எங்கிருந்தோ திடீரென்று ஓர் ஆசாமி அங்கு தோன்றினார். அவர் சட்டென்று குளத்தில் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, நீரில் மூழ்கி எமனுடன் போராடிக் கொண்டிருந்த மூவரையும் எப்படியோ காப்பாற்றி, கரையில் கொண்டு சேர்த்து விட்டுப் போய் விட்டார். அவர் யாரென்று ஒருவருக்குமே தெரியாது.

அதே நேரத்தில் வள்ளி மலை ஆச்ரமத்தில் சுவாமிகள் தம் சீடர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். திடீரென்று உரத்த குரலில், ''இது தான் பழநி, இதையே பழநி என்று நினைத்துக் கொள்ளுங்கள். நாம் பழநியில் தான் இருக்கிறோம்'' என்று சுவாமிகள் ஆவேசம் வந்தவர் போல் எழுந்து, திருப்புகழ் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு குதித்தார். அங்கிருந்தவர்களுக்கு அப்போது ஒன்றுமே விளங்கவில்லை. சென்னை திரும்பிய ஏகாம்பர முதலியாரிடமிருந்து பழநியில் நடந்த அற்புதத்தை அறிந்த பிறகே அவர்களுக்கு எல்லாம் புரிந்தது. சுவாமிகள் வள்ளிமலையில் பழநியின் பெயரைக் கூறிக்கொண்டு திடீரென்று எழுந்த நேரமும், பழநியில் ஒரு பெரியவர் நீரில் மூழ்கி, மடிய இருந்தவர்களைக் காப்பாற்றிய நேரமும் விநாடி மாறாமல் ஒத்திருந்ததை அதிசயத்தோடு அறிந்து, அந்த அற்புதத்தை நிகழ்த்தியவர் திருப்புகழ் சித்தரான வள்ளிமலை சுவாமிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இதைப் போன்று பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார் சுவாமிகள். ஒரே சமயத்தில் வெவ்வேறு இடங்களில் காட்சியளித்திருக்கிறார் அவர். ஒரு சமயம் வள்ளிமலைக் குகையில் சீடர்கள் பாராயணம் செய்து கொண்டிருந்த போது, சென்னைக்குச் சென்றிருந்த சுவாமிகள், கையில் கமண்டலத்துடன் உள்ளே நுழைந்தார். 'சுவாமிகள் வந்து விட்டார்' என்று அனைவரும் மகிழ்ச்சியுற்றிருந்த போது, அவர் திரும்பி, கணேச கிரியை நோக்கி நடந்தார். ''சாமீ...சாமீ'' என்று அழைத்துக் கொண்டே சீடர்கள் பின்னே சென்றனர். சற்றைக்கெல்லாம் சுவாமிகள் எங்கோ மறைந்து விட்டார்.



சூரியன் காணா சுனை
( குமரித்தீர்த்தம் )

உண்மையில் சுவாமிகள் அன்று சென்னையில்தான் இருந்திருக்கிறார். மூன்று நாட்கள் கழித்தே வள்ளிமலை வந்தார். இதைப்போல் எத்தனையோ மாய லீலைகள்!

வள்ளிமலைக்கு வந்த பிறகே சுவாமிகளுக்கு இசை ஞானம் ஏற்பட்டது. அதற்கு முன்பு தன்னிஷ்டத்திற்குத் திருப்புகழைப் பாடிக் கொண்டிருப்பார் அவர். வள்ளிமலையில் இரவு நேரங்களில் தேவகானம் கேட்குமாம். தேவகணங்கள் வானுலகிலிருந்து கீழிறங்கி வந்து, இசை மாரி பொழிந்து, பொங்கித்தாயை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார்களாம். அதைத் தினமும் உற்றுக் கேட்ட சுவாமிகளுக்கு மெல்ல மெல்ல இசையில் லயிப்பு ஏற்பட்டது. ராக லட்சணங்கள் மனத்தில் பதிந்தன. லய வேறுபாடுகள் உணர்வோடு கலந்தன. அவரையுமறியாமல் சங்கீத தேவதை அவரை ஆட்கொண்டாள். கம்பீரமான சாரீரத்தில் ராக, தாளங்கள் என்ற சுவை கூட்டி, 'சின்னமாம் ஏகதாரையைத் திருக்கையிலேந்தி' திருப்புகழ் அமிர்தத்தை வாரி வாரி வழங்கப் புனித யாத்திரை புறப்பட்டார்.

வள்ளிமலையிலிருந்து அடிக்கடி சென்னைக்கு வந்து போன சுவாமிகள், இங்கு சிறுகச் சிறுக பல திருப்புகழ் சபைகளையும் நிறுவினார். முருக பக்தி தழைத்தது. அடியார்த் திருக்கூட்டம் வளர்ந்தது.

எழுத்து வாசனையே யற்ற கிராம மக்களை சொல்லழகும் ஓசை நயமும் மிளிரும் திருப்புகழை சந்தம் தவறாமல் பாடும்படி பழக்கினார் சுவாமிகள். தமது யோக சக்தியாலும் தவ வலிமையாலும் எத்தனையோ பக்தர்களை இசை வல்லுநர்களாக மாற்றியிருக்கிறார் அவர்.

சென்னையில் சுந்தசாமி பிள்ளை என்பவர் சுவாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவராயிருந்தார். ஆண்டு தோறும் திருவண்ணாமலைக்கு குடை எடுத்துச் செல்லும் குழுவுக்குத் தலைமை தாங்கி தேவாரம் ஓதிச்செல்வார்.

இவர் இனிமையாகத் தேவாரம் பாடுவதைக் கேட்ட சுவாமிகள், இவரைத் தம் சீடராக்கிக் கொண்டு திருப்புகழ் கற்றுக் கொடுத்தார். பின்னர், திருப்புகழ் பாராயணங்களின் போதும் பிரசங்கங்களின் போதும் இவரும் மீனாட்சி என்றழைக்கப்படும் மாணிக்க முதலியாரும் சுவாமிகளுடன் சேர்ந்து பாடுவது வழக்கம்.


ஒருநாள் கந்தசாமி பிள்ளை ஒரு பிடிலை வைத்துக் கொண்டு, 'சரிகம' என்ற சரளி வரிசையைத் தட்டுத் தடுமாறிப் பழகிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த சுவாமிகள், ''ஏதாவது நல்ல ராகம் வாசி, கேட்போம்'' என்றார். பிள்ளையவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''சுவாமிகளே, எனக்கு சரளி வரிசையே இன்னும் சரியாக வரவில்லை, அதற்குள் ராகம் வாசிக்கச் சொல்கிறீர்கள், எப்படி முடியும்?'' என்று பரிதாபமாகக் கேட்டார். ''எல்லாம் முடியும், வாசி'' என்று அதட்டினார் சுவாமிகள். குருநாதனை நினைத்துக் கொண்டு உடனே பிடில் வாசிக்கத் தொடங்கினார் பிள்ளை. அவரையுமறியாமல் பல ராகங்களை எளிதாக வாசித்தார். சுவாமிகள் ஆனந்தப்பட்டார். அன்று முதல் எந்த ராகத்தையும் விரிவாகவும் தெளிவாகவும் ஆலாபனம் செய்யும் ஆற்றல் பெற்றார் கந்தசாமி பிள்ளை.

கந்தசாமி பிள்ளையவர்களுக்கு வெகு காலம் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்தது. ஜோசியர்களும் நம்பிக்கையளிக்கவில்லை. ஆனால், சுவாமிகளின் நல்லாசியால் அவரது மனைவிக்கு இருந்த குறை நீங்கப் பெற்று, அவர்களுக்கு சந்தான பாக்கியம் ஏற்பட்டது.

கந்தசாமி பிள்ளையின் குடும்பத்தார் சென்னைக்கு அடுத்துள்ள 'பாடி' என்ற தலத்தில் ஆண்டுதோறும் திருஞானசம்பந்தரின் திருநட்சத்திரத்தைக் கோலாகலமாகக் கொண்டாடுவது வழக்கம். அப்போது பெரிய அளவில் அன்னதானமும் நடைபெறும். ஒரு விழாவின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமையற்காரர்கள் வந்து சேரவில்லை. அன்னதானம் நின்று விடுமோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த கந்தசாமியின் முன் வள்ளிமலை சுவாமிகள் காட்சி தந்தார். என்ன அதிசயம்! சுவாமிகள் விழாவுக்கு வருவார் என்று பிள்ளையவர்கள் கனவில் கூட நினைக்கவில்லை. நிலைமையையறிந்த சுவாமிகள், அடுத்த கணம் சமையல் பணியில் முழுமூச்சுடன் இறங்கி, வந்திருந்த அத்தனை பேருக்கும் அறுசுவையுடன் விருந்து தயாரித்துப் பரிமாறினார்.

தம் புகழை சுவாமிகள் பாடக் கேட்டு தணிகேசன் ஆனந்தக் கூத்து ஆடியதும் உண்டு.

கணேச கிரி



1917-ம் ஆண்டு ஜூன் மாதம், வள்ளிமலைச் சீடர்களுடன் சுவாமிகள் திருத்தணிகைத் தலம் சென்று திருப்புகழ் பாடும் போது ''திருப்புகழோதுங் கருத்தினர் சேரும் திருத்தணி மேவும் பெருமாளே'' என்ற அடியை ''தெருத் திண்ணை தோறும் திருப்புகழோதுந் திருத்தணி மேவும் பெருமாளே'' என்று

மாற்றிப் பாடி விட்டார். பாராயணம் முடிந்ததும் ''இப்படி ஏன் மாற்றிப் பாடினீர்கள்?'' என்று சீடர்கள் கேட்க, ''என்னையறியாமல் பாடி விட்டேன். அதன் காரணம் எனக்கே தெரியவில்லை'' என்று சுவாமிகள் சமாதானம் கூறிவிட்டார்.

மறுநாள் திருத்தணிகைச் சீர் கருணீக மடத்துத் திண்ணையில் இரவு பாராயணம் நடை பெற்றது. இரவு எட்டு மணிக்கு ஆரம்பித்த பாரா யணம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

நள்ளிரவு நேரம். மலையில் திடீரென்று ஒரு பேரொளி தோன்றி மறைந்ததைப் பாராயணம் செய்து கொண்டிருந்த அடியார்கள் அனைவரும் கண்டு வியந்தனர். சற்றைக் கெல்லாம் கையில் விசிறியுடன் ஓர் அந்தணர் வந்து, திண்ணையின் மீது ஒரே தாவலாகத் தாவி சுவாமி களின் அருகில் வந்து உட்கார்ந்தார். ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அவர் அங்கிருந்து எழுந்து எதிரிலுள்ள திருக்குளப் படிக்கட்டில் போய் அமர்ந்து கொண்டார். சுவாமிகள் பாடும் போது கவனமாகக் கேட்டுக் களிப் பெய்திய அந்த அந்தணர், உள்ளத்தில் ஆனந்தம் பொங்க சில சமயம் நடனமும் ஆடினார். பொழுது விடிந்ததும் பாராயணம் முடிந்தது. ஆனால், அதற்குள் அந்த அந்தணப் பெரியார் மாயமாய் மறைந்து விட்டார்.

'வேதமூர்த்தி திருத்தணி வெற்புறை சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளி' மலையில் தரிசனம் தந்தார். முருகர், 'தணிகையிலந்தணக்' கோலத்துடன் பாராயணம் கேட்டார்.

அன்று பேரொளியாகவும், அந்தணப் பெரியாராகவும் காட்சி தந்த தணிகேசரை உலகமே வழிபடவும், 'திருப்புகழோதுங் கருத்தினரை திருத்தணியில் ஒன்று சேர்க்கவும்' சுவாமிகள் தருணம் பார்த்திருந்தார்.

அந்தக் காலத்தில் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அரசு ஊழியர் களும், அலுவலகங்களில் பணிபுரிபவர்களும் பூமாலைகளுடனும் பழங்களுட னும் ஆங்கிலேய துரைமார்களின் இல்லங்களுக்குச் சென்று மரியாதை செய்யும் பழக்கம் பரவலாக இருந்து வந்தது. வயிற்றுக்காக மனிதனை வழிபடும் இந்த அடிமைப் புத்தியைக் கண்டு மனம் குமுறிய சுவாமிகள், ஒரு யோசனை செய்தார். மனிதனை வழிபட்ட மக்களை, மால் மருகனின் வழிபாட்டில் ஈடுபட வைத்தார். டிசம்பர் 31-ந் தேதி திருப்புகழ் பாடிக்கொண்டே மலையேறிச் சென்று, தணிகேசனுக்கு மனம் குளிர அபிஷேகம் செய்து, ஜனவரி முதல் தேதி, அவனுக்கு சகல மரியாதை களுடன் அர்ச்சனை, ஆராதனைகள் செய்து, புத்தாண்டின் அலுவல்களைப் புதுத் தென்புடன் துவக்க நல்வழி வகுத்துத் தந்தார். 1917-18-ல் வள்ளிமலைச் சுவாமிகளால் தொடங்கப்பட்ட திருத்தணி திருப்புகழ் திருவிழாவே, நாளடைவில் 'திருப்படி திருவிழா'வாக மாறி, இன்று முருக பக்தர்கள் கொண்டாடும் மிக முக்கிய விழாக்களில் ஒன்றாக வளர்ந்தோங்கி யிருக்கிறது.

இந்த முதல் திருப்படித் திருவிழாவில் வள்ளி மலைச் சுவாமிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சியும் ஓர் அற்புதமே!

சென்னையிலுள்ள திருப்புகழ் அன்பர்களை டிசம்பர் 31-ந் தேதி திருத்தணிக்குச் செல்லும்படி பணித்தது போலவே வள்ளிமலை ஆச்ரமத்தி லிருந்த அன்பர்களையும் அங்கு செல்லுமாறு கூறினார் சுவாமிகள். அதற்கு உடனே இணங்கிய அடியார்கள், சுவாமிகளையும் உடன் வரும்படி அழைத் தனர். சுவாமிகளோ, ''நீங்கள் செல்லுங்கள். ஆண்டவன் உத்தரவு கிடைத்தால் நான் நிச்சயம் வந்து கலந்து கொள்கிறேன்'' என்று கூறி அவர்களை அனுப்பினார். அவர்கள் டிசம்பர் கடைசி நாளன்று, திருத் தணிக்குச் சென்று, சுவாமிகளுக்கு உத்தரவு கிடைத்து அவர் திருத் தணிக்கு வந்தால் ஆளுக்கொரு தேங்காய் உடைப்பதாக மனத்திற்குள் வேண்டிக் கொண்டார்கள்.

அன்று வள்ளிமலை ஆச்ரமத்தில் சுவாமிகளுடன் தகப்பன்சாமி, தேவாரசாமி, சிதம்பரசாமி என்பவர்கள் இருந்தனர். அவர்களைப் பார்த்து சுவாமிகள், ''இன்று பாராயணம் முடிந்ததும் நீங்கள் உறங்கா மல் விழித்திருங்கள். நான் நிட்டையில் அமரப் போகிறேன். திருத் தணிகைக்குப் போகும்படி ஏதாவது உத்தரவு வந்தால் என்னிடம் சொல் லுங்கள்'' என்று கூறிவிட்டு நிட்டையிலமர்ந்து விட்டார்.

சுவாமிகள் கூறியபடியே கண்ணிமைக்காமல் ஆண்டவனின் உத்தர வுக்காக பக்தியோடு காத்திருந்தார் தகப்பன்சாமி. திடீரென்று மெல்லிய குரலில், ''நீங்கள் தணிகை போய் ஆறு நாட்களில் திரும்பி வந்து விட வேண்டும்'' என்று ஓர் அசரீரி கேட்டது. அத் தெய்வ மொழிகளைக் கேட்ட தகப்பன்சாமிக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. சுவாமிகள் நிட்டை கலைந்ததும் தான் கேட்ட மொழிகளைக் கூறினார். ஆனந்தப் பரவசமடைந்த சுவாமிகள் அடுத்த கணம் தகப்பன் சாமியுடன் திருத்தணிக்குக் கால் நடையாகப் புறப்பட்டு விட்டார்.

மலையில் வேகமாக இறங்கி வந்த சுவாமிகள் தகப்பன்சாமியை நோக்கி, ''இதோ பாரு. நாம் அடிவாரத்தை அடைவதற்குள் கோயில் மணி அடிக்க வேண்டும். அது அடித்தால்தான் திருவிழாவுக்குப் போக நமக்கு முழுமையான உத்தரவு கிடைத்தது என்று பொருள். மணி அடிக்கவில்லையென்றால் நமது தணிகை பயணத்தை நிறுத்தி விட வேண் டியதுதான்'' என்று கூறினார். 'இதென்னடா, மறுபடியும் ஒரு சோதனை!' என்று கவலைப்பட்டார் தகப்பன்சாமி. இருவரும் மலையிலுள்ள தாமரைக் குளத்தருகில் வந்ததும் கோயில் மணி ஒலித்தது. அது மூன்று முறை ஒலித்து, சுற்றுப்புறமெங்கும் எதிரொலித்தது. நாத பிரும்மமான ஆண்டவனின் அருள் கிடைத்து விட்டது. இருவரும் மேலும் வேகமாக நடந்து, ஜனவரி முதல் தேதி விடிவதற்கு முன்பே திருத்தணி வந்து சேர்ந்தனர். அடியார்த் திருக்கூட்டம் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்தது. தணிகேசனின் அருள் வெள்ளம் இத்தரணியெங்கும் நிரம்பியது.

தணிகை மலையில் திருப்புகழ்த் திருவிழாவைத் தொடங்கி வைத்து விட்டு, வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழ் பரப்பும் தமது அருட்

தொண்டில் ஈடுபட்டார். வள்ளிமலை ஆச்ரமத்திலிருந்து அடிக்கடி யாத்திரை மேற்கொண்டு, சென்னைக்கும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள ஊர்களுக்கும் சென்று, தமது திருப்புகழ் பாராயணங்களாலும், பிரசங்கங்களாலும், ஆயிரமாயிரம் அடியார்களை ஈர்த்தார். ஆங்காங்கே திருப்புகழ் சபைகளை அமைத்துச் சிறுவர் சிறுமியருக்கு அருணகிரியார் படைத்து வைத்திருந்த திருப்புகழ் அமுதத்தை ஊட்டினார். முருக பக்தியை விதைத்தார். தேன் மலர் இருக்கும் திசை நோக்கி வண்டுகள் பறந்து வருவது போல், திருக்கையில் ஏகதாரை ஏந்தித் திரிந்த அந்தக் கோவணாண்டியைப் பெருங் கூட்டம் நாடி வந்தது. பெறற்கரிய செல்வத்தைப் பெற்றது; பேரின்பத்தில் மிதந்தது.

சுவாமிகளின் நன்முயற்சியால் தமிழகமெங்கும் திருப்புகழின் அருமை பெருமைகளை மக்கள் உணர்ந்து, ராக தாளத்துடன் அதை ஓதத் தொடங்கினர். 'தங்கள் ஊருக்குச் சுவாமிகள் வரமாட்டாரா?' என்று அன்பர்கள் ஏங்கித் தவம் கிடந்தனர். தென் மாவட்டங்களில் சுவாமிகள் பிரயாணம் செய்ததன் பலனாக முருகத் தலங்களில் படி விழாக்களும், அருணகிரிநாதர் விழாக்களும், ஸ்கந்த சஷ்டிவிழாக்களும், கிருத்திகை விழாக்களும் கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டன.

சுவாமிகள் தமிழகம் மட்டுமின்றி, பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற வடநாட்டு நகரங்களுக்கும் சென்று, அங்கு வாழும் தமிழர்களிடையே திருப்புகழின் மேன்மையைப் பரப்பினார். மீண்டும் ஒருமுறை தல யாத்திரை சென்று, ஆலயங்களை வழிபட்டு, மகான்களைத் தரிசித்து, புண்ணிய நீராடித் தமது ஆன்மிக வலிமையையும் யோக சக்திகளையும் பெருக்கிக் கொண்டார்.

மகான்களும், தவச் சீலர்களும், யோக சித்தர்களும், ஞான பண்டிதர்களும் பரம்பொருளின் தூதுவர்களாகத்தான் நம்மிடையே அவதரிக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கென ஒருதுறையை ஏற்றுக் கொண்டு தங்களுக்குரிய தனி வழியில் மக்களிடையே நன்னெறியையும், நல்லொழுக்கத்தையும், அன்பையும், பக்தியையும், ஞானத்தையும் பரப்புகிறார்கள். காலத்திற்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் மக்களின் மனநிலைக்கேற்பவும் அவ்வப்போது தேவையான பாதையை வகுத்துத் தருகிறார்கள். அதற்கு ஆண்டவன் அவர்களுக்குத் தோன்றாத் துணையாக நிற்கிறான். கனவில் வந்து யோசனைகள் கூறுகிறான். அசரீரியாக அருள் பாலிக்கிறான். நம் கண்களுக்குப் புலப்படாத உருவங்கள் தாங்கி வந்து உதவி புரிகிறான்.

சுவாமிகள் சுவாமிமலையில் தங்கி யிருந்த சமயம், திருப்புகழ் பாராயணமும் பிரசங்கமும் முடிந்து அவர் ஓர் அன்பர் வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் 'கார்த்திகை மூலம் எனக்குகந்தது' என்று அசரீரி கேட்டது. திடுக்கிட்டு எழுந்த சுவாமிகள் சீடர்களை எழுப்பி உற்றுக் கேட்கச் சொன்னார். அவர்களும் அந்த அசரீரியின் வாசகத்தை மிகத் தெளிவாகக் கேட்டனர். கார்த்திகை மாதத்திய மூல நட்சத்திரத்தன்றுதான் திருப்புகழ் சுவாமிகள் அவதரித்தார். அந்நன்னாளை முருகன் தமக்கு உகந்தது என்று கூறுகிறான். அப்புனித நாளைத் தன் ஜயந்தியாகக் கொண்டாடச் சொல்லாமல்,

அருணகிரியாரின் ஜயந்தியாகக் கொண்டாட வேண்டும் என்று சுவாமிகள் பணித்தார். 1923-ம் ஆண்டு முதல் பல இடங்களில் அப் புனிதத் திருநாள் அருணகிரியாரின் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமது தென்னாட்டு யாத்திரையின் போது பழநியாண்டவனைத் தரிசித்து விட்டு, விராலிமலை ஆறுமுகனை வழிபட்டு, திருச்சிக்கு அடுத்துள்ள வயலூர் சென்றார் சுவாமிகள். அப்போது அப் பகுதியில் பருவ மழை பொய்த்து விட்டதால் நிலங்கள் வெடிப்புண்டு, விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளாகி யிருந்தார்கள். சுவாமிகளைக் கண்டதும் மக்கள் அவரிடம் ஓடிச் சென்று முறையிட்டனர். ''நீங்கள் திருப்புகழை உண்மையாக நம்பினால் முருகன் அருளால் மழை பொழியும்'' என்று கூறிய சுவாமிகள், தமது பாராயணத்தைத் தொடங்கினார். அப்போது மழை பெய்வதற்கான அறிகுறியே காணோம். பாராயணம் தொடங்கிய அரை மணி நேரத்திற்குள் எங்கிருந்தோ கருமேகங்கள் வந்து குவிந்தன. சில்லென்று காற்று வீசியது. இரவு பத்து மணி முதல் விடியற்காலை ஐந்து மணிவரை மழை கொட்டித் தீர்த்து விட்டது.

சுவாமிகள் பெங்களூரில் தங்கி யிருந்தபோது, ஜதி வாத்தியத்தை வாசித்துக் கொண்டு திருப்புகழ் பாராயணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். கூட்டத்தில் அமர்ந்திருந்த ஒரு மந்திரவாதி 'ஒன்ஸ் மோர்' என்று கத்தினான். இந்தக் குறுக்கீடு பிடிக்காத சுவாமிகள் 'நோ மோர்' என்று கூறி அவனை அலட்சியப்படுத்தி விட்டார். கோபங் கொண்ட அந்த சூன்யக்காரன் உடனே ஏவல் செய்து விட்டான். அதனால் அவர் தொடர்ந்து வாத்தியம் வாசிக்க முடியாமல் போய் விட்டது. ஆனால், அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பாராயணத்தை நடத்தி முடித்தார் அவர். சுவாமிகளின் கைகள் திடீரென்று வீங்கியதைக் கண்டு சீடர்களும் அன்பர்களும் கவலையுற்றனர்.

மறுநாள் காலை சுவாமிகள் தங்கி யிருந்த வீட்டிற்கு அந்த மந்திரவாதி அழுது கொண்டே ஓடி வந்தான். அவனுடைய கைகள் பெரிதாக வீங்கி யிருந்தன. தான் குத்துவலியால் அவதிப்படுவதாகவும், உடல் முழுவதும் எரிச்சல் எடுப்பதாகவும் கூறி, தான் செய்த குற்றத்தை மன்னித்து, திருநீறு பிரசாதம் அளிக்கும்படியும் வேண்டினான். சுவாமிகள் அவனைப் பார்த்து, ''அப்பனே, நீ கற்ற மூன்று சுழி மந்திரத்தைப் பிரயோகிக்கும் வழக்கத்தை இன்றுடன் விட்டு விடுவதாக சத்தியம் செய்து கொடுத்தால் விபூதி பிரசாதம் தருகிறேன்'' என்று கூறினார். அவனும் 'அவ்வாறே வாக்குக் கொடுத்து விட்டு விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு சென்றான்.

ஒரு சமயம் சென்னை புரசைவாக்கம் கங்காதரேச்வரர் ஆலயத்தில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த சுவாமிகள், திடீரென்று எழுந்து கொடி மரத்தின் அருகில் வந்து நின்று, வீதியை நோக்கிப் பிரசங்கத்தைத் தொடர்ந்தார். இதன் காரணம் ஒருவருக்கும் புரிய வில்லை. சற்றைக்கெல்லாம் கோபுரத்திற்கு வெளியே, சற்று ஒதுங்கி நின்றிருந்த ஒரு முகமதியத் தோழரை ஆலயத்தினுள் அழைத்து வரும்படி சீடர்களிடம் கூறினார்.

கண்ணீருடன் ஆலயத்தினுள் ஓடி வந்த முகமதியர், சுவாமிகளின் கால்களில் விழுந்து விசும்பினர். ''சுவாமி, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டையை அடுத்த மலைக்காட்டில் தாங்கள் இதே பாட்டைப் பாடவில்லையா? அதை நான் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த போது, ஒரு சிறுத்தைப் புலி பாய்ந்தோடி வந்தது. உடனே நான் அருகில் இருந்த மரத்தின் மீது ஏறிக் கொண்டேன். ஆனால், தாங்களோ சற்றும் அஞ்சவில்லை. மாறாக, தங்கள் திருவோட்டில் இருந்த உணவை அந்தப் புலிக்குக் கொடுத்தீர்கள். அந்தப் புலியும் தங்களுக்குக் காவலாக அருகில் படுத்திருந்தது. பின்னர், தாங்கள் புறப்பட்ட போது, அது தங்களைத் தொடர்ந்து வந்ததால் நான் தங்களை அருகில் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற முடியவில்லை. அதற்குப் பிறகு, இங்கு ஓர் அலுவலாக வந்த நான், அதே குரலை, அதே பாட்டைக் கேட்டு அசந்து நின்றேன். நான் வெளியே நின்றிருந்தது தங்களுக்கு எப்படித்தான் தெரிந்ததோ? எனக்குத் தரிசனம் தருவதற்காக எழுந்து வந்த தங்கள் கருணையை எப்படிப் போற்றுவேன்?'' என்று கூறிக் கதறித் தீர்த்து விட்டார். அருகிலிருந்தவர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டனர்.

வள்ளிமலையில் ஒருநாள், பொழுது சாய்ந்து விட்ட நேரம். சுவாமிகளின் பணியாள் முனுசாமி, ஆச்ரமத்திற்கு ஏறி வந்து கொண்டிருந்தான். எதிரில் நாற்பது வயது மாது ஒருத்தி ஆச்ரமத்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து, ''ஏனம்மா, இந்த வேளையில் திரும்புகிறீர்கள்? நன்றாக இருட்டி விட்டதே'' என்றான் முனுசாமி.

''சுவாமிதான் என்னைப் போகச் சொல்லித் துரத்தி விட்டார்'' என்று பதில் கூறினாள் அந்தப் பெண்மணி. முனுசாமி அந்த அம்மாளை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, சுவாமிகளிடம் ஓடோடி வந்து, ''சாமி, நீங்க எல்லாப் பொம்பளைங்களையும் வள்ளியா நினைப்பீங்களே, அந்த அம்மாளை மட்டும் ஏன் இருட்டிலே போகும்படி விரட்டினீங்க? இருட்டிலே எப்படிக் கீழே போவாங்க?'' என்று கேட்டான்.

சுவாமிகள் உடனே அவனை அனுப்பி அந்தப் பெண்மணியை அழைத்து வரும்படி கூறினார். ஆனால், முனுசாமி சென்று பார்த்த போது அவள் அங்கிருந்து மாயமாய் மறைந்து விட்டிருந்தாள். ஏமாற்றத்துடன் திரும்பிய முனுசாமியிடம் சுவாமிகள், ''அவள் கற்பூர டப்பியிடம் போய் உட்கார்ந்தாள். 'அங்கே என்ன பண்றே?'ன்னு சத்தம் போட்டேன். 'என்ன சாமீ இப்படிக் கோவிச்சுக்கிறீங்க'ன்னு கேட்டு விட்டு எழுந்து விட்டாள். ஒருவேளை கற்பூரத்தைத் திருடிக்கிட்டு போயிட்டாளா பார்?'' என்றார். முனுசாமி கற்பூர டப்பாவைக் கொண்டு வந்தான். என்ன ஆச்சரியம்! அதில் ஒரு வெள்ளி ரூபாய் நாணயம் மின்னியது. வந்தவள் வள்ளித்தாய் அல்லவா?

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் 1929-ம் ஆண்டு ஜனவரியில் மகா சமாதி அடைந்தார். தம் குருநாதரின் சமாதிச் சடங்குகளில் கலந்து கொண்டு விட்டு திருவண்ணாமலையிலிருந்து வள்ளிமலை திரும்பிய சச்சிதானந்த சுவாமிகள், பன்னிரண்டு ஆண்டுகள் மலையை விட்டு இறங்காமல்

ஆச்ரமத்திலேயே தங்கி யிருந்தார். அப்போதும் சென்னையிலுள்ள சில அன்பர்களுக்கு அவர் தரிசனம் அளித்திருக்கிறார்!

வெங்கடாச்சாரி என்ற அன்பர் சுவாமிகளின் படம் ஒன்றை ஆச்ரமத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு சில நாட்கள் அதை வைத்து விட்டு, சுவாமிகளின் ஆசி பெற்று அதைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அப்போது சிலர் சுவாமிகளிடம், ''இந்தப் படம் பேசுமா? ஆகாரம் சாப்பிடுமா?'' என்று கேட்டனர். அதற்கு சுவாமிகள், ''இந்தப் படம் பேசவும் பேசும், சாப்பிடவும் சாப்பிடும்'' என்று கூறிவிட்டார்.

மறுநாள் சென்னையில் வெங்கடாச்சாரி வீட்டில் பூஜை அறையில் சுவாமியின் படத்திற்கு நிவேதனம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ''ஒரு லோட்டா காப்பி கொடு'' என்று குரல் கேட்டது. சந்தேகமில்லை. அது சுவாமிகளின் குரல்தான். ''உள்ளே வாருங்கள்'' என்று வீட்டார் அழைக்கவும், ''இல்லை, எனக்கு அவசர வேலை இருக்கிறது. போக வேண்டும். காப்பியை ஜன்னல் வழியாகக் கொடு'' என்று சொல்லிக் கையை நீட்டினார் சுவாமிகள். அவர் கேட்டபடியே காப்பியை ஜன்னல் வழியாகவே கொடுத்தனர். அவரும் அதை வாங்கிக் குடித்து விட்டு, பாத்திரத்தை ஜன்னலில் வைத்தார். உடனே எல்லோரும் தெருப் பக்கம் சென்று பார்த்தனர். அங்கு சுவாமிகளைக் காணோம். சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தார்கள். பயனில்லை.

ஒரு சமயம் மலையைச் சீர்திருத்தம் செய்த வேலையாட்களுக்குக் கூலி கொடுக்க சுவாமிகளுக்கு இருநூறு ரூபாய் பணம் தேவைப்பட்டது. கையில் பணமில்லை. முருகனிடம் பிரார்த்தித்தார்.

மறுநாட் காலை ஒன்பது மணிக்கு ஆச்ரமத்தில், ஆலமரத்தடியில் அமர்ந்திருந்தார் சுவாமிகள். அப்போது எதிரில் திடீரென்று ஒரு பை வந்து விழுந்தது. அதை அவிழ்த்துப் பார்த்தார். அதில் வெள்ளி நாணயங்களாக இருநூறு ரூபாய் இருந்தது. முருகனின் கருணையை நினைத்து மனம் உருகிக் கண்ணீர் உகுத்தார் சுவாமிகள்.

ஒரு வாரம் கழித்து ஒருநாள் சென்னைக்கு வந்த சுவாமிகள், அவருடைய பக்தர்களில் ஒருவரான பிரபல டாக்டர் ரங்காச்சாரியின் இல்லத்திற்குச் சென்றார். அப்போது டாக்டர், சுவாமிகளைப் பார்த்து ''நான் அனுப்பிய இருநூறு ரூபாய் வந்து சேர்ந்ததா?'' என்று கேட்டார். சுவாமிகளுக்கு ஒன்றும் புரியவில்லை.

டாக்டர் சொன்னார்: ''சுவாமிகளே, ஒருநாள் முருகன் என் கனவில் தோன்றி, 'வள்ளிமலை சுவாமிகளுக்கு இருநூறு ரூபாய் தேவைப்படுகிறது. அதை நீ அனுப்பி வை' என்று உத்தர விட்டார். மறுநாள் ஆகாய விமானம் மூலம் பெங்களூர் புறப்பட்டேன். அப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இருநூறு ரூபாய் நாணயங்களாக ஒரு மூட்டையில் கட்டி வைத்துக் கொண்டேன். விமானம் வள்ளிமலையை நெருங்கிய போது தாழ்வாகப் பறந்து பைனகுலர் மூலம் கீழே பார்த்தேன். சுவாமிகள் ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பது தெரிந்தது. உடனே அந்தப் பையைக் குறி பார்த்துக் கீழே போட்டேன். அது பத்திரமாக வந்து சேர்ந்ததா?'' என்று கேட்டார்.

முருகனின் லீலாவினோதத்தை நினைத்துக் கண் கலங்கிய சுவாமிகள், டாக்டரை அப்படியே இறுகத் தழுவிக் கொண்டார். ''நீங்கள் பெரும் பாக்கியம் செய்தவர். முருகன் தங்களுக்குக் கனவில் காட்சி தந்தானே! நான் இன்னும் அந்தப் பாக்கியம் செய்ய வில்லையே'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் ஆச்ரமத்தைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது, ஜெயவேல்தாஸ், ''பெரியவருக்குப் பொங்கல் படைக்கும் இடத்தைப் பார்க்காமல் போகிறீர்களே'' என்று எங்களை அழைத்தார். ஒரு பாறையின் மீது அவர் ஏறிச் செல்ல, நாங்கள் பின் தொடர்ந்தோம்.

''இதோ பார்த்தீர்களா, இங்கே தினமும் சாயந்தரம் மூணு உருண்டை சர்க்கரைப் பொங்கல் வைப்பாங்க. ஒரு பெரிய கிரிப்பிள்ளை வந்து அதைச் சாப்பிட்டுவிட்டுப் போகும். அதோ குழியாயிருக்கே, அதுலே குடிக்க ஜலம் விட்டு வைப்பாங்க'' என்றார் ஜெயவேல்தாஸ்.

''இப்பவும் சாதம் வைக்கறாங்களா? கிரிப்பிள்ளை வருகிறதா?'' என்று கேட்டேன் நான்.

''இல்லீங்க. அதெல்லாம் சாமி இங்கே இருந்தவரைக்கும் நடந்துக் கிட்டிருந்தது. இப்போ சாதமும் வைக்கிறதில்லே. கிரியும் வருவதில்லை'' என்றார் தாஸ்.

ஒருசமயம் ஒரு வயோதிகர் வள்ளிமலை சுவாமிகள் இருந்த குகைக்கு வந்து, ''பசிக்கிறது. ஏதாவது கொடுங்கள்'' என்று கேட்டார். ஒரு பாத்திரத்தில் இருந்த கஞ்சியை அந்தப் பெரியவருக்குக் கொடுக்கும்படி சுவாமிகள் கூறவே, சீடர் ஒருவர் எடுத்துக் கொடுத்தார். பசியால் வாடிய அந்த வயோதிகர், பாத்திரத்திலிருந்த மூன்று படி கஞ்சியையும் குடித்து விட்டு அங்கிருந்து போய் விட்டார். ஒரே மூச்சில் மூன்று படி கஞ்சியையும் குடித்த அந்த அதிசய மனிதர் யாரென்று பார்த்து வரும்படி சுவாமிகள் சில சீடர்களை அனுப்பினார். ஆனால், எத்தனை தேடியும் அவரை கண்டு பிடிக்க முடியவில்லை. எங்கோ மாயமாய் மறைந்து விட்டார். மறுநாள் முதல் ஆச்ரமத்தில் பெரியவருக்கு ஆகாரம் வைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

பெரியவருக்கு வைக்கப்பட்ட அந்த ஆகாரத்தைத் தவறாமல் ஒரு கிரிப்பிள்ளை வந்து சாப்பிட்டு விட்டுப் போகத் தொடங்கியது. சேஷாத்ரி சுவாமிகளே கிரியின் உருவில் வந்து உணவை உட்கொள்ளுகிறார் என்ற உண்மை பின்னர்தான் தெரிந்தது!

திருவண்ணாமலையில் நடமாடிக் கொண்டிருந்த சேஷாத்ரி சுவாமிகள் அநேக நாட்கள் இரவு நேரங்களை மயானத்திலேயே கழிப்பது வழக்கம். அங்கிருந்த வெட்டியான், சுவாமிகள் மீது பேரன்பு வைத்திருந் தான். சுவாமிகளும் அவனிடம் கருணையோடு பழகினார். ஊரில் யாராவது தனக்குப் புத்தாடைகள் கொடுத்தால் அவற்றைக் கொண்டு வந்து வெட்டியானிடம் கொடுத்து விட்டு, அவனுடைய கந்தல் ஆடையைத் தாம் அணிந்து கொண்டு போய் விடுவார்.

சேஷாத்ரி சுவாமிகள் மகா சமாதி அடைந்த போது, பிரிவு தாங்காமல் துயரடைந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களில் அந்த வெட்டியானும் ஒருவன். எந்நேரமும் அவரைப் பற்றியே ஏங்கிக் கொண்டிருந்த அவனால் சுவாமிகளின் ஒளிமிக்க கண்களையும், புத்துயிரூட்டும் புன்னகையையும், இனிமையான பேச்சுக்களையும் மறக்கவே முடியவில்லை.

ஒருநாள் அவன் கனவில் சேஷாத்ரி சுவாமிகள் தோன்றி, அவனை அன்புடன் தழுவிக் கொண்டார். ஆறுதல் மொழிகள் கூறினார்.

''அப்பனே, என்னைக் காணவில்லை என்று வருத்தப்படாதே. நான் வள்ளிமலையில் இருக்கிறேன். அங்கு போ. உனக்குத் தரிசனம் தருகிறேன்'' என்று வாக்குக் கொடுத்தார்.

மறுநாளே அந்த வெட்டியான் வள்ளி மலைக்குக் கிளம்பி விட்டான். சுவாமிகளிடமும் பிறரிடமும் தான் வந்த காரியத்தைக் கூறினான். சேஷாத்ரி சுவாமிகளின் தரிசனத்திற்காக அங்கேயே காத்திருந்தான்.

மாலையில் பாறையின் மீது பெரியவருக்கு ஆகாரம் வைப்பதைக் காணச் சென்றான். அப்போது அங்கு ஒரு கீரி வந்தது. அருகிலிருந்தவர்கள் திருப்புகழ் பாடினார்கள். கீரிப்பிள்ளை வெல்லம் கலந்த அன்னத்தை ருசித்துச் சாப்பிடத் தொடங்கியது.

அடுத்தகணம், கீரிப்பிள்ளை மறைந்தது. அங்கு சேஷாத்ரி சுவாமிகள் காட்சியளித்தார். வெட்டியான் பக்திப் பரவசத்தில் உடல் நடுங்க, ''சாமீ...சாமீ... என்னைத் தனியாக விட்டுட்டு இங்கே ஏன் சாமீ வந்திங்க?'' என்று கதறினான். சற்றைக்கெல்லாம் அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. தன்னை வள்ளிமலைக்கு அழைத்து, சேஷாத்ரி சுவாமிகள் தரிசனம் கொடுத்ததை நினைத்துப் பூரித்துப் போனான்.

ஒருசமயம் வள்ளிமலை சுவாமிகள் திருவண்ணாமலைக்குச் சென்று ஸ்ரீ ரமண மகரிஷிகள் சந்நிதியில் திருப்புகழ் பாடினார். பின்னர் சேஷாத்ரி சுவாமிகளைத் தேடிக் கண்டு பிடித்து, தரிசனம் செய்து, சிறிது நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தார். இறுதியில், மறுநாள் வள்ளிமலை போகப் போவதாகக் கூறி உத்தரவு கேட்டார். அப்போது சேஷாத்ரி சுவாமிகள், ''டேய், நானும் வள்ளிமலைக்கு வரேண்டா. என்னையும் அழைச்சுண்டு போடா'' என்று கூறியதும், வள்ளிமலை சுவாமிகளுக்கு மகிழ்ச்சியை அடக்கவே முடியவில்லை. குருநாதர் விளையாட்டுக்கு அவ்வாறு கூறுகிறாரோ என்ற சந்தேகத்துடன் விடை பெற்றவர், மறுநாள் காலையில் அவரிடம் சென்று, 'ரயிலுக்குப் போகலாமா?' என்று பரிவுடன் அழைத்தார். ''ஓ, வரேன்'' என்று சேஷாத்ரி சுவாமிகள் துள்ளிக் குதித்துக் கொண்டு கிளம்பினார். குருவும் சீடரும் ரயில் நிலையத்திற்குச் சென்று, ரயிலில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

ரயில் கிளம்பியது. சட்டென்று சேஷாத்ரி சுவாமிகள் எழுந்து, கீழே குதித்து விட்டார். வள்ளிமலை சுவாமிகளின் முகத்தில் ஏமாற்றம் குடி கொண்டது. குருநாதர் திடீரென்று தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டாரே என்று வருந்தினார்.

''டேய், நீ வருத்தப்படாதே, போ. நான் வள்ளிமலைக்கு வந்து சேருகிறேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறி விட்டு சேஷாத்ரி சுவாமிகள் ஓடி விட்டார்.

வள்ளிமலை ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்ததும் பொங்கித் தாய்க்கு பூஜை செய்து விட்டுத் திரும்பிய சுவாமிகள், எதிரில் சிரித்துக் கொண்டு சேஷாத்ரி சுவாமிகள் நிற்பதைக் கண்டு பிரமித்துப் போனார். ''குருநாதா, பிரபோ'' என்று கத்திக் கொண்டே, தரையில் விழுந்து கும்பிட்டு விட்டு எழுந்தார். எதிரில் குருநாதரைக் காணவில்லை. மாறாக, அங்கு ஒரு சிறு அணிற்பிள்ளை துள்ளிக் குதித்து ஓடியதைக் கண்டார்!

1940-ம் ஆண்டு வள்ளிமலையை விட்டுப் புறப்பட்ட சுவாமிகள், ஓயாமல் யாத்திரை செய்து கொண்டிருந்தார். அடுத்த பத்தாண்டு காலம் அநேகமாக அவர் சென்னை நகரிலேயே வசித்து வந்தார். அங்கிருந்தபடியே தென்னாட்டிலும், பம்பாய், கல்கத்தா, ரிஷிகேசம் முதலிய இடங்களிலும், யாத்திரை செய்து விட்டு வந்தார். அவ்வப்போது வள்ளிமலைக்குச் சென்று தங்குவதும் உண்டு.

எழுபத்தைந்து வயதைக் கடந்த நிலையிலும் இளமை மாறாத ஆர்வத்துடன் திருப்புகழைப் பாடியும், பாட வைத்தும் நாடெங்கும் பக்தியைப் பரப்பிக் கொண்டிருந்தார். அவருடைய 'வள்ளி கல்யாண' பிரசங்கங்களைக் கேட்க பெருங் கூட்டம் வரும்.

வள்ளி நாயகியைத் தேடி வந்த தணிகேசன் போல், அன்பர்கள் இல்லம் நாடிச் சென்றார் கருணை வள்ளலான திருப்புகழ் சுவாமிகள். தள்ளாத வயதில், பஸ்ஸிலும் ரிக்ஷாவிலும் நடையுமாக இந்த சென்னை மாநகரம் முழுவதும் அலைந்திருக்கிறார். பக்தர்களின் வீடு தேடிச் சென்று, நொந்த உள்ளங்களுக்கு நன்மருந்தாம் திருப்புகழ் தந்து ஆட்கொண்டிருக்கிறார். வெயில் என்றும், மழை யென்றும், குளிர் என்றும் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல் அருட்பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அந்தப் பேரருளாளர், குழந்தையைப் போல் பழகுவார்; வேடிக்கையாகப் பேசுவார். ஆனால், பாடும்போது தவறு இழைத்து விட்டாலோ, தாளம் தப்பி விட்டாலோ பொறுக்கவே மாட்டார். கடிந்து கொள்வார். கன்னத்தில் அடிப்பார். தலையில் குட்டி விடுவார்.

மலருடன் சேர்ந்த நாறும் மணப்பது போல் சுவாமிகளுடன் பழகியவர்களெல்லாம் பண்பாளர்களானார்கள். அவருடன் சேர்ந்து பாடியவர்களெல்லாம் முருக பக்தர்களானார்கள். அருணகிரிநாதருக்கு அடிமையானார்கள். திருப்புகழைப் பரப்பினார்கள்.


ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் மயிலாப்பூரில் ஒரு பிரபல வக்கீலின் வீட்டில் திருப்புகழ் பாராயணத்திற்கு ஏற்பாடாகி யிருந்தது. அந்த வக்கீல் அதற்கு முன்பு திருப்புகழ் பாடியதில்லை. பாராயணம் தொடங்குவதற்கு முன் தாளத்தை எடுத்து வக்கீலின் கையில் கொடுத்து 'நீயும் பாடு' என்றார் சுவாமிகள். அன்று பாட ஆரம்பித்தவர், நாடெங்கும் திருப்புகழ் பஜனைகள் செய்து முருகன் கீர்த்தியைப் பரப்பினார். ஒவ்வோர் ஆண்டும் திருத்தணி திருப்படி விழாவில் முக்கிய பங்கு கொண்டார். அந்த வக்கீல்தான் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசுவாமி ஐயர்.

வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழைப் பாடுவதோடும், அதற்குப் பொருள் கூறித் தத்துவ விளக்கம் செய்ததோடும் நின்றுவிடவில்லை. திருப்புகழிலிருந்து பல பாட்டுக்களை எடுத்து, பாராயணம், பஜனை, தியானம், பூஜை, அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, நைவேத்தியம், கற்பூரார்த்தி முதலியவற்றுக்குப் பயன்படும்படி தொகுத்தளித்திருக்கிறார். அதற்குத் 'திருப்புகழ் பாராயண தவநெறித் திருமுறை' என்று பெயர்.

அதே போல் வேல் வகுப்பில் உள்ள பதினாறு அடிகளை, அறுபத்து நான்கு வரிகளாக மாற்றியமைத்து அதற்கு 'வேல் மாறல்' என்று பெயரிட்டிருக்கிறார். அது ஒரு கவசம் போன்றது. மார்கழி திருப்புகழ் பாராயணத் திருமுறை, திருப்புகழ் கோபூஜை, அனுஷ்டானத் திருப்புகழ் போன்றவற்றையும் ஆக்கித் தந்திருக்கிறார். இரண்டாவது உலகப்போரின் போது, பகைவர்களிடமிருந்து நம் நாட்டையும் மக்களையும் காப்பதற்காகத் திருப்புகழிலிருக்கும் கோளறு பதிகங்களையும், வேல்வாங்கு வகுப்பு முதலிய பிற பாடல்களையும் முறையாகத் தொகுத்து, 'திருப்புகழ் பாராயணக் குண்டு' என்ற பதிப்பையும் வெளியிட்டு உதவினார்கள். இப் புத்தகங்களை இலவசமாகத் தந்து, எல்லோரையும் பாராயணம் செய்யச் சொல்லி அப்போது மக்களிடையே யிருந்த பயத்தை அகற்றினார்.

''திருப்புகழ் பாராயணக் குண்டு இருக்குமிடத்தில் ஜப்பான், ஜெர்மன் குண்டுகள் ஒன்றும் செய்யாது'' என்று சுவாமிகள் கூறுவது வழக்கம். அதை மெய்ப்பிப்பது போல், கல்கத்தாவில் பகைவரின் குண்டு வீச்சு நடந்த போது, 'திருப்புகழ் பாராயணக் குண்டு' இருந்த வீட்டில் குண்டு விழாமல் அடுத்த வீட்டில் குண்டு விழுந்ததைக் கண்ட மக்கள், சுவாமிகளின் மகிமையை உணர்ந்து போற்றினர்கள்.


சென்னையில் சுவாமிகளின் பாதம் பட்டுப் புனிதமடைந்த இல்லங்களில் மயிலாப்பூரில் வாழ்ந்த பிரபல வழக்கறிஞரும், அரசியல் வாதியுமான எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் வீடும் ஒன்று. அவருடைய மகன் எஸ். பார்த்தசாரதி, வள்ளிமலைச் சுவாமிகளிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். சுவாமிகள் தம் இல்லத்திற்கு வரும்போதெல்லாம் அவரை அன்புடன் வரவேற்று உபசரிப்பார். சுவாமிகளும் அவரிடம் பரிவோடும் பாசத்தோடும் பழகி வந்தார். ஆனால், அது தமது வாழ்க்கையையே மாற்றியமைக்கப் போகும் தெய்விகச் சேர்க்கை என்பதை அப்போது பார்த்தசாரதி சற்றும் உணரவில்லை. செல்வாக்கும் செல்வமும் மிக்க குடும்பத்தில் பிறந்த அவர், இல்லற வாழ்க்கையைத் துறந்து, ஆன்மிக வாழ்க்கை தரும் மன அமைதியை நாடிச் செல்வதற்கு சுவாமிகள் உதவப் போகிறார் என்று கற்பனையில் கூட அவர் அப்போது நினைக்கவில்லை. தமது வீட்டுத் தோட்டத்தில் ஒரு மகிழ மரத்தினடியில் எழுந்தருளியிருந்த ஓர் அம்மன் சிலை, சுவாமிகளின் தவ சக்தியாலும், அருளாசியாலும் சென்னைக்கு மேற்கே பன்னிரண்டாவது மைலிலுள்ள வடதிருமுல்லைவாயிலில் வைஷ்ணவி தேவியாகக் கோயில் கொள்ளப் போகிறாள் என்று அவர் நினைத்திருக்க முடியுமா? அல்லது அத்தேவியின் புனிதத் தொண்டிற்கே தம்மை அர்ப்பணித்துக் கொள்ளப் போகிறோம் என்று, பொருளீட்டுவதில் முழுமூச்சுடன் முனைந்திருந்த பார்த்தசாரதி அப்போது எண்ணித்தான் இருப்பாரா?



ஸ்ரீ மாசிலாமணீச்வரர் (திருமுல்லைவாயில்)

ஆன்மிகத்துறையில் நாட்டமோ, விக்ரக ஆராதனையில் நம்பிக்கையோயின்றி வாழ்ந்து வந்த பகுத்தறிவாளர் பார்த்தசாரதி, காவியுடையணிந்து, உள்ளத் தூய்மையோடு தியானத்திலாழ்ந்து, தேவியின் வழிபாட்டில் மனம் கரைந்து, வைஷ்ணவி ஆலயத்திற்கு வருபவர்களை அன்பு மொழியால் அரவணைத்து, அருள் வழிகாட்டும் சாது பார்த்தசாரதியாக மாறிய நிகழ்ச்சி, ஓர் அற்புத வரலாறாகும்.

சீமானுக்குரிய நாகரிக வசதிகளோடு ஆடம்பர வாழ்க்கை நடத்திய பார்த்தசாரதிக்கு, தெய்வங்களின் கற்சிலைகளையும், பஞ்சலோக விக்ரகங்களையும் வாங்குவது ஒரு 'ஹாபி'யாக இருந்து வந்தது. கலா ரசனையில் தோய்ந்த உள்ளமாதலால், நம் நாட்டின் கலைப் பொருள்களை வாங்கி, பங்களாவின் வரவேற்பு அறையில் வைத்து ஆனந்தப்பட்டார் அவர். வணங்குவதற்கும் வழிபாட்டுக்கும் உரிய தெய்வ வடிவங்களாக அவற்றைக் கருதாமல், கண்ணுக்கினிய காட்சிப் பொருளாகவும்



கருத்துக்குகந்த கலைச் செல்வங்களாகவும்தான் அவற்றைச் சேகரித்து வைத்தார் அவர்.

1946-ம் ஆண்டு. தீபாவளிக்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன. இரவு சாப்பாட்டுக்குப் பிறகு பார்த்தசாரதி படுக்கச் சென்று விட்டார். வழக்கமாகக் கலைப் பொருள்கள் விற்கும் அன்பர் ஒருவர் காரில் வந்து, பார்த்தசாரதியை அவசர அவசரமாக எழுப்பினர். அவர் உதவியுடன் வைக்கோலில் சுற்றப்பட்டிருந்த ஒரு கற்சிலையைக் காரிலிருந்து எடுத்து தாழ்வாரத்தில் இறக்கி வைத்தார்.

''மிஸ்டர் பார்த்தசாரதி! இதில் ஓர் அழகான கல் விக்ரகம் இருக்கிறது. இதை நான் உங்களுக்காகவே கொண்டு வந்திருக்கிறேன். இதற்குப் பணம் கொடுக்க வேண்டாம். இதை உங்களுக்கு அன்பளிப்பாகத் தருகிறேன். இரவு நேரத்தில் தொந்தரவு கொடுத்ததற்கு மன்னியுங்கள்'' என்று கூறி விட்டு, அந்த ஆசாமி காரில் ஏறிச் சென்று விட்டார்.

பார்த்தசாரதிக்குத் தூக்கக் கலக்கம். இலவசமாகக் கொடுத்து விட்டுப்போகும் அந்தச் சிலை சாதாரணமாகத்தானே இருக்கப் போகிறது என்ற அசிரத்தை வேறு. வைக்கோலைப் பிரித்துப் பார்க்காமலே படுக்கையறைக்குச் சென்று விட்டார்.

மறுநாட்காலையில் அதைப் பிரித்துப் பார்த்தபோது, அழகிய அம்மன் விக்ரகம் ஒன்று இருப்பதைக் கண்டார் பார்த்தசாரதி. அந்தச் சிலையின் கலையழகில் அப்படியே சொக்கிப் போனுர். அருகிலிருந்த திரு எஸ். துரைசாமி ஐயரும் வைத்த கண் வாங்காமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஐயர், அருள் நெறியில் நாட்டம் கொண்டவர். ஆன்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பவர். சமயப் பற்றும் தெய்வ நம்பிக்கையும் மிக்க அப்பெரியாரிடம் பார்த்தசாரதிக்கு என்றுமே பெருமதிப்பும் மரியாதையும் உண்டு. அவருடைய அறிவுரைகளை நிராகரிக்கத் துணிய மாட்டார்.

அந்த அம்மன் விக்ரகத்தை அறையில் காட்சிப் பொருளாக வைக்கக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் துரைசாமி ஐயர்.

அந்தச் சிலையில் கலையழகை மட்டும் காணவில்லை அவர். தெய்வ சாந்நித்தியத்தையும் கண்டார். அது வழிபாட்டுக்குரியது என்று உணர்ந்தார். அதை ஓர் இடத்தில் பிரதிஷ்டை செய்து பூஜை செய்து வர வேண்டும் என்று பார்த்தசாரதியிடம் கூறினுர். துரைசாமி ஐயர் சொல்லி விட்டால் அதைத் தட்ட முடியாது. பார்த்தசாரதியைப் பொறுத்தவரையில் துரைசாமி ஐயர் பேச்சுக்கு மறு பேச்சே யில்லை.

தோட்டத்திலிருந்த ஒரு மகிழ மரத்தடியில் அம்மனை வைத்துப் பூஜிப்பது என்று முடிவு செய்த பார்த்தசாரதி, காலங் கடத்த விரும்பவில்லை. தீபாவளிக்கு முதல் நாள், மரத்தடியில் ஒரு மேடை கட்ட வேண்டும் என்று நினைத்து கொளுத்துக்காரரைத் தேடினுர். எங்கும் கிடைக்கவில்லை. அந்த வேலையைத் தாமே செய்து விடுவது என்று தீர்மானித்து, மகனின் உதவியுடன் பள்ளம் தோண்ட ஆரம்பித்தார்.

அப்போது அங்கே வந்த அவருடைய அருமை நண்பர் திரு ராம்நாத் கோயங்கா, அந்தக் காட்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டார். 'என்ன, நம்ம பார்த்தசாரதியா இந்த வேலையைச் செய்கிறுர்?'--அவரால் தம் கண்களை நம்பவே முடியவில்லை.

''எதற்கு இதெல்லாம்?'' என்று கேட்டார் நண்பர்.

காரணத்தைக் கூறினுர் பார்த்தசாரதி. கோயங்கா பறந்து சென்றுர். ஒரு வடநாட்டுக் கொளுத்துக்காரரை எங்கிருந்தோ அழைத்து வந்து, அன்றே அந்த மேடையைக் கட்டி முடிக்கச் செய்தார். இனி அம்மனை பிரதிஷ்டை செய்தாக வேண்டும்.

துரைசாமி ஐயர் திருவல்லிக்கேணிக்குச் சென்று தேவி உபாசகர் திரு ஏ. பி. சுப்பிரமணிய ஐயரை அழைத்து வந்தார். அவரும் அம்மனின் சிலையைப் பார்த்து விட்டு அசந்து போனுர். மறுநாளே பிரதிஷ்டைக்கு ஏற்பாடாகியது.

மறுநாள் தீபாவளி புண்ணிய நாள். தேவியின் அருளால், அஞ்ஞான இருள் நீங்கி, ஆன்ம ஒளி பளிச்சிடும் அந்தப் பொன்னுளில், மகாலட்சுமி அஷ்டோத்திரத்துடனும், நைவேத்திய கற்பூரார்த்தியுடனும் அம்பிகை மகிழ மரத்தடியில் கோயில் கொண்டாள்.

விடைபெறும் முன் சுப்பிரமணிய ஐயர், பார்த்தசாரதியைப் பார்த்து, ''தினமும் பூஜை செய்ய உங்களுக்கு நேரம் இருக்காது என்று எனக்குத் தெரியும். வெள்ளிக்கிழமைகளில் மட்டுமாவது நீங்கள் அம்மனுக்குப் பூஜை செய்ய வேண்டும். ஒன்றும் அதிகமாகச் செய்ய வேண்டாம். ஜலத்தினுல் அபிஷேகம் செய்து, பாலையோ, பழத்தையோ நைவேத்தியம் செய்து, கற்பூரார்த்தி காட்டி விடுங்கள், போதும். உங்களுக்கு மனச்சாந்தி ஏற்படும்'' என்று சொல்லி விட்டுப் போனுர். சுப்பிரமணிய அய்யர் கூறியபடி அந்த அம்மன் சிலையை மகாலட்சுமி யாகவே கருதி, வெள்ளிக்கிழமைதோறும் சிரத்தையுடன் பூஜை செய்து வந்தார் பார்த்தசாரதி. அங்கு வரும் கூட்டம் நாளடைவில் பெருகியது. மகாலட்சுமி அஷ்டோத்திரத்துடன் லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றது. பூஜையிலேயே நம்பிக்கையற்றிருந்த பார்த்தசாரதியை, பராசக்தி தனக்கு ஒரு பூசாரியாக்கிக் கொண்டு லீலை புரிந்தாள்!

பார்த்தசாரதியின் இல்லத்திற்கு வரும்போதெல்லாம் ஸ்ரீ வள்ளி மலை திருப்புகழ் சுவாமிகள், அந்த அம்மன் சிலையின் அழகைப் பார்த்து வியப்பது வழக்கம். ''வைஷ்ணவி ரொம்ப அழகா யிருக்கிறுள்'' என்று கூறுவார். அவர் அப்படிக் கூறுவதைக் கேட்டு பார்த்தசாரதி ஆச்சரியப் படுவார்.

'மகாலட்சுமி' என்று அவர் நினைத்துப் பூஜை செய்து கொண்டிருந்த விக்ரகத்தை 'வைஷ்ணவி' என்று சுவாமிகள் அழைக்கும் காரணத்தை பார்த்தசாரதி அறிய விரும்பினுர். அவரிடம் ஒருநாள் கேட்கவும் செய்தார்.

அதற்கு சுவாமிகள், ''என் வடநாட்டு யாத்திரையின்போது நான் காஷ்மீர் சென்றிருந்தேன். அங்கு ஜம்முவுக்கு முப்பது மைல் தொலைவில்

இருக்கும் ஒரு மலைக் குகையில் வைஷ்ணவியைத் தரிசித்தேன். அதைப் போலவே இந்த விக்ரகமும் இருப்பதால் இதை வைஷ்ணவி என்று அழைக்கிறேன்'' எனக் கூறினார்.

சுவாமிகள் சொல்லி விட்டார். அது போதும் பார்த்தசாரதிக்கு. அன்று முதல் அன்னையை வைஷ்ணவி தேவியாகவே பூஜித்து வந்தார்.

1948-ம் ஆண்டு இறுதியில் ஒருநாள் வள்ளிமலை சுவாமிகள் பார்த்தசாரதியை அழைத்து, ''நான் உன்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கப் போகிறேன், செய்வாயா?'' என்று கேட்டார்.

''என்னால் ஆகக் கூடியதாக இருந்தால் அந்தப் பொறுப்பை ஏற்கிறேன்'' என்று பதில் சொன்னார் பார்த்தசாரதி.

''உன்னால் முடியாததைச் சொல்வேனா?'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார் சுவாமிகள். தம்முடைய விருப்பம் என்னவென்று அப்போது சுவாமிகள் தெரிவிக்க வில்லை.

ஒரு வருடம் கழித்து ஒருநாள் சுவாமிகள், பார்த்தசாரதியைப் பார்த்து, ''நீ பூஜிக்கும் வைஷ்ணவி தேவி என்னை மிகவும் வசீகரித்து விட்டாள். என் இஷ்ட தேவதையாகவும் வள்ளியாகவும் நான் கருதும் பொங்கித் தாயை இவளோடு ஐக்கியப்படுத்தி விட வேண்டும் என்று விரும்புகிறேன். எனவே, வைஷ்ணவியின் பூஜையை நியமத்துடன் நீ விடாமல் செய்து வரவேண்டும்'' என்று சுவாமிகள் கூறிய போது பார்த்தசாரதிக்கு வியப்பும் ஒருவித அச்சமும் ஏற்பட்டது. ''சுவாமி, நான் செய்யும் பூஜையைத்தான் தாங்கள் பார்த்திருக்கிறீர்களே, இதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது'' என்றார். அதற்கு சுவாமிகள், ''இதற்கு மேல் ஒன்றும் வேண்டாம். கோடையில் கொஞ்சம் தயிர் சாதம் நைவேத்தியம் செய்து விடு, போதும்'' என்று பதில் கூறினார். 'தொழிலிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கும் தம்மிடம் இத்தனை பெரிய பொறுப்பை சுவாமிகள் ஒப்படைக்கிறாரே, நம்மால் முடியுமா?' என்று பார்த்தசாரதி ஒருகணம் சிந்தித்தார்.

சுவாமிகள் சென்ற பிறகு பார்த்தசாரதிக்குப் பழைய நினைவுகள் வந்தன. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன், 1930-ம் ஆண்டிலேயே நண்பர்களோடு வள்ளிமலைத் திருப்புகழ் ஆச்ரமத்திற்குச் சென்று சுவாமிகளைத் தரிசித்ததும், பின்னர், நேரம் கிடைத்தபோதெல்லாம் அங்கு சென்று வந்த நாட்களையும் அவர் நினைவுபடுத்திக் கொண்டார். அப்போதெல்லாம் பிறருடன் ஏதோ வேடிக்கையாகச் சென்றாரே தவிர, பக்திப் பரவசத்துடனோ, மெய் சிலிர்த்தோ, மெய்ம்மறந்தோ, அவரெதிரில் நின்றதில்லை. அவரிடம் கைகட்டி வாய் பொத்தித் தம் குறைகளைக் கூறி உபதேசம் கேட்டதுமில்லை. 'ஏதோ ஒரு மகான்' என்ற மரியாதை மட்டும் இருந்தது. அவ்வளவுதான்.

எந்த மனநிலையோடு நாம் மகான்களை அணுகினால் என்ன? நம் முற்பிறவியின் வினைகளையும், தற்கால எண்ண எழுச்சிகளையும், நம் எதிர்காலப் போக்கையும் தெள்ளத் தெளிவாக உணரும் ஆற்றல் படைத்தவர்

களாதலால், அவர்கள் தமது கடாட்சத்தாலேயே கருணையைப் பொழிவார்கள். அருள் மொழிகளைக் கூறி ஆட்கொள்வார்கள்.

திருப்புகழ் ஆசிரமத்திற்கு வந்த பார்த்தசாரதியிடம் ஒரு நாள் வள்ளிமலை சுவாமிகள், ''நீ குருவைத் தேடி அலைய வேண்டாம். குருவே உன்னைத் தேடிக் கொண்டு வருவார்'' என்று கூறினர். அன்று சென்னைக்குக் காரில் திரும்பி வரும் போது பார்த்தசாரதி, சுவாமிகள் கூறியவற்றை அடிக்கடி நினைத்துப் பார்த்துக் கொண்டார். 'எதற்காக சுவாமிகள் அப்படிச் சொன்னர்? நாம் அவரிடம் ஒன்றுமே கேட்கவில்லையே. நான் எந்த குருவையும் நாடி அலையவில்லையே. உபதேசம் பெற வேண்டும் என்ற எண்ணமும் என் மனத்தில் இல்லையே. எனக்குத்தான் சொன்னரா? இல்லை...வேறு யாருக்காவது சொன்னரா? குருவாவது சீடராவது! நல்ல வேடிக்கை!...' சென்னை வரும் வரை சிந்தனை தொடர்ந்தது. ஆனல், விடை கிடைக்கவில்லை. அவருக்குக் குழப்பம்தான் அதிகமாகியது.

'குருவே உன்னைத் தேடிக்கொண்டு வருவார்' என்று பல ஆண்டுகளுக்கு முன்பு வள்ளிமலை சுவாமிகள் சொன்னது ஒரு நாள் பலித்தே விட்டது. மலையை விட்டு இறங்கி வந்த சுவாமிகள், சென்னைக்கு வந்து பார்த்தசாரதியின் இல்லத்திற்குச் சென்ருர். மகிழ மரத்தின் அடியில் எழுந்தருளியிருந்த பராசக்தியை வைஷ்ணவியாகக் கண்டார். வள்ளியம்மையையும் விநாயகரையும் முருகனையும் திருமாலையும் பரமசிவனையும் எல்லா தெய்வங்களையும், சகல தேவதைகளையும் ஆதி பராசக்தியின் உருவில் அவர் தரிசித்திருக்க வேண்டும். திருப்புகழ் மாமந்திரத்தால் தாம் பெற்ற தவ சக்தியை அந்த விக்ரகத்தில் ஆவாஹனம் செய்ய நினைத்தார்.

ஸ்ரீ வைஷ்ணவி தேவி



அந்த நோக்கத்துடன் 1950-ம் ஆண்டு போகிப் பண்டிகையன்று சுவாமிகள் வைஷ்ணவி தேவிக்குப் பூஜை செய்தார்.

அன்று சில பெண்மணிகளோடு ஒரு குறத்திப் பெண்ணையும் அழைத்து வந்திருந்தார் சுவாமிகள். ஒரு சிவப்புப் புடவையையும் வாங்கி வந்திருந்தார். திருப்புகழ் பாடல்களை உணர்ச்சி ததும்பப் பாடினர். அவர் குரல் தழுதழுத்தது. கண்கள் பனித்தன. சுற்றியிருந்தவர்களின் கண்களும் குளமாயின. பார்த்தசாரதியும் கண் கலங்கினர். அவருக்குத் திருப்புகழ் தெரியாது. அர்த்தமும் புரியவில்லை. இருந்தும் ஏனே நெக்குருகிப் போனர்.

சுவாமிகள் திருப்புகழ் பாடிக்கொண்டே தேவியை மூன்று முறை வலம் வந்தார். பின்னர் தாம் வாங்கி வந்திருந்த

சிவப்புப் புடவையை எடுத்து அந்தக் குறத்திப் பெண்ணுக்குக் கொடுத்தார். பூஜை முடிந்து விட்டது. ஆவாஹனம் ஆகி விட்டது.

தமது நாற்பதாவது வயதில் தந்தையையிழந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் பார்த்தசாரதி. பணமிருந்தென்ன? மனைவி தீராத நோய்க்கு ஆளாகியிருக்கும் போது கணவனுக்கு வீட்டில் நிம்மதியிருக்குமா? அவளும் இரண்டாண்டுகளில், ஐந்து செல்வங்களுடன் கணவனையும் தனியே தவிக்க விட்டு விட்டு மீளாத் துயில் கொண்டு விட்டாள். வாழ்க்கையே சூன்யமாகி விட்டது பார்த்தசாரதிக்கு.

இந்தத் துயரத்தை அடுத்து, அவர் மானேஜிங் டைரக்டராக இருந்த பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக் கட்டடம் திடீரென்று இடிந்து விழுந்ததால் சில ஊழியர்கள் உயிரிழந்தனர். இந்தப் பேரிடி அவர் உள்ளத்தை சுக்கு நூறாக்கியது. வெளிக்கு சுகவாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவரின் உள்ளம் அழுது கொண்டிருந்தது!

இந்த நிலையிலிருந்தவருக்கு மன ஆறுதல் தரத்தானோ என்னவோ, எங்கேயோ இருந்த அம்பிகை அவர் வீடு தேடி வந்தாள். அவளைப் பக்தியுடன் ஆராதிப்பதில் பெரும் அமைதி கண்டார் பார்த்தசாரதி.

குருவாக வந்து கருணையைப் பொழிந்து, பொன் மொழிகளால் அவரை அருள் நெறிக்கு அறிமுகப் படுத்திய வள்ளிமலை சுவாமிகளும் 1950-ம் வருடம் நவம்பர் மாதம் மகாசமாதி அடைந்து விட்டார்.

அடுத்து, இளம் பிராயத்திலிருந்தே உடல் நலம் குன்றியிருந்த தன்னை, அன்போடும் ஆதரவோடும் வளர்த்து ஆளாக்கிய அருமை அன்னையும் மறைந்து விட்டாள்.

அதையடுத்து தம் இருபது வயது மகனைத் திடீரென்று பறிகொடுத்தார் அவர். வீட்டில் ரேடியோ ரிப்பேர் செய்து கொண்டிருந்தவன், மின் அதிர்ச்சியால் தாக்கப்பட்டு அகால மரணமடைந்தான். சாதாரண துக்கமா அது? ஒரு மனிதனால் எத்தனைதான் தாங்க முடியும்? இல்லறத்தைப்பற்றிக் கொண்டு எப்படியாவது வாழ்ந்து விடலாம் என்று நினைத்தால், விதி பிடிவாதமாகப் பழி வாங்கினால் என்ன செய்வது? அப்போது தேவியின் பாதத்தைத் தவிர பார்த்தசாரதிக்கு வேறு புகலிடமில்லை. அவளைத் தூக்கிக் கொண்டு சென்னைக்கு மேற்கேயுள்ள திருமுல்லைவாயிலுக்கு ஓடினார். அங்கு, அவர் ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த பெரிய பண்ணையில் தீபாவளி தினத்தன்று தேவியைப் பிரதிஷ்டை செய்து, அவளது திருவடித் தொண்டிற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

சீர்காழிக்குக் கிழக்கே ஒன்பதாவது மைலில் தென் திருமுல்லைவாயில் என்ற ஒரு சிவத்தலம் இருக்கிறது. அது திருஞான சம்பந்தரின் தேவாரம் பெற்று சிறப்பு வாய்ந்தது.

சென்னைக்கு மேற்கே பன்னிரண்டாவது மைலில் உள்ள சிவத்தலம் வட திருமுல்லைவாயில் என்று அழைக்கப்படுகிறது. சுந்தரமூர்த்தி

நாயனுர், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள் முதலியவர்கள் இத்தலத்தைக் குறித்துப் பாடி யிருக்கிருர்கள்.

வட திருமுல்லைவாயில், நில வளமும் நீர் வளமும் நிறைந்து, அழகும் அமைதியும் சூழ்ந்த மேட்டுப்பாங்கான சிற்றூர். 'முருக அமர் சோலை சூழ்த் திருமுல்லை' என்று சுந்தரர் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர்.

அக் காலத்தில் தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்த தொண்டைமான் சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்டிருந்தது திருமுல்லை. அந்த மன்னன், கடம்பர், குறும்பர் என்ற பகைவர்களை முறியடிக்கச் சென்று, போரில் தோற்று, யானையின் மீது ஏறி வெகு வேகமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது திருமுல்லையில், முல்லைக் கொடிகள் யானைகளின் கால்களைச் சுற்றிக் கொண்டு அதை ஓட விடாமல் தடுத்தன. அதைக் கண்டு வெகுண்ட தொண்டைமான், தன் வாளை உருவி, முல்லைக் கொடிகளை வெட்டினுன். அப்போது தனது வாளில் ரத்தக் கறை படிந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். கீழே குனிந்து, வெட்டிய கொடிகளை விலக்கிப் பார்த்தான். அங்கு ஒரு சிவலிங்கம் தென்பட்டது. வாளால் வெட்டப்பட்ட இடத்திலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. சிவ பக்தனுன அம்மன்னன் துடித்துப் போய் விட்டான்.

''ஐயோ, எத்தனை பெரிய அபசாரம் செய்து விட்டேன். என் அப்பனின் தலையைப் பிளந்து விட்டேனே! இந்தப் பாவத்திற்கான தண்டனையை நான் ஏற்றேயாக வேண்டும்'' என்று உரக்கக் கதறியபடி அதே வாளால் தன் உயிரை மாய்த்துக் கொள்ளப் போனுன். அப்போது அங்கு தோன்றிய சிவபெருமான் அவனைத் தடுத்தார்.

''பக்தனே, அறியாமல் செய்த பிழைக்கு நீ வருந்தாதே. எந்த ஆயுதத்தாலும், யாராலும், எக்காலத்திலும் எனக்குத் துன்பம் விளைவிக்க முடியாது. நான் மாசிலாமணி—களங்கமற்ற இரத்தினம். நந்திதேவனை அனுப்பி உன் பகைவர்களை முறியடிக்கச் சொல்கிறேன். நீ சிறிதும் கவலைப் படாதே'' என்று அபயம் கொடுத்தார். தன்னைத் தடுத்தாட் கொண்ட ஆண்டவனுக்குத் தொண்டைமான் அங்கு ஓர் ஆலயம் எழுப்பினுன்.

திருமுல்லைவாயிலில் உறையும் இறைவனின் திருநாமம் மாசிலாமணீச்வரர். இறைவியின் திருநாமம் கொடியிடை நாயகி. அகளங்க இரத்தினேச்வரர் என்றும், அகளங்க ரத்தினேச்வரி என்ற திருநாமங்களும் அவர்களுக்கு உண்டு. அம்பிகையை லதாமத்யாம்பா என்றும் அழைக்கிருர்கள்.

தெற்கு நோக்கியுள்ள ராஜகோபுரமும், அதன் முன்னுலிருக்கும் பதினுறு கால் மண்டபமும் மாசிலாமணீச்வரர் ஆலயத்தின் பழைமைக்கு சுட்டியம் கூறுகின்றன.

கோபுரத்தினுள் நுழையும் போதே நேரே அமர்ந்திருக்கும் இடையூறு அகற்றும் ஆனைமுகத்தான் நம்மை வரவேற்கிருர். விநாயகரின் சந்நிதிக்கு மேலே ஒரு சித்திர மாடத்தில், தவக் கோலத்தில் வீற்றிருக்கும் சலவைக்கல் கணபதி நம் கவனத்தை ஈர்க்கிருர். ஐயனும் அம்பிகையும் கிழக்கு நோக்கி திருச்சந்நிதி கொண்டிருக்கிருர்கள்.

இந்தக் கோயிலுக்குச் செல்பவர்கள் ஓர் அதிசயத்தைக் காணலாம். நந்தி தேவர், சுவாமியைப் பார்த்துக் கொண்டிராமல், கொடிமரப் பீடத்தை நோக்கிக் கொண்டிருக்கிறார். நந்திதேவனை அனுப்பி, பகைவர்களை முறியடிப்பதாகத் தொண்டைமானுக்கு சிவபெருமான் வாக்களித்தாரல்லவா? எனவேதான் பகைவர்களை நோக்கிப் பாய்வது போன்ற பாவத்துடன் இந்த ஆலயத்தில் நந்திப் பெருமான் எதிர்ப்புறத்தை நோக்கி யிருப்பதாகக் குருக்கள் கூறினார். திருச்சந்நிதி மண்டபத்தில் இரு எருக்க மரத் தூண்கள் இருப்பதையும் சுட்டிக் காட்டினார் அவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், பரவை நாச்சியாரை மணம் புரிந்து கொண்டு திருத்தலங்கள் தோறும் சென்று, அம்பலவாணனைத் தொழுது, பக்தியால் கரைந்து, பதிகங்கள் பாடி, சென்னையை யடுத்த திருவொற்றியூரை அடைந்தார். அங்கு பெருமானின் ஆசியோடு சங்கிலி நாச்சியார் என்ற சிவபக்தையை மணம் புரிந்து கொண்டார். எக்காரணம் கொண்டும் அவளை விட்டுப் பிரிவதில்லை யென்று சிவபெருமானின் மீது ஆணையிட்டு, மகிழ மரத்தடியில் தன் மனைவிக்கு வாக்குத் தந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சிவபெருமான் தம் பக்தனைச் சோதிக்கத் திட்டமிட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உள்ளத்தில் திருவாரூர்ப் பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற எல்லையற்ற வேட்கை ஏற்பட்டது. மனைவிக்குக் கொடுத்த வாக்கை விட, ஆண்டவனின் அழைப்பையே அவர் புனிதமாகக் கருதினார். ஆணையை மீறி சங்கிலி நாச்சியாரைப் பிரிந்து திருவாரூர் நோக்கிப் பயணமானார். ஆனால், திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததுமே, தெய்வத்தின் மீது இட்ட ஆணையை மீறிய குற்றத்திற்காக அவருக்குத் தண்டனை கிடைத்தது. அவரது இரு கண்களும் ஒளி யிழந்தன. வெளியுலகம் அவருக்கு இருண்டு போயிற்று.

கண்ணிழந்த போதிலும் நம்பிக்கை இழந்து விடவில்லை சுந்தரர். பிழை பொறுத்தருளும்படி அப்பனிடம் அழுதார். மீண்டும் கண்களைப் பெற்று ஆரூர்ப் பெருமானைத் தரிசித்து விடலாம் என்ற நம்பிக்கையால் உந்தப்பட்டு, பயணத்தைத் தொடர்ந்தார். திருமுல்லைவாயிலை அடைந்ததும் மாசிலாமணீச்வரர் மீது உள்ளம் உருகும் பதிகங்களைப் பாடினார். தம் துயர் நீக்கும்படி நெக்குருக வேண்டிக் கொண்டார். அதன் பலனாக காஞ்சியில் ஒரு கண்ணும் திருவாரூரில் ஒரு கண்ணும் கிடைக்கப் பெற்று மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார்.

தனக்கு மிஞ்சிய பக்திமான் இல்லை என்ற சுந்தரரின் செருக்கை, தூய பக்தியில் கரையச் செய்த பெருமான் உறையும் ஊர் இது. அந்த மாசிலாமணியைப் பார்த்து, 'திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரம் சுடரே' என்று சுந்தரர் பாடியுள்ளார்.

சுந்தரரின் திருப்புகழால் சிறப்புற்ற திருமுல்லைவாயிலில், திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் அருட்கரத்தால் பூஜிக்கப்பட்ட வைஷ்ணவி தேவி திருக்கோயில் கொண்டது மிகப் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. அது மட்டுமின்றி 'அம்பாபுரி' என்று அழைக்கப்படும் சக்தி

பீடத்தில், அன்னை பராசக்தி அருளாட்சி புரிவதோடு அத்தலத்தைத் திருப்புகழ் பரப்பும் திருப்பீடமாகவும் அமைத்துக் கொண்டது, அவளது திருவருளின் தனி மகிமை என்பதில் சந்தேகமில்லை.

பதினுறு ஆண்டுகளுக்கு முன்னர், கல்லும் முள்ளும் மண்டிக் கிடந்த வறண்ட பூமியில் எளிமைக் கோலத்தில் சிறு குடிசையில் குடி புகுந்த வைஷ்ணவிதேவி, இன்று இயற்கை எழில் கொழிக்கும் சுந்தரச் சூழ்நிலையில் சிங்கார ஆலயம் எழுப்பிக் கொண்டு செளந்தர்ய தேவதையாகக் கொலு வீற்றிருக்கிருள்.

எழிலோடும் எடுப்போடும் அமைந்திருக்கும் தோரண வாயில் அன்னையின் ஆலயத்தைக் காண 'வா வா' என்று நம்மை அழைக்கிறது. இருபுறமும் மரங்களடர்ந்த சோலைகளுக்கிடையே செல்லும் பாதையில் நடக்கிருேம். நெடி துயர்ந்த தென்னை மரங்களின் ஓலைகள் சலசலக்க, மலர் வகைகளின் லேசான நறுமணம் காற்றில் மிதக்க, தேன் தேடி அலையும் வண்டுகளின் ரீங்காரத்தைப் பின்னணியாகக் கொண்டு பறவையினங்கள் இனிய குரல் எழுப்ப, அமைதி தேவதை அந்த தெய்வ அரங்கத்தில் நடனம் பயிலுவதைக் கண்டு களிக்கிருேம்.

வைஷ்ணவி ஆலயம், ஆச்ரம சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. அங்கு அழகான சிறு குடில்கள் நிறையக் கட்டி வைத்திருக்கிருர்கள். ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்களும், சாதுக்களும் அங்கு வசிக்கிருர்கள். வெளியூரிலிருந்து குடும்பத்தோடு சில தினங்கள் வந்து தங்கி, தேவியைத் தரிசித்து அமைதியும், ஆனந்தமும் பெற்றுச் செல்வதற்கும் வசதிகள் செய்து தருகிருர்கள். இந்த ஆச்ரமத்திற்கு நுழைந்து விட்டால் சம்சார பந்தத்திலிருந்து சில நாட்களாவது விடுபட்டு இங்கு வந்து தங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்ருமல் இருக்காது.

தென்புறத்திலுள்ள ஒரு மண்டபத்தின் வழியாக நாம் ஆலயத்தினுள் நுழைகிருேம். நுழை வாயிலுக்கு வெளியே இருபுறமும் ஹயக்ரீவரும் அகத்தியரும் காட்சி தருகிருர்கள். பிராகாரத்தில் காலடி எடுத்து வைத்ததும் தட்சிணமூர்த்தியைத் தரிசிக்கிருேம். அங்கிருந்தபடியே சுற்றுப்புறத்தை ஒரு நோட்டம் விடுகிருேம். அங்கு எல்லாமே தூய்மைக்கு அடையாளமாகப் பளிச்சென்று இருப்பதைக் கவனிக்கிருேம். எல்லாமே அப்போது தான் கட்டி முடிக்கப்பட்டது போல் அத்தனை சுத்தமாக இருக்கிறது. நவீனக் கோயிலாகக் காட்சி தந்தாலும், அங்கு தெய்வ சாந்நித்யம் நிறைந்திருப்பதை நம்மால் உணர முடிகிறது.

அழகிய முன் மண்டபத்தில் நுழைந்து மேற்கே திரும்புகிருேம். கருவறையில் ஆண்டாளின் திருக்கோலத்தில் நின்றிருக்கும் வைஷ்ணவி தேவி, எழிற் தேவதையாக எங்களுக்குக் காட்சி தருகிருள். அவளது வடிவழகில் கண்ணும் கருத்தும் ஆழமாகப் பதிகின்றன.

வழக்கமாக ஆலயங்களில் நாம் பார்க்கும் கருவறையைப் போல் இது தோற்றமளிக்கவில்லை. சலவைக் கற்களால் ஆன அந்த அறையில், இருளையோ கரப்பையோ, எண்ணெய்ப் பிசுக்கையோ, ஒரு சொட்டுத்

தண்ணீரையோ பார்க்க முடியாது. இதரக் கோயில்களில் கருவறையில் நாம் அனுமதிக்கப்படுவதில்லை. இங்கேயோ சாதி மத வேறுபாடின்றி எல்லோரும் தாராளமாகப் போகலாம். இருப்பினும் அங்கு நிலவும் தூய்மையின் காரணமாக சற்று யோசித்து விட்டு, தயக்கத்துடனேயே உள்ளே செல்லுகிறோம்.

தேவியின் திருவடிகளை அணுகுவதற்கு முன், முன்னறையில் இரு புறமும் வீற்றிருக்கும் கணபதியையும் சுப்பிரமணியப் பெருமானையும் தரிசித்துக் கொள்கிறோம்.

கருவறையின் பின்புறச் சுவரை அலங்கரிக்கும் ஸ்ரீ அருணகிரிநாதர், ஸ்ரீ ரமண பகவான், ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், ஸ்ரீ வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் ஆகிய நால்வரின் திருவுருப் படங்கள் வைஷ்ணவி ஆலயத்திற்கும் அருணாசல மகிமைக்கும் உள்ள தொடர்புக்குச் சான்று கூறுகின்றன. சலவைக்கல் படிவங்களாக சங்க நிதியும் பதும நிதியும் இருக்கின்றன. அவற்றைத் தவிர, இரு தேவியாருடன் கூடிய ஆறுமுகர், காமாட்சி, மீனாட்சி முதலிய விக்ரகங்களும் இருக்கின்றன.

வைஷ்ணவி தேவி எழுந்தருளியிருக்கும் பீடத்தில், அவள் பாதத்திற்கு நேரே ஒரு சிறு ஸ்ரீசக்ரம் இருக்கிறது. அது ஸ்ரீ ரமண பகவானின் திருக்கரம் பட்டுப் புனிதம் அடைந்தது. அதற்கு அபிஷேகமும் அர்ச்சனையும் நடைபெறுகிறது.

இடப்புறம் உள்ள மாடத்தில் கொள்ளை அழகுடன் ஒரு சிறு ஸ்படிக விநாயகர் அமர்ந்திருக்கிறார். அது தமக்குக் கிடைத்த நிகழ்ச்சியை சாது பார்த்தசாரதி நினைவு கூர்ந்தார்.

தமது பங்களாவில் மகிழ மரத்தடியில் வைஷ்ணவி தேவி கோயில் கொண்ட பின்னர், அந்தத் தோட்டத்தில் ஒரு விநாயகரையும் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று வள்ளிமலை சுவாமிகள் அடிக்கடி கூறிக் கொண்டிருந்தாராம். ஆனால், ஏனோ பார்த்தசாரதி அந்த விருப்பத்தை நிறைவேற்றாமல் ஒத்திப் போட்டுக் கொண்டே வந்திருக்கிறார். ஒருநாள் இரவு கனவில் குட்டி விநாயகர் தோன்றி பார்த்தசாரதியின் சுண்டு விரலைப் பற்றி இழுத்துக் கொண்டு, தேவியை வலம் வந்து விட்டு மறைந்து விட்டாராம். இதன் பொருளோ கருத்தோ பார்த்தசாரதிக்கு அப்போது புரியவில்லை.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து, முன்பின் தெரியாத ஆசாமி ஒருவர் சைக்கிளில் வந்து, தம்மிடம் ஒரு ஸ்படிக விநாயகர் இருப்பதாகவும், தேவையானால் அதை வாங்கிக் கொள்ளலாம் என்றும் கூறினார். இந்தச் சின்னஞ்சிறு விநாயகர் வருவதற்கு முன்னோடியாகத்தான் ஆனைமுகத்தான், சிறிய உரு தாங்கி தமது கனவில் வந்திருக்க வேண்டும் என்று நினைத்து, அந்த விநாயகரை உடனே வாங்கி வைத்துக் கொண்டார் பார்த்தசாரதி.

மண்டபத்திற்கு வெளியே, அன்னையை நோக்கியபடி வீற்றிருக்கும் வியாச விநாயகரின் சிலை அவருக்குக் கிடைத்த விவரமும் வியக்கும்படியாகத்தான் இருந்தது.


பத்தாண்டுகளுக்கு முன்பு வைஷ்ணவி ஆலயத்தில் ஒருநாள் மாலை பூஜையின் போது, சித்தி விநாயகருக்கு கற்பூரார்த்தி காட்டிக் கொண்டிருந்தார் பார்த்தசாரதி. அப்போது, விநாயகர் உருவம் லேசாக மறைந்து, அந்த இடத்தில் காளியின் சொரூபம் தெரிந்தது. அந்தக் காட்சி சிறிது நேரம் நீடித்தது. தமது உதவியாளரை அழைத்து, சித்தி விநாயகருக்கு ஒரு தேங்காயைப் பலியாக உடைக்கும்படிக் கூறினார் பார்த்தசாரதி.

அன்று நள்ளிரவில், விநாயகருக்கு சிவப்பு அரிசியும், தேனும் நைவேத்தியமாகப் படைத்தார். அவற்றைப் பக்தர்களுக்குப் பிரசாத மாக வழங்காமல் கோயிலுக்கு வெளியே கொண்டு போய்ப் போட்டு விட்டார். இது நடந்து சில வருடங்கள் ஆன பிறகே, வைஷ்ணவி ஆலயத்தில் வியாச விநாயகர் சந்நிதி தோன்றியது. அந்த விநாயகர் அங்கு எப்படி வந்து சேர்ந்தார்?

சாது பார்த்தசாரதிக்குக் கோடைக்கானலில் ஒரு பங்களா இருந்தது. ஒருசமயம் சீசனுக்காகக் கோடைக்கானலுக்குச்சென்றிருந்த அவருடைய மகன் பாஷ்யம், அந்தப் பங்களாவில் தங்கி யிருந்தார். பழநிக்குச் செல்லும் காட்டுப் பாதையில் ஒருநாள் மாலை அவர் 'வாக்கிங்' சென்ற போது, வழியில் ஒரு சாதுவைச் சந்தித்துச் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்.

அந்த சாது சில நாட்கள் கழித்து பாஷ்யம் வசித்த பங்களாவுக்கு வந்தார். அப்போது பாஷ்யத்தின் நண்பர் ஒருவர், வீட்டில் இருந்தார். அந்த சாதுவை பிச்சைக்காரர் என்று நினைத்து அவருக்குச் சில்லறை கொடுத்து அனுப்புவதற்காக வெளியே வந்தார் நண்பர். அருகில் நெருங்கியதும் வந்தவரின் முகத்தைப் பார்த்து அவர் ஒரு மகான்

ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத் தோற்றம்



என்பதை உணர்ந்தார். உள்ளே வந்து ஏதாவது ஆகாரம் உட்கொண்டு செல்லும்படி அவரைப் பணிவுடன் வேண்டிக் கொண்டார். எத்தனை அழைத்தும் சாது உள்ளே வர மறுத்து விட்டார்.

அன்றிரவு அந்தப் பங்களாவின் தோட்டக்காரனின் கனவில் அந்த சாது தோன்றினர். சில்வர் காஸ்கேட் நீர்வீழ்ச்சிக்கு மேலே, மலையுச்சியிலுள்ள குகையில் ஒரு பிள்ளையாரின் சிலை இருக்கிறதென்றும் அங்கு போய் அதை எப்படியாவது கொண்டு வரும்படியும் கூறி விட்டு மறைந்தார். மறுநாள் தோட்டக்காரன், அந்த சாது குறிப்பிட்ட இடத்திற்குச் சிரமப்பட்டு ஏறிச் சென்று பார்த்தார். என்ன ஆச்சரியம்! அங்கு ஒரு பிள்ளையார் சிலை இருந்தது. அதை எடுத்து வந்து எஜமானனிடம் கொடுத்தான். அந்த விநாயகர் சிலை சிறிது காலம் அந்தப் பங்களாவிலேயே பூஜையில் இருந்து வந்தது.

மாதங்கள் சென்றன. அந்த விநாயகர் திருமுல்லைவாயிலில் உள்ள வைஷ்ணவி கோயிலுக்குக் குடி பெயர வேண்டும் என்ற திருவுளம் கொண்டார். இல்லாவிட்டால் மலையில் கிடைத்த விநாயகரை தந்தையிடம் கொடுத்து விடவேண்டும் என்று பாஷ்யத்திற்கு ஓர் எண்ணம் தோன்றுவானேன்? மலை குகையைப் போல் ஒரு சந்நிதியை ஏற்படுத்திக் கொண்டு ஆலயத்தில் அமர்ந்து விட்டார் அந்த விநாயகர்.

கிழக்குப்புறத்திலுள்ள கோபுரத்திற்கு வெளியே, சற்றுத் தொலைவில் வைஷ்ணவி தேவிக்கு நேரே எழுந்தருளி யிருக்கும் வியாச விநாயகருக்கு அருகில் நின்று கொண்டால், அன்னையை நன்ருகத் தரிசிக்க முடிகிறது. திருவானைக்காவில், அகிலாண்டேச்வரிக்கு எதிரில் பெரிய விநாயகர் அமர்ந்திருக்கிருர். இங்கு பராசக்திக்கு எதிரே குட்டி விநாயகர் அமர்ந் திருக்கிருர்.

இந்த விநாயகரைப் பார்த்தால், கருங் கல்லாலான சிலை யென்றே நினைக்கத் தோன்றும். உண்மையில் இது மண்ணல் செய்து, சூளையில் சுடப்பட்ட சிலை. அந்த உருவமே புதுமையாக இருக்கிறது. அவருக்கு தும்பிக்கையைச் சேர்த்து மூன்று கரங்கள்தான் இருக்கின்றன. அந்தத் தும்பிக்கையோ வளைந்திராமல், நேராகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

வியாச விநாயகருக்கு வெள்ளிக்கிழமை தோறும் ஒரு தேங்காய் உடைத்தால், எல்லா நன்மைகளும் ஏற்படும் என்று அங்கு எழுதி வைக்கப் பட்டிருக்கிறது.

காளிக்கொம்பன்
பலியோர் தேங்காய்
கவியோர் நாளில்
சுகம் பார் ஓம்.

என்ற இந்த வாசகத்தை அன்று கோடைக்கானல் பங்களாவில் இருந்த பாஷ்யத்தின் நண்பரிடம் அந்தச் சாது சொன்னராம்.

ஒருநாள் பார்த்தசாரதிக்கு சித்தி விநாயகர், காளியாகக் காட்சி தருகிருர். ஐந்து ஆண்டுகள் கழித்து, கோடைக்கானலிலிருந்து

'காளிக்கொம்பன்' என்ற பெயரில் ஒரு விநாயகர் வந்து சேருகிறார். விளக்கம் கூற முடியாத எத்தனையோ விந்தைகளில் இதுவும் ஒன்று.



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

இந்த ஆலயத்தினுள் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதி தோன்றியதற்கும் ஒரு சுவையான வரலாறு உண்டு.

ஒருநாள் விடியற்காலை நான்கு மணிக்கு வைஷ்ணவியின் சந்நிதியில் பார்த்தசாரதி தியானத்தில் அமர்ந்திருக்கிறார். அப்போது அவருக்கு உண்மை நிகழ்ச்சியோ, கனவுக் காட்சியோ என்று அறுதியிட்டுக் கூறமுடியாத ஒரு தோற்றம் தரிசனம் ஆகிறது.

மலையாளியைப் போன்ற ஒரு குட்டையான ஆசாமி அவரிடம் வந்து, ''சுவாமி, ஸ்ரீ ரமண மகரிஷியின் படத்திற்கு முன்னால் ஒரு நாகப் பாம்பு வந்து படம் எடுத்து ஆடுகிறது. கிட்டே போனால் மறைந்து விடுகிறது. இது இரண்டு மூன்று நாட்களாக நடைபெற்று வருகிறது. உங்களை வந்து பார்க்கச் சொன்னார்'' என்கிறார்.

''என்னை வந்து பார்க்கச் சொன்னது யார்?'' என்று கேட்கிறார் பார்த்தசாரதி.

''திருஞானம் உங்களிடம் சொல்லச் சொன்னார்'' என்கிறார் முன்பின் தெரியாத அந்த ஆசாமி.

அத்துடன் தோற்றம் மறைந்து விடுகிறது. அதைப் பற்றிக் காலையில் ஆச்ரமத்திலிருக்கும் ஒரு சாதுவிடம் சொல்லுகிறார் பார்த்தசாரதி. அப்போது அந்த சாது 'அருணாசல மகாத்மியம்' படித்துக் கொண்டிருக்கிறார். அந்தத் தோற்றத்தின் பொருள் அவருக்கும் புரியவில்லை.

பின்னர் பார்த்தசாரதி தமிழ்ப் பேரறிஞர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளையிடம் அதைப் பற்றிக் கேட்டார். 'திருஞானம்' என்ற பெயர் ஞானாசிரியரான தட்சிணாமூர்த்தியையே குறிக்க வேண்டும் என்று அவர் கூறினார். அந்த விளக்கத்திற்குப் பிறகும் தோற்றத்தின் முழுப் பொருளை அவரால் அறிய முடியவில்லை.

இது நடந்து சில நாட்கள் கழித்து, பார்த்தசாரதியின் மகன் பாஷ்யம், ஏதோ ஒரு விஷயமாகத் தந்தையைக் காண வந்தார். பேச்சினிடையே தம்மிடமிருந்த தட்சிணாமூர்த்தி சிலையைப் பற்றித்தந்தையிடம் குறிப்பிட்டார். சில வருடங்களுக்கு முன்பு பார்த்தசாரதி தன் மகனுக்குக் கொடுத்திருந்த சிலை அது. அதைப் பற்றி அவர் மறந்து கூடப் போய் விட்டார். தற்போது மகன் நினைவு படுத்தியதும், ''உனக்கு இது வேண்டாமென்றால், எனக்கே திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?'' என்று கேட்டார்.

மகனோ, ''அது பூஜைக்குரியதல்ல. காலில் ஒரு விரல் உடைந்து விட்டிருக்கிறது'' என்று கூறினார்.

''பரவாயில்லை, கொடு'' என்று அந்தச் சிலையைப் பெற்றுக் கொண்டார் பார்த்தசாரதி.

வைஷ்ணவி கோயிலில் தட்சிணாமூர்த்திக்கு ஒரு சந்நிதி அமைக்க வேண்டும் என்று கருதிய பார்த்தசாரதி, ஒரு சிற்பியை அழைத்து, மூளியாக இருக்கும் அந்த விரலைப் பழுது பார்த்துத் தரும்படிக் கொடுத்தார். இரண்டு நாட்களுக்கெல்லாம் ஆச்சரியம் கலந்த ஆனந்தத்துடன் சிலையோடு திரும்பி வந்தார் சிற்பி.

''சாமி! உடைந்த பாகத்தை நான் சரி செய்வதற்காக உளியால் லேசாகத் தட்டினேனுங்க. என்ன மாயமோ மந்திரமோ, அந்த விரல் தானாகவே வளர்ந்துட்ட மாதிரி ஒழுங்காயிடுச்சுங்க'' என்று கண் கலங்கக் கூறினார்.

எப்போதோ வாங்கிய தட்சிணாமூர்த்தி சிலை எப்படியோ அவரிடம் வந்து தெய்வாதீனமாக மூளியைப் போக்கிக் கொண்டு, 1959-ம் ஆண்டு சிவராத்திரியன்று வைஷ்ணவி கோயிலில் அமர்ந்து விட்டது.

இருண்ட தம் வாழ்வுக்கு அருணாசல ஜோதியாக ஒளி வழங்கி, ஆன்மிகப் பாதையில் நல்வழி காட்டி யருளிய பகவான் ரமணராகவே நினைத்து, அந்த தட்சிணாமூர்த்தியைத் தொழுது வருகிறார் சாது பார்த்தசாரதி.

கருவறையிலிருக்கும் சிறிய மீனாட்சி விக்ரகமும் பார்த்தசாரதிக்கு எதிர்பாராமல் கிடைத்ததுதான். இன்ஷ்யூரன்ஸ் துறையில் ஈடுபட்டிருந்த அவருடைய நண்பர் பழைய வெண்கல, பித்தளை சாமான்களைக் கல்கத்தாவுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். கலைப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வமிக்க பார்த்தசாரதி, அந்தச் சாமான்களில் ஏதாவது விக்ரகம் இருந்தால் தமக்குத் தரும்படி நண்பரிடம் கூறி யிருந்தார். அந்த நோக்கத்துடன் பழைய சாமான்களின் குவியலில் நண்பர் தேடிய போது கிடைத்ததுதான் அந்தச் சிறிய மீனாட்சி விக்ரகம். அந்த அழகிய விக்ரகத்தைத் தேவி என்றே பார்த்தசாரதி அழைப்பது வழக்கம். வைஷ்ணவி தேவி திருமுல்லை வாயிலில் கோயில் கொள்வதற்கு முன்பிருந்தே அந்த விக்ரகத்தை அவர் பூஜித்து வந்திருக்கிறார். தமது பண்ணைக்குப் போகும்போதெல்லாம் அதற்கு ஒரு மலரைச் சூடி விட்டு, ஊதுவத்தியை ஏற்றி வைப்பது வழக்கம். அது வைக்கப்பட்டிருந்த பிறையின் இருபுறமும் ஸ்ரீ ரமண பகவானின் படமும் ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகளின் படமும் மாட்டப் பட்டிருந்தன.

ஒருநாள் காலை அந்த விக்ரகத்தின் முன் பார்த்தசாரதி நின்றிருந்த போது, 'மீனாட்சி அஷ்டோத்திர'த்தைப் படி என்று அம்பாள் கூறுவது போல் அவருக்கு ஓர் ஒலி கேட்டது. அதுவரை சாதாரண தேவியாக இருந்தவள், அன்று முதல் மீனாட்சி தேவியானாள். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மீனாட்சி அஷ்டோத்திர அர்ச்சனையுடன் அவளுக்குப் பூஜை நடைபெற்று வருகிறது. பூஜைக்குப் பின்னர், சிறு பல்லக்கில் கோயிலைச் சுற்றிப் பவனி வருகிறாள்.

கருவறையில் இருக்கும் ஆறுமுகர் விக்ரகமும் மிகச் சிறியதே. ஆறுமுகர் மயில் மீது அமர்ந்திருக்க, வள்ளியும் தெய்வானையும்

இருபுறமும் நின்றிருக்கின்றனர். அந்த விக்ரகம் அங்கு வந்த அதே சமயத்தில் ஒரு நண்பர் பார்த்தசாரதியிடம், ஆறு சகஸ்ர நாமாவளிகள் அடங்கிய ஒரு சமஸ்கிருத புத்தகத்தைக் கொடுத்தார். ஒவ்வொரு திருமுகத்திற்கும் தனித்தனியாக ஒவ்வொரு சகஸ்ரநாமம். ஆடிக்கிருத்திகையன்று இந்த ஆலயத்தில் 'சண்முக சகஸ்ர நாம அர்ச்சனை' நடைபெற்று வருகிறது.



வியாச விநாயகர்

கருவறையை வலம் வரும்போது, வெளிப்புறச் சுவரின் தென்புறத்தில் முக்கால் அடி உயரமுள்ள சலவைக் கல்லாலான ஆஞ்சநேயரைத் தரிசிக்கிறோம். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்று கூறப்படுகிறது. கருவறை மண்டபச் சுவரின் வெளிப்புறத்தில் தெற்கு, மேற்கு, வடக்குப்புற மாடங்களில் மகேச்வரி, நாராயணி, பிராம்ஹி முதலியவர்களைத் தரிசித்துக் கொள்கிறோம்.

வைஷ்ணவி ஆலயத்தை நிறுவிய சாது பார்த்தசாரதிதான் தேவியின் அர்ச்சகராகவும் பணியாற்றி வருகிறார். சமீபகாலமாக, வேறு முக்கிய பணிகள் இருந்தாலோ, வெளியூருக்குச் செல்ல நேர்ந்தாலோ, தமது உற்ற நண்பரும், ரமண பக்தருமான சாது ப்ரஹ்மண்யத்திடம் அப்பொறுப்பை ஒப்படைக்கிறார். இவர்களிருவருக்கும் சங்கர் ராவ் சிரத்தையுடன் உதவி புரிந்து வருகிறார். இந்தக் கோயிலில் தரிசனத்திற்கு ஒரு டிக்கெட், அர்ச்சனைக்கு ஒரு டிக்கெட், அபிஷேகத்திற்கு ஒரு டிக்கெட் என்று 'வியாபாரச் சூழ்நிலை' இல்லாதது மனத்திற்கு நிம்மதியாக இருக்கிறது. தனிப்பட்டவர்களின் பெயரில் இங்கு அர்ச்சனை செய்வது கிடையாது. பூஜை வேளையில் எத்தனை தேங்காய்கள் வந்தாலும், அவற்றையெல்லாம் உடைத்து நைவேத்தியம் செய்துவிட்டுப் பிரசாதமாகக் கொடுத்து விடுகிறார்கள். அனுமதியின் பேரில், ஆண்களோ பெண்களோ யார் வேண்டுமானாலும் அர்ச்சனையில் கலந்து கொள்ளலாம். தினப்படி பூஜைக்குப் பிறகு பால், தீர்த்தம், புஷ்பம் முதலியவை பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிக்கப்படுகிறது. தேவிக்கு, லலிதா சகஸ்ரநாமம், லலிதா திரிசதி, லட்சுமி அஷ்டோத்திரம் முதலிய அர்ச்சனைகள் செய்யப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை, பௌர்ணமி தினங்களில் தேவியின் சந்தனக் காப்பையும், கிரீடம், கர்ணபத்ரம், ஒட்டியாணம், தங்கக் கவசம் முதலிய அலங்காரங்களைக் காணக் கண் கோடி வேண்டும். இதர பண்டிகை தினங்களிலும் விசேஷ அலங்காரங்கள் கண்ணைக் கவரும்படி அமைந்து இருக்கும். பெற்ற தாய் தன் ஒரே பெண்ணுக்கு அழகு பார்த்துப் பார்த்துப் பூரிப்புடன் அலங்காரம் செய்து உவகை அடைவது போல், சாது பார்த்தசாரதி வைஷ்ணவி தேவிக்குச் சிறகடித்துப் பறக்கும் தன் கற்பனைக்கேற்ப விதவிதமான அலங்காரங்கள் செய்து பார்த்துப் பூரிப்படைகிறார். பராசக்தியின் பேரருளில் ஒன்றிப் போய், வெளி உலகையே மறந்து, பக்தி சிரத்தையுடன் அர்ச்சனை செய்கிறார்.

கற்பூரார்த்தி காட்டும்போது, ஒவ்வொரு தெய்வத்தையும் அங்கம் அங்கமாக அவர் கூர்ந்து கவனித்து, தரிசனத்திற்கு வந்திருப்பவர்களுக்கும் ஒளி காட்டி, நெஞ்சத்தை ஈர்த்து, உள்ளத்தை உயர்த்தி, புண்ணியத்தைக் கூட்டி வைக்கும் பாங்கு, சொல்லில் வடிக்க முடியாத அற்புத அனுபவமாகும்.


பெண்ணுக நாம் உருவகப்படுத்திக் கொண்ட போதிலும் ஆணுக்கும், பெண்ணுக்கும் அப்பாற்பட்டவள் அன்ருே பராசக்தி! அந்தத் தத்துவத்தை விளக்கிக் காட்டுவதே போல், வைஷ்ணவி தேவி ஆண் அலங்காரத்திலும் சரி, பெண் அலங்காரத்திலும் சரி கொள்ளை எழில் கொழிக்கும் சௌந்தர்யவல்லியாகத் திகழ்கிருள்.

ஆண்டாளாகவும், வள்ளியாகவும், சரஸ்வதியாகவும், அன்னபூரணியாகவும், மகா காளியாகவும், யோகிச்வரியாகவும், துர்க்கையாகவும், கஜலட்சுமியாகவும், கருட வாகினியாகவும், ராஜராஜேச்வரியாகவும் காட்சி தரும் அதே வைஷ்ணவி தேவி, சிவபெருமானுகவும், ராமனுகவும், கிருஷ்ணனுகவும், வேங்கடாசலபதியாகவும் தோற்றம் அளிக்கிருள். எந்தத் தோற்றமானுலும் அங்கு சூழும் தெய்விகப் பேரழகில் நாம் கலந்து, கரைந்து விடுகிருேம்.

நவராத்திரி திருவிழாவின் போது வைஷ்ணவி ஆலயத்தில் பெருங் கூட்டம் கூடுகிறது. அம்பிகைக்கு ஒவ்வொரு நாளும் ஓர் அலங்காரம். ஒன்றை ஒன்று மிஞ்சும்படி, அழகு கொஞ்சி விளையாடும். அத் திருச் சந்நிதியை விட்டு அகலவே மனமின்றிச் சொக்கிப் போய், தன்னை மறந்து அப்படியே நின்றிருக்கும் தேவியின் பக்தர்களைத் தரிசிப்பதே பெரும் புண்ணியம் என்று சொல்ல வேண்டும்.

பதினுறு ஆண்டுகளாக எந்தனையோ பேர் வைஷ்ணவி தேவி கோயிலுக்கு வந்து தரிசித்து விட்டுப் போயிருக்கிருர்கள். ஆனுல் ஒருவர் வந்து, அந்த ஆச்ரமத்தில் ஓர் இரவு தங்கி, தேவியின் அருகில் சென்று அவள் பாதத்தில் ஒரு மலரை அன்புடன் வைத்து விட்டுப் போன நிகழ்ச்சியைச் சாது பார்த்தசாரதி அடிக்கடி நினைவு கூர்ந்து பெருமையும் பூரிப்பும் அடைகிருர்.

ஆகம சாத்திரங்களுக்கு உட்படாமலும், அதிகமான ஆசார நியமங்களுக்குக் கட்டுப்படாமலும் ஆராதனை நடைபெற்று வரும் இக் கோயிலுக்குள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் வருவாரா என சந்தேகத்துடன் ஏங்கிக் கொண்டிருந்த பார்த்தசாரதியின் உள்ளக்கிடக்கையை அறிந்தோ என்னவோ, ஒருநாள் ஜகத்குரு, தம் தனிப்பெருங் கருணையால் வைஷ்ணவி கோயிலுக்குள் வந்தார்கள். அம்பிகையின் அருகில் நின்றபடியே அன்பர்களுக்கு திவ்ய தரிசனம் தந்தார்கள். உண்மையான பக்தியால் உயர்நிலை அடைந்தவர்களின் கதைகளைக் கூறினுர்கள். தூய்மையான பக்தியைத் தவிர வேறொன்றுமே அறியாத சாது பார்த்தசாரதி, ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் தம்மை ஆட் கொண்டு விட்டதை உணர்ந்து, பெருங் கருணையை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்து போனுர். அதன் அடையாளமாக ஒரு சொட்டுக் கண்ணீர் அவர் கன்னத்தில் உருண்டு ஓடியது.




தேவியும் தாசரும்

ஸ்ரீ வைஷ்ணவி கோயிலில் எந்தெந்த நாட்களைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று சிலர் ஒன்று கூடி ஆலோசித்த போது, ஸ்ரீ ஆண்டாளின் பிறந்த நட்சத்திரமான ஆடிப் பூரத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

சில நாட்கள் கழித்து சாது பார்த்தசாரதியின் கனவில் ஸ்ரீ ஆதி சங்கரர் தோன்றி, ''ஆலயத்தில் ஆடிப்பூரத்தை மட்டும் கொண்டாடினால் போதாது. எல்லா மாதங்களிலும் பூர நட்சத்திரத்தைக் கொண்டாட வேண்டும்'' என்று கூறினார். இதன் கருத்து பார்த்தசாரதிக்குப் புரிய வில்லை.

ஸ்ரீ ஆதிசங்கரரின் மறு அவதாரமாகக் கருதப்படும் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத் குருவிடமே இதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று முடிவு செய்தார் பார்த்தசாரதி. ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகளை அடிக்கடி தரிசிக்கச் செல்லும் தமது டாக்டர் நண்பரிடம் பூர நட்சத்திரத்தின் முக்யத்துவத்தைப் பற்றி சுவாமிகளிடம் கேட்டறிந்து



வரும்படி கூறியிருந்தார். ஆனால், தாம் கண்ட கனவைப் பற்றி அவரிடம் கூறவே யில்லை.

பூர நட்சத்திரத்தின் விசேஷத்தைப் பற்றி அந்த நண்பர் கேட்ட போது. சுவாமிகள் வேறு ஒரு சமயம் கூறுவதாகச் சொல்லி அனுப்பி விட்டார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு பார்த்தசாரதி, சுவாமிகளைத் தரிசிக்க காஞ்சிக்குச் சென்றார். வந்தனம் செய்து விட்டு எழுந்து நின்றார். ஒன்றும் பேசவில்லை. சுவாமிகளிடம் எதுவுமே கேட்கவில்லை. ஜகத்குருவே திருவாய் மலர்ந்தருளினார்.

''ஆடிப் பூரத்தன்றுதான் ஸ்ரீ ஆண்டாள் திருவவதாரம் செய்தாள். பராசக்தியின் அவதாரத்தை எல்லோரும் குதூகலத்துடன் கொண்டாடினார்கள். அந்தக் காலத்தில் சிவ-வைஷ்ணவ வேற்றுமைகள் இல்லாததால் எல்லாக் கோயில்களிலும் ஆண்டாளின் பிறந்த நட்சத்திரம் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. அந்தப் பழக்கம் இன்றுவரை இருந்து வருகிறது'' என்று சுவாமிகள் கூறினார். மூன்று மாதங்களுக்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வியை நினைவில் வைத்துக் கொண்டு தம்மைப் பார்த்ததும் சுவாமிகள் அதற்கு விடை பகர்ந்த அதிசயத்தை எண்ணி, எண்ணி ஆச்சரியமும் பெருமிதமும் அடைந்தார் பார்த்தசாரதி.

ஆடிப்பூரத்தின் விசேஷத்தை முழுமையாக உணர்ந்து கொண்டாரே தவிர, இதர மாதங்களில் பூர நட்சத்திரத்திற்கு இருக்கும் விசேஷம் என்ன என்பது அவருக்கு அப்போதும் புரியாமலே இருந்தது.

அந்த எண்ணத்துடனேயே காமாட்சியம்மன் கோயிலுக்குப் போனார். நேரமாகி விட்டது. இரவு பூஜை முடிந்து கோயிலை மூடப்போகும் நேரம். சந்நிதிக்கு விரைந்தார். அர்ச்சகர் கற்பூரார்த்தி காட்டிக் கொண்டே, ''அம்பாள் ஐப்பசி பூரத்தன்றுதான் தோன்றினாள். இந்தக் கோயிலில் அந்த நாள் ரொம்ப விசேஷம்'' என்றார். பார்த்தசாரதிக்கு ஆச்சரியம் பன்மடங்காயிற்று. தம் மனத்திலிருந்த சந்தேகத்தை அறிந்த காமாட்சி தேவி அர்ச்சகரின் மூலம் தம்மிடம் பேசியதாகவே அவர் கருதினார்.

அந்த ஆண்டு ஐப்பசி பூரத்தன்று காமாட்சியைத் தரிசிக்க வேண்டும் என்று அவருள் ஓர் எண்ணம் எழுந்தது. சென்னைக்கு வந்ததும் காலண்டரைப் புரட்டிப் பார்த்து அக்டோபர் 20-ந் தேதி ஐப்பசி பூரம் என்று தீர்மானித்து, நண்பர்களுடன் காஞ்சீபுரம் செல்லத் திட்டமிட்டார். முதல் நாளே அங்கு சென்று, மற்ற கோயில்களைத் தரிசனம் செய்து விட்டு, மறுநாள் காமாட்சி கோயிலுக்குச் செல்வதென்றும் ஏற்பாடாகி யிருந்தது. அழைத்துப் போக அன்று கார் கொண்டு வருவதாகச் சொல்லி. யிருந்த அவருடைய நண்பர் நேரம் கழித்து வந்ததால் ஒரு மணி கழித்தே புறப்பட்டார்கள்.

காரில் செல்லும் போது, காமாட்சி கோயிலில் மறுநாள் நடைபெறப் போவதாகத் தாம் நினைத்திருந்த ஐப்பசி பூர பூஜை, அன்றைக்கே நடைபெறப் போகிறது என்று பார்த்தசாரதிக்கு மனத்தில் திடீரென்று ஓர்

எண்ணம் தோன்றியது, காரை வேகமாக ஓட்டும்படியும், நேரே காமாட்சி கோயிலுக்குச் செல்லும்படியும் நண்பரிடம் கூறினர்.

அவர்கள் காமாட்சி கோயிலுக்குள் அவசர அவசரமாக நுழைந்தார்கள். அர்ச்சனைக்குத் தேங்காய், பழம் கூட வாங்கிச் செல்லவில்லை. கையில் கொண்டு வந்த கங்கை நீருடன் சந்நிதிக்கு விரைந்தார்கள். என்ன ஆச்சரியம்! அவர்கள் வருவதற்குக் காத்திருந்தது போல் அர்ச்சகர் பூர விழா பூஜையைத் தொடங்கினர்.

சற்றும் எதிர்பாராத விதமாக, காமாட்சி தேவி அன்று தன் சந்நிதிக்கு அழைத்து அருள் வழங்கியதை எண்ணி சாது பார்த்தசாரதி நெஞ்சுருகினர்.

அன்னையின் அருளாசியினல் கைமேல் பலன் கிடைத்தது. ஒரு வாரத்திற்கெல்லாம் தணிகேசனின் அரும்பெரும் பக்தரான வ. சு. செங்கல்வ ராயப் பிள்ளை வைஷ்ணவி ஆலயத்திற்கு வந்தார். அவரிடம் பார்த்த சாரதி ஸ்ரீ ஆதிசங்கரர் தமது கனவில் வந்து கூறியதையும், காஞ்சி சுவாமிகள் அளித்த விளக்கத்தையும், காமாட்சி தேவி காட்டிய கருணையையும் கூறினர். அதைக் கேட்ட பிள்ளையவர்கள், அருணகிரிநாதரின் கந்தரந்தாதியிலிருந்து 'திரிபுரத்தப்புப் புவிதரத் தோன்றி...' என்ற பாடலைக் கூறி, அதில் பார்வதி தேவியின் திருநட்சத்திரம் 'பூரம்' என்று இருப்பதைச் சுட்டிக் காட்டினர்.

பதினன்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளை, நேற்று நடந்தவை போல் கூறினர் சாது பார்த்தசாரதி. அவர் நெஞ்சத்தில் அவை அத்தனை பசுமையாக நிலைத்திருக்கின்றன. ஸ்ரீ ஆதி சங்கரர் பணித்தபடியே அம்பிகையின் திருநட்சத்திரமான 'பூரம்' திருநாள் ஒவ்வொரு மாதமும் ஸ்ரீ வைஷ்ணவி கோயிலில் முக்கியமான தினமாகக் கொண்டாடப்பட்டு வருவதாகக் கூறினர் அவர்.

சாது பார்த்தசாரதியுடன் சிறிது நேரம் பழகிப் பேச வாய்ப்புக் கிடைப்பவர்கள் அவர் உண்மையிலேயே ஒரு சாதுதான் என்பதை ஒப்புக் கொள்வார்கள். 'எல்லாம் தேவியின் லீலை. அவளுடைய எல்லையற்ற அருளின்றி ஓர் அணுவும் அசைவதில்லை. நாமெல்லாம் அவளுடைய கைப் பாவைகள்' என்று பரிபூரணமாக நம்பும் அவர், வைஷ்ணவியின் பெருமைகளைத்தான் எப்போதும் பேசிக்கொண்டிருக்கிறர். சொந்த அனுபவத்தில் பிறந்த நம்பிக்கைதான் பிறருக்கு நல்வழி காட்டும் ஒளியாகத் திகழ முடியும்.

வைஷ்ணவி ஆலயத்தைப் பொறுத்தவரையில், 'சாது' என்ருல் சாது பார்த்தசாரதியைத்தான் குறிக்கும். அவருடைய இளமைப் பருவ நண்பர்கள் எஸ். பார்த்தசாரதியை சுருக்கி அவரை 'எஸ். பி.' என்று குறிப்பிடுகிருர்கள். தேவி அன்பர்களில் பெரும்பாலோர் அன்புடன் 'பப்பாஜி' என்று அழைக்கிருர்கள். அவருடைய ஒரே சகோதரி எஸ். அம்புஜம்மாள், 'பாப்பா' என்று பாசத்தோடு குறிப்பிடுகிருர். ஆச்ரமத்திலுள்ளவர்களோ, அவரைப் பற்றிப் பேசும்போது பொதுவாக 'ஐயா' என்கிருர்கள். சுவாமி அணுவாநந்தா என்ற பெயரில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதுகிருர்.

எஸ். பார்த்தசாரதி, காவியுடுத்திய சாது பார்த்தசாரதி ஆனதைப் பற்றியும் அவரிடம் கேட்டறிந்தேன்.

''நான் முறையாக யாரிடமும் சந்நியாசம் பெறவில்லை. எல்லாம் தேவி கொடுத்ததுதான். குடும்ப வாழ்க்கையை விட்டு, தேவியின் தொண்டில் ஈடுபட்ட பிறகும் நான் வெள்ளாடைதான் உடுத்தியிருந்தேன். ஒருநாள் என் நண்பர் கொடுத்த பழுப்புக் கலர் ஆந்திரக் கதர் வேட்டியை உடுத்தியிருந்தேன். அப்போது என்னைப் பார்க்க வந்திருந்த என் பழைய நண்பர்கள், நான் சந்நியாசம் மேற்கொண்டு விட்டேனே என்று எண்ணி, சற்று ஒதுங்கி உட்கார்ந்து கொண்டார்கள். என்னுடன் பேசும்போது, அதிகமாக அரட்டை அடிக்காமல், அநாவசிய வம்புகள் பேசாமல், அளவோடு ஜாக்கிரதையாகப் பேசினார்கள். காவித் துணி எனக்குத் தேவையான தனிமையையும் தியானத்திற் கேற்ற மனநிலையையும் தேடித் தரும் என்று எனக்குத் தோன்றியது. அன்று முதல் காவியணியத் தொடங்கினேன்'' என்று அவருக்கே உரிய புன்முறுவலுடன் கூறினார் சாது பார்த்தசாரதி.

சாது பார்த்தசாரதியிடம் நிறைய அற்புத சக்திகள் இருப்பதாக நெருங்கிப் பழகியவர்கள் கூறுகிறார்கள். அவருடன் தேவி பேசுவதாக அவர்கள் நம்புகிறார்கள். தியானத்தில் அமர்ந்து அன்னையிடம் உத்தரவு கேட்டு அவர் சொல்லுவதெல்லாம் அப்படியே பலிப்பதாகவும் கூறுகிறார் கள். இவற்றைப் பற்றி யெல்லாம் அவரிடம் கேட்டால் நேரான பதில் கிடைக்காது. சிரித்து மழுப்பி விடுவார். ''உண்மையான பக்தியுடன் தேவியை அணுகினால் எல்லா நன்மைகளும் கிடைக்கும்'' என்று மட்டுமே கூறுவார்.


ஸ்ரீ வைஷ்ணவி தேவியின் மகிமையைப் பற்றித் தமது சொந்த அனுபவத்தைத் தவிர, பிறருக்கு ஏற்பட்ட மயிர்க் கூச்செறியும் அனுபவங் களையும் கூறுகிறார் பார்த்தசாரதி. அவற்றில் சிலவற்றை 'வைஷ்ணவி ஆலயம்' என்ற ஆங்கிலப் புத்தகத்திலும் வெளியிட்டிருக்கிறார்.

ஒரு பெண்மணி. அவரைக் கணவனும் மாமியாரும் மிகவும் துன்புறுத்தி வந்தார்கள். அதனாலேயே அந்த அம்மாளுக்கு உடல் நோய் கண்டது. மருத்துவ மனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றார்.

உடல் நலம் அடைந்ததும், கணவன் வீட்டுக்குப் போகாமல், அம்பத் தூரில் உள்ள தன் உறவினர் வீட்டுக்கு வந்தார். கணவனும் மாமியாரும் மனம் திருந்தி வந்து அழைத்தாலன்றி பெண்ணை அனுப்புவதில்லை என்று பெரியவர்கள் முடிவு செய்திருந்தனர்.

அந்த அம்மாள் வைஷ்ணவி தேவியைத் தஞ்சமடைந்தார். தினமும் ஆலயத்திற்கு வந்து அம்பிகையை வலம் வருவார். தேவியின் சந்நிதியில் அமர்ந்து தன் நிலையை எண்ணிக் கண்ணீர் விட்டு அழுவார்.

ஒரு நாள் தன் துயரத்தை சாது பார்த்தசாரதியிடம் கூறினார் அந்த அம்மாள். ஆறுதல் மொழி கூறி, அவரிடம் தேவியின் டாலரும், பிரசாத மும் கொடுத்து அனுப்பினார். நம்பிக்கையுடன் அவர் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.



ஆச்ரமத்திலுள்ள நூல் நிலையம்

அப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அந்தப் பெண்மணியின் கணவர், சாது பார்த்தசாரதியிடம் வந்து, தன் நடத்தைக்கு வருந்துவதாகவும், மனம் திருந்தி விட்டதாகவும் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் கூறினர். அவரது வேண்டுகோளின் பேரில், அந்த அம்மாள் அழைத்து வரப் பட்டார். கணவனும் மனைவியும், தனிமையில் சிறிது நேரம் பேசிய பிறகு, தேவிக்கு நமஸ்காரம் செய்து விட்டு, வீடு திரும்பினர். அதற்குப் பின்னர், இருவரும் தம்பதியாகவே ஆலயத்திற்கு வந்து தேவியைத் தரிசனம் செய்யத் தொடங்கினர்.

இப்படி எத்தனையோ அதிசய நிகழ்ச்சிகள்!

வட இந்தியாவில் வைஷ்ணவிக்கு நிறைய பக்தர்கள் இருப்பதாகக் கூறினர் பார்த்தசாரதி. ஆலயத்திற்கு வராமலே, தேவியைத் தரிசனம் செய்யாமலேயே அவர்கள் வைஷ்ணவியின் பரம பக்தர்களாக மாறியிருக்கிருர்கள். தேவியின் படத்தை வரவழைத்துப் பூஜை செய்து, அருள் பெற்று வருகிருர்கள். முன்பின் அறிமுகம் ஆகாதவர்களிடமிருந்து பிரசாதம் கேட்டுக் கடிதங்கள் வருவதாகவும் பார்த்தசாரதி கூறினர். பின்னர் எங்களை நூல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டினர்.

இறந்து போனதாக மருத்துவர்களால் அறிவிக்கப்பட்ட ஒருவரின் நெற்றியில் வைஷ்ணவியின் விபூதி, குங்குமத்தை இட்டார்களாம். சிறிது நேரத்தில் 'இறந்தவர்' பிழைத்து எழுந்து விட்டாராம்! அந்தக் கடிதத்தில் இந்த அற்புதத்தை உணர்ச்சிப் பெருக்குடன் விவரித்திருந்தார் சாது பார்த்தசாரதியின் நண்பர்.

அரக்கர்களின் கொடுமையைத் தாங்க முடியாமல் துன்புற்ற தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஸ்ரீமத் நாராயணன், ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியாக திருவவதாரம் செய்து, பூதேவியான சீதையை மணம் புரிந்து, தந்தையின் வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் மகுடத்தைத் துறந்து, மரவுரி தரித்து வனவாசம் போகிருர். அங்கு இலங்கேச்வரன் சூழ்ச்சி செய்து சீதையைக் கவர்ந்து செல்கிருன். மனைவியை இழந்த ராமன், துயரமே உருவாக அவளைத் தேடி யலைகிருன்.

வைகுண்டத்தில் தனிமையில் இருந்த ஸ்ரீதேவி, கணவன் தென்திசையில் அலைந்து கொண்டிருப்பதை அறிந்து தென்னகத்திற்கு வந்து தவமிருக்கிறாள். சீதையைத் தேடிக் கொண்டு அவ்வழியே வந்த ராமனைக் கண்டு ஸ்ரீதேவி தன்னையும் உடன் அழைத்துச் செல்லும்படி கேட்கிறாள்.

ஸ்ரீ வைகுண்டபதி மறுத்து விடுகிறார். ''ராமாவதாரத்தில் நான் ஏக பத்தினி விரதம் ஏற்றிருக்கிறேன்......எனவே, உன்னை உடன் அழைத்துச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றேன். நீ வடக்கே செல். அங்கு அட்டூழியங்கள் புரிந்து கொண்டிருக்கும் ஓர் அரக்கனின் வதம் உன்னால் நடைபெற வேண்டியிருக்கிறது. அடுத்த அவதாரத்தில் நான் உன்னை வந்து அடைகிறேன். கலியுகத்தில் உன்னுடைய மகிமை பாரெல்லாம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கப் போகிறது'' என்று கூறிவிட்டு ராமன் சென்று விடுகிறார்.

பின்னர், லட்சுமி தேவி காஷ்மீர் சென்று, அங்குள்ள திரிகூட மலையை அடுத்த 'ஆத்குமாரி' என்ற சிற்றூரில் ஒரு சிற்றரசனுக்கு 'வைஷ்ணவி தேவி' என்ற பெயருடன் முதல் பெண்ணாகத் தோன்றினாள். அழகுத் தெய்வமாக வளர்ந்தாள். அவளது திருமேனியின் பேரழிலைக் கண்டு பைரவன் என்ற அரக்கன் அவளை அடைய விருப்பம் கொண்டான்.

பைரவன் இரண்யகசிபுக்கு ஈடான ஒரு பொல்லாத அரக்கன். மக்கள் சாஸ்திரங்களைப் படிப்பதற்குத் தடையாக இருந்ததால் சரஸ்வதி தேவியையும், மக்களின் சொத்துக்களையும் கொள்ளையடித்ததால் லட்சுமியையும், பெண்களைப் பலாத்காரம் செய்ததால் பார்வதி தேவியையும் ஏற்கெனவே அவன் பகைத்துக் கொண்டிருந்தான்.

வைஷ்ணவி தேவி தன் விருப்பத்திற்கு இணங்காமல் போகவே அவளுக்குப் பலவிதத்திலும் தொல்லை கொடுத்தான் பைரவன். அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காகத் திரிகூட மலையிலுள்ள ஒரு குகையில் போய் அமர்ந்து விட்டாள் தேவி. அங்கும் அவளைத் துரத்திச் சென்று துன்புறுத்தவே, கோபாவேசம் கொண்டு தேவி போர் புரியத் தொடங்கினாள். ஏற்கெனவே அவன் மீது ஆத்திரம் கொண்டிருந்த சரஸ்வதியும், பார்வதியும் துணைக்கு வந்தார்கள். அவர்கள் உதவியுடன் அரக்கனை ஒழித்துக் கட்டினாள் வைஷ்ணவி தேவி. அந்த அரக்கனின் உடல் தேவியின் ஆலயத்திற்கு முன்புறம் ஒரு கற்பாறையாக மாறி விட்டது.

சாது பார்த்தசாரதி



துண்டிக்கப்பட்ட பைரவனின் தலை உருண்டு விழுந்த இடம் தற்போது 'பைரவ காடி' என்று அழைக்கப்படுகிறது. கருணையே உருவான வைஷ்ணவி தேவி, அரக்கனின் தலையிருந்த இடத்திற்கு ஓடிச் சென்று, ''உனக்கு ஏதாவது ஆசைகள் இருந்தால் கூறு. நான் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்று கூறினாள். அதைக் கேட்ட அரக்கனோ ஏதோ முணு முணுத்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. அப்போது தேவி அவனைப்

பார்த்து, ''நீ திருந்தி விட்டாய். உன் மனம் தூய்மை பெற்று விட்டது. இனி இங்கு வரும் பக்தர்களால் நீ பூஜிக்கப் படுவாய். என்னைத் தரிசித்து விட்டுச் செல்லும் பக்தர்கள் உன்னையும் தரிசித்தால் அவர்களுடைய ஆசைகள் எல்லாம் நிறைவேறும்'' என்று வரம் அளித்தாள். எத்தனை கொடுமைகள் புரிந்திருந்தாலும் தேவியின் அருளால் இறுதிக் காலத்தில் நல்லவனாகி உயிர்நீத்த பைரவன் நற்கதி அடைந்தான்.

வைஷ்ணவி தேவியின் திரு அவதாரத்தைப் பற்றி வேறு புராண வரலாறுகளும் உண்டு.

ஸ்ரீராமாவதாரத்துக்கு முன் அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். அப்போது மகா விஷ்ணு அவர்களைப் பார்த்து, ''நாம் எடுக்கப் போகும் ராமாவதாரத் தால் தண்டகாரண்ய அரக்கர்களும் இலங்கேச்வரனும் மட்டுமே அழியப் போகிறார்கள். இதர அரக்கர்களையும் அழித்து உலக மக்களை அமைதியாக வாழ வைக்கும் சக்தி தனிப்பட்ட விஷ்ணு தத்துவத்திற்கோ, சிவ தத்து வத்திற்கோ கிடையாது. விஷ்ணு மாயையுடன் கூடிய வைஷ்ணவி தேவி தோன்றி உங்களுக்கு நல்வாழ்வு அளிப்பாள். அந் நந்நாள் வரும் வரை அந்த அரக்கர்களிடமிருந்து தலைமறைவாய் இருந்து வாருங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். சகல ஜீவராசிகளையும் காப்பாற்றும் பரந்தாமனே தம் சக்தியைக் குறைத்துக் கூறுவதைக் கேட்டுத் தேவர்கள் வியப்புற்றனர்.

பூவுலகில் அசுரர்களின் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. அவற்றை அடக்கி, நல்லவர்களை அமைதியாக வாழ வைப் பதற்குத் தனிப்பட்ட புருஷ தத்துவத்தாலோ, ஸ்திரீ தத்துவத்தாலோ, தேவசக்தியாலோ முடியாது என்று உணர்ந்த பிரும்மா, ''தபோ பலத்தில் சிறந்து விளங்கும் பார்வதி தேவி, துர்க்கையம்சமாகத் தோன்றட்டும். நாமெல்லாரும் நம் ஆயுதங்களை ஜகதம்பிகைக்குக் கொடுத்து உதவுவோம். வைஷ்ணவி என்னும் திருநாமம் தாங்கி, அன்னை பூவுலகில் தீயவர்களை அழித்து, நன்மக்களைக் காக்கும் தொழிலைப் புரிந்து கொண்டிருக்கட்டும்'' என்று மகாதேவனிடம் முறையிட்டுக் கொண் டார். பரமனும் அப்படியே ஆகட்டும் என்று மொழிந்தார்.

மங்கள வாத்தியம் முழங்கிற்று. தேவாதி தேவர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். உலகில் மகா சக்தியான ஸ்ரீதேவி வழிபாடு பிறந்தது. அன்னையின் அருளாட்சி தொடங்கியது.

ராமாவதாரத்திற்கு முன்பே தோன்றி விட்ட வைஷ்ணவி தேவியை இராவணன் வழிபட்டான். அவனுடைய தவத்திற்கு இரங்கி, தேவியும் அவன் முன் தோன்றினாள். ஆனால், இலங்கேச்வரன் அன்னையின் கருணையை வேண்டிப் பெறாமல், அவனுடைய ஒவ்வொரு செய்கையும் தனக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும் என்ற வரத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

இராவணன் மீது படையெடுத்துச் செல்லும் முன், கடலின் இக் கரையில் நின்ற ராமன், ஈச்வரனைக் குறித்துத் தவமிருந்தான். மகாதேவன்

தோன்றி இராவணனை அழிப்பதற்கும், சீதையை மீட்பதற்கும் பாலா துர்க்கா உருவில் எழுந்தருளியிருக்கும் வைஷ்ணவி தேவியை ஆராதித்து அவள் அருளைப் பெறும்படி ராமனிடம் கூறி விட்டு மறைந்து விட்டார்.

பரமேச்வரனின் கட்டளைப்படி ஸ்ரீ ராமபிரான், தேவியை ஆராதிப்ப தற்காக நூற்றியெட்டு தாமரை மலர்களைச் சேகரித்தார். அர்ச்சனை செய்யும் போது ஒரு மலர் குறைந்ததைக் கண்டு, தன் கண் மலரை எடுத்து அர்ச்சிக்க ஆயத்தமானார். அப்போது, சாந்தமூர்த்தியான தேவி அவர் முன் தோன்றினாள்.

தேவிக்கு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டது. ராமன், இராவணன் இருவருமே அவளது அன்புக்குப் பாத்திரமானவர்கள். இராவணனைக் கடுமையாகத் தண்டிக்க அவள் மனம் இடந்தரவில்லை. அதற்கு ஒரு வழி செய்தாள். ராமனைப் பார்த்து, ''நீ ஒரு யாகத்திற்கு ஏற்பாடு செய். அதை விதிப்படி முடித்துத் தர வேண்டுமென்று ராவணனுக்கு ஓர் அழைப் பிதழ் அனுப்பி வை. அவன் யாகத்திற்கு வராவிட்டால் அழிந்து விடு வான். உன் அழைப்பை ஏற்று வந்தால், உன்னை ஆசீர்வதித்து விட்டுச் சென்று விடுவான். அதனால் அவனுக்கு நிம்மதியான மரணம் ஏற்படும். நீயும் சீதையை அழைத்துக் கொண்டு வந்து விடலாம்'' என்று கூறினாள்.

அவ்வாறே ராமன் ஒரு யாகம் செய்ததாகவும், ராவணன் வந்து ராமனை ஆசீர்வாதம் செய்துவிட்டுப் போனதாகவும் ஒரு ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எல்லா தேவதாம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்று, மும்மூர்த்தி களுக்கும் தாயாகி, யோகீச்வரியாய், பாலயோகினியாய், உலகை ரட்சித்துக் கொண்டிருக்கும் வைஷ்ணவி தேவி, காஷ்மீரத்தின் வனங்களில் சிறு பெண்ணாகப் பாமர மக்களுடன் பழகிக் கொண்டிருப்ப தாகக் கூறப்படுகிறது. ஸ்ரீ வைஷ்ணவியின் தத்துவத்தை முழுமையாக அறியாத மக்கள் அவளை ஒரு வன தேவதையாகக் கருதி வழிபடுகிறார்கள்.

முகம்மதியர்களின் ஆட்சிக்கு முன் காஷ்மீரத்தை சந்திர தேவன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனும் அவனது மனைவி சத்திரபாவதி யும் ஒரு நாள் ஹம்சதேவர் என்ற மகாத்மாவின் உபந்நியாசத்தைக் கேட்டு அவருக்கு அடிமையானார்கள். பின்னர், அவருடைய அருளால் அந்த அரச தம்பதிக்கு 'சந்திரபாகா' என்ற பெண் குழந்தை பிறந்தது.

எழில் மங்கையாய் வளர்ந்த அரசகுமாரி, சாந்தகுமார் என்ற அரச குமாரனை மணம் புரிந்து கொண்டாள். இருவரும் குதூகலமாக இல்லறம் நடத்தி வந்தனர்.

ஒரு நாள் அரண்மனைக்கு மகாத்மா ஹம்சதேவர் வருகை தந்தார். அரசகுமாரி மகானை நமஸ்கரித்து எழுந்ததும், அவர் முகம் வாட்டமுற்றது. காரணத்தைக் கேட்டதும், அந்தப் பெண் இன்னும் ஒரு வாரத்தில் தனது மாங்கல்யத்தை இழந்து, அமங்கல வாழ்வை ஏற்கப் போகிறாள் என்று அறிந்த அரசனும் அரசியும் துயரக் கடலில் ஆழ்ந்தார்கள்.

சந்திரபாகா திடமான பக்தி கொண்டவள். தன் விதியை எதிர்த்து போராடத் துணிவு கொண்டாள். மகாத்மாவின் பாதங்களைப் பற்றிக்

கொண்டு, ''நீங்கள்தான் எனக்கு கதி. என் கணவனின் உயிரை மீட்க எனக்கு ஒரு வழி கூற வேண்டும்'' என்று மன்றாடினாள்.

மகான் ஹம்சதேவர் நெஞ்சம் நெகிழ்ந்தார். கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். பின்னர், கண் கலங்கி நிற்கும் சந்திரபாகாவின் காதுகளில் ரகசியமாக சில வார்த்தைகள் கூறினார். அதைக் கேட்ட அவள் முகம் மலர்ந்தது.

காலன் தன் கடமையைச் செய்தான். ஏழாவது நாள் சாந்தகுமாரனின் உயிரைக் கவர்ந்து சென்றான். சந்திரபாகா கதறி யழவில்லை. மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள். கணவனின் உடலைத் தூக்கிக் கொண்டு அருகிலுள்ள பூங்காவிற்குச் சென்றாள். நீராடிவிட்டு, தூய உடையுடுத்தி, தியானத்தில் ஆழ்ந்தாள். ஏழு பகல், ஏழு ராத்திரி இடைவிடாத புனித விரதம் மேற்கொண்டாள். எட்டாவது நாள் அவள் தவம் பலித்தது. ஒரு சிறு பெண் தன்னைத் தொடுவது போல் உணர்ந்து, கண்களைத் திறந்து பார்த்தாள். கணவனின் உடல் அசைந்தது. அவன் கண்களைத் திறந்து மனைவியைப் பார்த்தான். அவளுடைய ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

சந்திரபாகா நோற்ற நோன்பே, ஒவ்வோர் ஆண்டும் வைஷ்ணவி தேவியின் நவராத்திரி விழாவாகக் கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது.

காஷ்மீரத்தில் ஸ்ரீ வைஷ்ணவி தேவி சிறு பெண்ணாக நடமாடிக் கொண்டிருக்கிறாள் என்பதற்கு மற்றொரு நிகழ்ச்சியும் உண்டு.

ஜம்முவுக்கு அடுத்த திரிகூட மலையில் வைஷ்ணவி கோயில் இருக்கும் குகைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஸ்ரீதரன் என்னும் பக்தர் வசித்து வந்தார். அவர் சக்தி உபாசகர். வைஷ்ணவி தேவியை உள்ளத் தூய்மையுடன் ஆராதித்து வந்தார். நவராத்திரியின் போது தினமும் சிறு பெண்குழந்தைகளை அழைத்து, அவர்களைத் தேவியாகவே நினைத்து, உணவூட்டி, வழிபட்டு, கொஞ்சிக் குலவி வீட்டுக்கு அனுப்புவது வழக்கம்.

ஓர் ஆண்டு நவராத்திரி பூஜை முடிந்து எல்லா குழந்தைகளும் சென்ற பிறகு ஒரு பெண் மட்டும் அவரிடமே தங்கி விட்டாள். அவளது அழகைச் சொல்லி முடியாது. சிரித்துச் சிரித்துப் பேசி ஸ்ரீதரனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டாள் அந்தச் சிறுமி. குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டு, ''அம்மா, உன் பெயர் என்னம்மா?'' என்று வினவினார் ஸ்ரீதரபட்டர்.

அந்தச் சிறுமி அதற்குப் பதில் சொல்லவில்லை. செல்லமாக அவர் கன்னத்தைத் தட்டினாள். ''மாமா, இன்னும் நீங்கள் சாப்பிடவில்லையே. நீங்கள் சாப்பிட்டால்தான் நான் என் பெயரைச் சொல்வேன்'' என்றாள் அவள். ஸ்ரீதரபட்டரின் கண்களுக்கு அந்தப் பெண் ஜகதாம்பிகையாகத் தோன்றினாள். ''அம்மா, உன் கையினால் எனக்கு ஆகாரம் கொடுத்தால் தான் நான் இன்று சாப்பிடப் போகிறேன்'' என்றார் அவர். ''ஓ, தருகிறேனே'' என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டே, பூஜையறைக்குத்

தாவியோடி, அங்கிருந்த நைவேத்தியத்தைக் கொண்டு வந்து பட்டருக்கு அன்புடன் ஊட்டினுள் அந்தச் சிறுமி. அவர் புளகிதம் அடைந்தார்.

சிறுமி விடை பெற்றுச் சென்றதும் அவளைப் பின்தொடர்ந்து சென்ருர் ஸ்ரீதர பட்டர். குகையின் வாயிலை நோக்கி ஓடிய அப் பெண், ''மாமா, இந்தப் பாதையை நீங்கள் சுத்தம் செய்யக் கூடாதா? பக்தர்கள் தேவியைத் தரிசித்து அருள் பெற உதவக் கூடாதா?'' என்று கேட்டுக் கொண்டே குகைக்குள் சென்று மறைந்து விட்டாள். ஸ்ரீதர பட்டர் தேவியின் கட்டளைக் கிணங்க, குகைக் கோயிலுக்குப் போகும் பாதையைச் செப்பனிட்டு, அன்று முதல் ஆலயத்திலுள்ள தேவி வடிவங்களுக்கு பூஜை செய்யும் பணியையும் ஏற்றுக்கொண்டார். இன்று கூட அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தான் அங்கு பூஜை செய்து வருவதாகக் கூறப்படுகிறது. எனவேதான் இவர்கள், கருவறையை மாற்றி அமைக்கக் கூடாது என்றும், அப்படிச் செய்தால் புனிதமும் சாந்நித்தியமும் கெட்டுவிடும் என்றும் கூறுகிருர்கள்.

இயற்கை அன்னை எழிலாட்சி புரிவதால் சொர்க்கபுரியாகத் திகழும் காஷ்மீர்ப் பகுதியில், அன்னை பராசக்தி ஸ்ரீ வைஷ்ணவி தேவியாக அருளாட்சி புரிந்து வருகிருள். பாரதத்தின் வட பகுதியில் எழுந்தருளியிருக்கும் அந்த தேவி, ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகளின் தவ வலிமையாலும் யோக சித்தியாலும், தென்னகத்தில், சென்னையை அடுத்த வட திருமுல்லைவாயிலில் திருக்கோயில் கொண்டு பக்த கோடிகளுக்குத் திருவருள் வழங்கி வருகிருள்.

மயிலாப்பூரில் தமது இல்லத்தில், மகிழ மரத்தடியில் கோயில் கொண்டிருந்த 'லட்சுமி தேவி'யைப் பார்த்து வள்ளிமலை சுவாமிகள், ''வைஷ்ணவி தேவி மிக அழகாக இருக்கிருள்'' என்று கூறிய பிறகே வைஷ்ணவியைப் பற்றி பார்த்தசாரதி முதன் முறையாகக் கேள்விப்பட்டார். காஷ்மீர்ப் பகுதியில் வைஷ்ணவி தேவிக்கு ஆலயம் ஒன்று இருப்பதை அப்போதுதான் அறிந்தார்.

ஜம்முவிலிருந்து சுமார் முப்பது மைல் தொலைவில் 'திரிகூட மலை' இருக்கிறது. அதைச் சுற்றி பாணகங்கை என்ற நதி ஓடுகிறது. தேவி பாணம் தொடுத்ததனுல் உண்டான நதியென்பதால் அதற்கு அப் பெயர் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.

மலையடிவாரத்தில் 'கட்ரா' என்ற சிற்றூர் இருக்கிறது. பனி மலையின் பின்னணியில், பசுமையான அரங்கில், அழகு தேவதை அற்புத நடம் புரியும் அப் பகுதி, குங்குமப்பூ வயல்களும் தேவதாரு மரங்கள் அடங்கிய சோலைகளும் நிறைந்து ரம்மியமாகக் காட்சியளிக்கிறது. அங்கு மின்சார வசதிகளும், தங்குவதற்கான இட வசதிகளும் இருக்கின்றன. ஊரின் மத்தியில் புவனேச்வரிக்கு ஓர் அழகிய ஆலயமும் இருக்கிறது. மலையேறி வைஷ்ணவியைத் தரிசிக்கச் செல்பவர்கள் இந்த ஊரிலிருந்துதான் தங்கள் பயணத்தைத் தொடங்க வேண்டும். இங்கிருந்து வைஷ்ணவி ஆலயக் குகை சுமார் பத்து மைல் தொலைவில் இருக்கிறது.


'கட்ரா'வின் அருகில் ஓடும் பாண கங்கையில் புனித நீராடி விட்டு, தேவி பக்தர்கள் கூட்டம் கூட்டமாக மலேயேறிச் செல்லும் காட்சியைப் பார்ப்பதே பெரும் புண்ணியம்! நடந்து செல்ல முடியாதவர்களுக்கு டோலிகளும் கோவேரிக் கழுதைகளும் இருக்கின்றன. சாமான்களைச் சுமந்து செல்லக் கூலியாட்கள் இருக்கின்றனர்.

கட்ராவிலிருந்து ஒன்றரை மைல் தொலேவில் ஒரு சாவடி இருக்கிறது. அங்குள்ள ஒரு மண்டபத்தில் சரண பாதுகை வைக்கப் பட்டிருக்கிறது. யாத்திரிகர்கள் அதைத் தரிசித்து, வழிபட்டு விட்டு, தங்கள் பயணத்தைத் தொடருகிருர்கள்.

அங்கிருந்து இரண்டே கால் மைல் சென்ருல், 4700 அடி உயரத்தில் 'ஆத்குமாரி' என்ற ஓர் இடத்தை அடையலாம். அங்கும் ஒரு சாவடி இருக்கிறது. அங்கு கோதுமை ரொட்டி, பால், பழம் முதலியவை கிடைக்கும். அவற்றை உண்டு விட்டு, தேவையானுல் இரவு தங்கி உறங்கி விட்டு, மறுநாள் விடியற் காலேயில் மீண்டும் பயணத்தைத் தொடரலாம்.

இதற்குப் பிறகு மலேயேற்றம் சற்று கடினமாக இருக்கும். செல்லும் வழியில் 'கர்மஜுன்' என்ற ஒரு குகை வருகிறது. அதில் நுழைந்து செல்லும்போது நம் கர்ம வினேகளெல்லாம் தொலேந்து விடுவதாக ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. எனவே, அந்தக் குகையை 'மோட்சத் துவாரா'—அதாவது 'சொர்க்க வாசல்' என்று அழைக்கிருர்கள். இதற்கு அடுத்தாற்போல் 'ஹாத்தி மத்தா' (யானேயின் சிரசு) என்ற இடத்தைக் கடந்து செல்கிருேம். அந்தப் பாறை, யானேயின் தலேயைப் போன்று அமைந்திருப்பதால் அந்தப் பெயர் வந்தது. அடுத்து 'பைரவ காடி' என்ற இடம் வருகிறது. அது தேவி, வெட்டி வீழ்த்திய பைரவ அரக்கனின் தலே விழுந்த இடம் என்று சொல்லப் படுகிறது. அதன் அருகில் 'சஜ்ஜி சேத்' என்ற சிகரம் உள்ளது. அதன் உயரம் சுமார் 7200 அடி. இதுதான் இந்தப் பயணத்திலேயே மிக உயர்ந்த சிகரம். குளுமையும் மணமும் நிறைந்த சோலேகள் மண்டிக் கிடக்கும் பகுதி இது. இங்கிருந்து கீழே பார்த்தால் வெள்ளிக்கோடாக சினுப் நதி ஊர்ந்து செல்வது தெரியும். சிகரத்திலிருந்து இறங்கி வேறு பாதையில் முக்கால் மைல் சென்ருல் பைரவ காடியை அடையலாம். குகை ஆலயத்திற்குப் போகும் போது இங்கு ஒருவரும் செல்லுவதில்லே. திரும்பும் போதுதான் அங்கு போய் விட்டு வருகிருர்கள்.

உயர்ந்த சிகரத்திலிருந்து மீண்டும் கீழே இறங்குகிருேம். சற்று நடந்தால் ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களடர்ந்த வனப் பிரதேசத்தில் பிரவேசிக்கிருேம். அங்கு தெய்விகப் பேரெழிலோடு, நெஞ்சையள்ளும் அமைதியும் அருள் மாட்சியும் கோலோச்சுகின்றன. வைகுண்டமோ, கைலாசமோ என்ற சந்தேகம் தோன்றி விடுகிறது. பராசக்தி அங்கு பிரசன்னமாகி யிருப்பதை உள்ளத்தால் உணரலாம். வைஷ்ணவி தேவி பாலா உருவத்தில் அந்த வனப் பகுதியில் விளேயாடிக் கொண்டிருப்பதாகவும், யோக சித்தர்களின் கண்களுக்கு மட்டும் அவள் தரிசனம் தருவதாகவும் அங்குள்ள மலேவாசிகள் திடமாக நம்புகிருர்கள்.



ஜம்மு-காஷ்மீர் வைஷ்ணவி ஆலயத்தின் கருவறை

உள்ளத்தில் அருள் வெள்ளம் பொங்க, இருள் கவிந்த அந்த வனப் பிரதேசத்தைக் கடந்து ஒன்றரை மைல் நடந்தால் ஒளி கிடைக்கிறது. அன்னையின் கோயில் கோபுரம் நமக்குத் தரிசனம் ஆகிறது. பயணம் முடிந்த மகிழ்ச்சியிலும், தேவியைக் கண்ட உணர்ச்சிப் பெருக்கிலும், 'ஜெய் மாதா' 'ஜெய்மாதா' என்று பக்தர்கள் உரக்க முழக்கமிடுகிறார்கள்.

ஆலயக் குகைக்கு முன்னால் 'வைஷ்ணவி தர்பார்' என்றழைக்கப்படும் பெரிய மேடை இருக்கிறது. இங்கு இரண்டாயிரம் யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியான சத்திரம் கட்டி வைத்திருக்கிறார்கள். பக்தர்கள் இங்கு தங்கி பஜனை செய்கிறார்கள். பக்திப் பாடல்கள் பாடுகிறார்கள். கோலாட்டமும் கும்மியுமாகக் கோலாகலமாக ஆடிப் பாடி மகிழ்கிறார்கள். 'வைஷ்ணவி மாதாகி ஜெய்' என்ற ஆவேச முழக்கங்கள் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. இந்த மேடையிலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

தேவி, கோயில் கொண்டிருக்கும் குகையின் நுழை வாயில் மிகவும் குறுகியதாக இருக்கிறது. அந்த வாயிலை அடைத்தாற் போல் இருக்கும் கற்பாறையின் மீது ஏறி, குனிந்து தவழ்ந்து குகைக்குள்ளே செல்ல வேண்டும். அந்த இடத்தில், திருவானைக்கா ஜம்புகேசுவரர் கருவறையில் இருப்பது போல் ஊற்றிலிருந்து பெருகும் நீர் ஓடிக் கொண்டிருக்கிறது. அதைச் 'சரண கங்கை' என்று கூறுகிறார்கள். தேவியரின் பாதங்களைத் தழுவி ஓடும் இப் புனித நீர் 'ஐஸ்' போல் ஜில்லென்றிருக்கும். இப்படியே நூறு அடி தூரம் சென்றால், குகைச் சுவரோடு ஒட்டினாற்போல் உள்ள சற்று உயர்ந்த மேடையில் லிங்கவடிவமுள்ள மூன்று தேவியரைத் தரிசிக்கலாம்.


'பிண்டி' என்று அழைக்கப்படும் அம் மூன்று சுயம்பு மூர்த்திகளையும் மகா காளியாகவும், மகாலட்சுமியாகவும், மகா சரஸ்வதியாகவும் மக்கள் வழிபடுகிறார்கள். மத்தியில் இருக்கும் மகாலட்சுமிக்குத் தங்கக் கவசமும் இரு புறங்களிலுமுள்ள மகா காளிக்கும் மகா சரஸ்வதிக்கும் வெள்ளிக் கவசங்களும் அணிவிக்கப்பட்டிருக்கின்றன.

இது மிகவும் சிறிய இடம். சேர்ந்தாற்போல் பத்துப் பேருக்கு மேல் அங்கு நிற்க முடியாது. 'க்யூ' வரிசையில் நின்று ஒவ்வொருவராகத் தரிசித்து விட்டு வருகிறார்கள்.


ஸ்ரீ வைஷ்ணவி ஆலய குகைக்குச் சென்று விட்டுத் திரும்புகிறவர்கள் கட்ராவிலுள்ள புவனேச்வரி ஆலயத்தில் கன்னிகா பூஜை செய்த பிறகு தான் தங்கள் யாத்திரை முடிந்ததாகக் கருதுகிறார்கள்.



வைஷ்ணவி தர்பார்



குகைக்குச் செல்லும் வழி



குகை ஆலயத்தின் வாயில்

நாட்டுப் பிரிவினைக்கு முன், டில்லி, பஞ்சாப், எல்லை மாகாணம் முதலிய இடங்களிலிருந்து மட்டும் பக்தர்கள் இங்கு வருவது வழக்கமாக இருந்தது. இப்போதெல்லாம் பாரதத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆண்டு முழுவதும் பெருவாரியான மக்கள் வந்து தரிசித்து விட்டுப் போகிறார்கள்.

அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை யாத்திரை அதிகக் கஷ்டமில்லாமல் இருக்கும்.

வைஷ்ணவி தேவியைப் பற்றி ஜம்மு பிரதேசத்தில் ஒரு கர்ண பரம்பரைக் கதை வழங்கப்படுகிறது. ரத்னாகர்சாகர் என்பவருக்கு வைஷ்ணவி தேவி பெண்ணாகப் பிறந்து, தென்னாட்டுக்குப் போய் வசிக்கத் தொடங்கினாள். அங்கு ஸ்ரீராமனைக் கண்டு, மனத்தைப் பறி கொடுத்து, அவனுடன் தங்க விருப்பம் கொண்டாள். ராமனோ, ''நீ இங்கேயே இரு. நான் சீதையை மீட்டுக் கொண்டு இப் பக்கமாக வருவேன். அப்போது நீ என்னை அடையாளம் கண்டு கொண்டால், பின்னர் என்னுடன் வரலாம்'' என்று கூறிச் சென்றார். திரும்பி வரும் போது ராமன் கிழவனாக உருக்கொண்டு அப் பக்கம் வரவே, தேவியால் அவனை அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர், ராமனே கிழவனின் உருவில் வந்தான் என்று தெரிந்ததும் தன் அறியாமைக்காக மிக வருந்தினாள் தேவி. அப்போது ராமன், தேவியைப் பார்த்து, ''நீ என்னைப் போற்றி வந்தால் கலியுகத்தில் கல்கி அவதாரம் எடுத்து வரும் போது உன்னை என் சக்தியாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்று வாக்குத் தந்தான். ''வட இந்தியாவில் மூன்று சிகரங்களை உடைய திரிகூட மலையில் உள்ள குகையில் மூன்று மகா சக்திகள் இருக்கின்றன. அங்கு சென்று நீ தவம் செய்'' என்று ராமன், தேவியிடம் கூறியதற்கு இணங்க. வைஷ்ணவி, யோகீச்வரியாய் அங்கு எழுந்தருளி யிருப்பதாகவும் மக்கள் நம்புகிறார்கள். கேட்ட வரத்தை உடனே வழங்கும் ஆதிபராசக்தியாகவே அவளை வழிபடுகிறார்கள்.

அம்பிகையின் நூற்றெட்டுப் பெயர்களில் 'வைஷ்ணவி' என்பதும் ஒன்று. தேவியைப் பற்றிய குறிப்புக்கள் மார்க்கண்டேய புராணத்திலும்,

வராக புராணத்திலும், துர்க்கா ஸப்தசதியிலும் காணப்படுகின்றன. அரக்கர்களிடமிருந்து தேவர்களைக் காத்த மகா சக்தியாகவே வைஷ்ணவி வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். மகிஷாசுரனை அழித்தவளாக மார்க்கண்டேய புராணமும், அந்தகன் என்ற அசுரனைக் கொன்றவளாக வராக புராணமும், சும்ப, நிசும்பர்களை ஒழித்துக் கட்டியவளாக துர்க்கா ஸப்த சதியும் கூறுகின்றன. சில நாடோடிப் பாடல்களில் கருணை பொழியும் குமரி அன்னையாக அவள் குறிப்பிடப்பட்டிருக்கிறாள்.

வட திருமுல்லைவாயிலிலுள்ள வைஷ்ணவி தேவியின் முன் நிற்கும் போது, ஆழ்ந்த, ஆனந்த மயமான அமைதி நம்மை ஆட்கொள்கிறது. அம்பிகை ஜடா மகுடம் தரித்து, விரிசடையுடன் இமைகளை மூடி தவக் கோலத்தில் நின்றிருக்கிறாள். தன் குழந்தைகள் வாழ, அன்னை மோனத் தவம் இருக்கும் மோகன வடிவை, சிந்தையைத் தூய்மையாக்கும் சிருங்கார வதனத்தை, கருத்தோடு கலந்து விடும் அந்தக் கம்பீர எழிலைப் பார்த்துப் பார்த்து, பருகிப் பருகி, புல்லரிக்க, புளகிதம் ததும்ப, புண்ணியம் சேர, அருள் சூழலில் நம்மை மறந்து நின்று விடுகிறோம்.